Registered as a News Paper

பொழிவு -15
குவிப்பு -06
பக்கங்கள் - 16
விலை ரூபா 40.00
யூன் 2012
(ISSN 1800-2641)

# மன்னா

MANNA மன்னார் மறைமாவட்டத்தின் தமிழ் கத்தோலிக்க மாதாந்தப் பத்திரிகை மன்னா

THE TAMIL CATHOLIC MONTHLY PUBLISHED BY THE DIOCESE OF MANNAR - Social Communication Centre, Manna Paper Office, St.Joseph's Road, Mannar, Sri Lanka.
Telephone No : 023-2250789/ 023 - 3233276 / 0777420811 Fax No - 023-2250789, E. Mail : nesanmnr@gmail.com.

# குருக்கள் துறவியரின் அன்றாட வாழ்க்கையில் செபம் முக்கிய இடத்தை வகிக்க வேண்டும்!

## குடும்ப மாநாட்டிற்கு வந்திருந்த குருக்கள் துறவியர் மத்தியில் திருத்தந்தை 16ஆம் பெனடிக்ற்



செபத்தின் வழியாக கிறிஸ்துவின்மீது அன்புகொண்டு வாழ்வது அனைத்துக் கிறிஸ்தவர்களுக்கும் முக்கியம் என்றாலும், கன்னிமை வாழ்வை ஏற்றுள்ள குருக்களுக்கும், துறவிகளுக்கும் இது தனிப்பட்ட விதத்தில் இன்றியமையாதது என திருத்தந்தை 16ஆம் பெனடிக்ற் கூறினார். ஏழாவது குடும்ப மாநாட்டை சிறப்பிப்பதற்காக இத்தாலியின் மிலான் நகரத்திற்குச் சென்ற திருத்தந்தை, அருட்பணியாளர்கள் மற்றும் இருபால் துறவிகளை மிலான் பேராலயத்தில் யூன் 2ஆம் திகதி காலை சந்தித்து உரையாற்றியபோது இவ்வாறு கூறினார். அருட்பணியாளர்கள் மற்றும் இருபால் துறவிகளின் அன்றாட வாழ்க்கையில் செபத்தின் முக்கியத்துவத்தை திருத்தந்தை அங்கு வலியுறுத்தினார் .

(தொடர்ச்சி 14ஆம் பக்கம்)

## ஜனாதிபதி திருத்தந்தை சந்திப்பு



இலங்கை ஜனாதிபதி கௌரவ மகிந்த ராஜபக்ஷ அவர்கள் யூன் மாதம் 15ஆம் திகதி அன்று திருத்தந்தை 16ஆம் பெனடிக்ட் அவர்களை வத்திக்கானில் சந்தித்தார். இவருடன் வெளியுறவு அமைச்சர், உதவி அமைச்சர், இரண்டு பெண்கள் கொண்ட குழுவினரும் திருத்தந்தையைச் சந்தித்தனர்.

இச்சந்திப்பின்போது இலங்கையின் ஒப்புரவுக்கு சர்வதேச சமூகம் இணைந்து தீர்வு காணும் என்ற நம்பிக்கையை திருத்தந்தை வெளியிட்டார். அத்தோடு நீண்ட காலமாக உள்நாட்டுப் போரால் பாதிக்கப்பட்ட அனைத்து மக்களின் நியாயமான ஏக்கங்களுக்கு நியாயமான தீர்வு காணப்படும் என்ற தனது நம்பிக்கையையும் திருத்தந்தை வெளிப்படுத்தினார்.

அதன்பின் இக்குழுவினர் திருப்பீடச் செயலர் கர்தினால் தர்சிசியோ பெர்த்தோனே மற்றும் திருப்பீட நாடுகளுடனான உறவுகளின் செயலர் பேராயர் தொமினிக் மம்பர்தி ஆகியோரைச் சந்தித்து உரையாடினர். நாட்டின் சமூக, பொருளாதார முன்னேற்றம், ஒப்புரவு நடவடிக்கைகள் தொடர்பாக இச்சந்திப்பில் கலந்துரையாடப்பட்டது.

## உலகிலேயே அதிக அறிவுத்திறன் கொண்டிருக்கும் தமிழ் நாட்டுச் சிறுமி

1Q எனப்படும் அறிவுத்திறன் அளவில், உலகிலேயே மிக அதிக அளவுத் திறன் கொண்டிருப்பவர் ஒரு தமிழ் நாட்டுச் சிறுமி என்று ஊடகங்கள் கூறியுள்ளன.

திருநெல்வேலிக்கு அருகில் உள்ள பாளையம் - கோட்டையில் வாழும் விஷாலினி என்ற 11 வயது சிறுமி உலகிலேயே மிக அதிக அளவு அறிவுத் திறன் பெற்றவர் என்று கூறப்படுகிறார்.

இவருக்கு தற்போது 11 வயதே நிறைந்துள்ளதால் இவரது உலக சாதனை தற்போது கின்னஸ் சாதனைப் பட்டியலில் இடம்பெறாது என்றும் இவருக்கு 14 வயதாகும்போதே இந்தச் சாதனை இடம்பெறும் என்றும் ஊடகங்கள் கூறுகின்றன.

எட்டாம் வகுப்பில் பயிலும் விஷாலினி கணனியில் அபூர்வ அறிவுபெற்றவராய் இருக்கிறார் இவரது அறிவுத்திறனால், பல பொறியியல் கல்லூரி மாணவர்களுக்கு சொற்பொழிவுகள் ஆற்றி வருகிறார்.

(தொடர்ச்சி 14ஆம் பக்கம்)

## உலங்குவானூர்தி மூலம் வருகை வந்து ஆயரைச் சந்தித்த அமெரிக்கத் தூதுவர்



இலங்கையில் தனது பணியை நிறைவுசெய்துகொண்டு தாயகம் திரும்பும் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் பற்றிசியா ஏ புற்றனிஸ் அவர்கள் கடந்த யூன் மாதம் 13ஆம் திகதி மன்னாருக்கு வருகை தந்து மன்னார் ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை அவர்களைச் சந்தித்தார். இச்சந்திப்பு ஒரு மணித்தியாளம் இடம்பெற்றது.

(தொடர்ச்சி 14ஆம் பக்கம்)

## சர்வதேசப் போட்டியில் மன்னார் நடுவர்கள்



திரு. பி. ஞானராஜ்



திரு ஜூட் பிகிறாடோ

15வது ஆசிய கனிஸ்ட மெய்வல்லுனர் விளையாட்டுப் போட்டியானது கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் யூன் மாதம் 09ம் திகதி முதல் 12ம் திகதி வரை நடைபெற்றது. இதில் 33 ஆசிய நாடுகளைச் சேர்ந்த சுமார் 700 போட்டியாளர்கள் பங்குபற்றினர். இப்போட்டியில் சகல ஆசிய நாடுகளிலிருந்தும் சுமார் 150 நடுவர்கள் மத்தியஸ்தம் வகித்தார்கள். இதில் இலங்கை சார்பில் 16 தமிழ் மொழி பேசும் நடுவர்கள் மத்தியஸ்தம் வகித்தார்கள்.

இதில் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த திரு ஜூட் பிகிறாடோ (தலைவர், மன்னார் மாவட்ட மெய்வல்லுனர் சங்கம்) அவர்களும், திரு. பி. ஞானராஜ் (செயலாளர், மன்னார் மாவட்ட மெய்வல்லுனர் சங்கம்) அவர்களும் மத்தியஸ்தம் வகித்து வட மாகாணத்திற்கும், மன்னார் மாவட்டத்திற்கும், மன்னார் கல்வி வலையத்திற்கும் பெருமை சேர்த்துக் கொடுத்துள்ளனர்.

(தொடர்ச்சி 15ஆம் பக்கம்)

மன்னார் இணையம்
மன்னார் செய்திகளை உடனுக்குடன் அறிந்துகொள்ள
மன்னாருக்கான தனித்துவமான செய்தி இணையத்தளத்தைப்
பார்வையிடுங்கள் : www.newmannar.com


## கருணை மழை பொழியும் கானகச் செல்வியாம் மடு அன்னையின் ஆடித் திருவிழா



மருதமடுச் செபமாலை மாதாவே எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்!

மடுத்திருப்பதியின் ஆடித்திருவிழா கடந்த யூன் மாதம் 23ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி உள்ளது. திருவிழா யூலை மாதம் 2ஆம் திகதி இடம்பெறும்.

## தாயக மக்களின் மதச் சுதந்திரத்தை வலியுறுத்தி அமெரிக்க கத்தோலிக்க உயர் தேவாலயத்தில் தமிழர்களின் நீதிக்கான வேண்டுதல்




உலகப் பிரசித்திபெற்ற கத்தோலிக்க தேவாலயங்களில் ஒன்றான அமெரிக்காவின் தேசியத் திருத்தலமான மாசில்லா உற்பவ உயர் தேவாலயத்தில் (Basilica of the National Shrine of the immaculate Conception) தமிழர்களின் நீதிக்கான வேண்டுதல் பிரார்த்தனை நிகழ்வு கடந்த யூன் மாதம் 17ஆம் திகதி இடம்பெற்றது.

நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் ஏற்பாட்டில், உலகத் தமிழர்கள் தேசங்களெங்கும் முன்னெடுக்கப்பட்டுவரும் சர்வமத வழிபாட்டு விழிப்புணர்வுப் போராட்டத்தின் ஓர் அங்கமாக இத்தேவாலயத்தில் தமிழர்களின் நீதிக்கான வேண்டுதல் பிரார்த்தனை இடம்பெற்றது.

தமிழீழத் தாயகத்திலும், சிறீலங்காவிலும் இந்து, இஸ்லாமிய, கிறிஸ்தவ மக்களின் மதச் சுதந்திரத்திற்கும் வழிபாட்டு உரிமைக்கும் எதிராக சிங்கள பௌத்த இனவாதிகளினால் கட்டவிழ்த்துவிடப்பட்டுவரும் வன்முறைகளையும் அத்துமீறல்களையும் கவனத்தில் கொண்டு இந்த சர்வமத வழிபாட்டு ஒன்றுகூடல்கள் இடம்பெறுகின்றன.

(தொடர்ச்சி 15ஆம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனப்பொழிவு
பதிப்பாசிரியர் பகர்வது
# மன்னா

## மதங்களின் தோல்வியா? மனிதர்களின் தோல்வியா?

உலகத்திலே இருக்கக்கூடிய நான்கு உயர்ந்த மதங்களைக் கொண்டது இந்த நாடு. இப்படிப்பட்ட ஒரு நாட்டில்தான் வன்முறைகளும், அநீதிகளும், பாரபட்சங்களும் இன்றுவரை தொடர்கதையாக உள்ளன. இந்த மதங்களின் போதனைகளும், படிப்பினைகளும் தோற்றுப்போய்விட்டனவா என்ற கேள்வி இன்று எழுகின்றது. நிச்சயமாக இது மதங்களின் தோல்வி அல்ல; மாறாக மதங்களைப் பின்பற்றுகின்றவர்களின் தோல்விதான். இன்று மதங்களுக்கிடையில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைகளால் – குறிப்பாக சிறுபான்மை மதங்கள் எதிர்கொள்ளும் அச்சுறுத்தல்கள் போன்றவற்றால் – இந்த நாட்டில் மதவாதம் தலைதூக்கி உள்ளதோ என்ற அச்சம், ஐயம், ஆதங்கம் நல்மனம் கொண்ட அனைவர் மத்தியிலும் ஏற்பட்டுள்ளது. இப்படியான ஒரு சூழ்நிலையில் மதத்தலைவர்கள் மற்றும் சமூகத் தலைவர்களாகிய நாம் நமது வாழ்வை, நமது செயற்பாடுகளை மீள்பரிசீலனை செய்யவேண்டியவர்களாக, சுய விமர்சனத்திற்கு உள்ளாக்கவேண்டியவர்களாக உள்ளோம்.

இன்று யுத்தம் முடிவடைந்துவிட்டது என்று சொல்லப்பட்டாலும் யுத்தத்தின் சத்தங்கள் மட்டும்தான் இன்று இல்லை. துப்பாக்கி வேட்டுக்கள் இன்று ஓய்ந்துள்ளன. ஆனால் இன்னமும் ஓர் யுத்தம் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அதுதான் உள்ளார்ந்த யுத்தம், மனித மனங்களில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் யுத்தம். இந்த யுத்தத்தை நாம் எப்படி? எப்போது? நிறுத்தப்போகின்றோம்? எரிமலை ஒன்றை வெளியிலிருந்து பார்த்தால் அது அமைதியாக, சாதாரணமாகவே நமக்குத் தெரியும். ஆனால் அது உள்ளே கனன்றுகொண்டிருக்கும்; குமுறிக்கொண்டிருக்கும். இப்படிப்பட்ட ஒரு நிலையில்தான் இன்று இந்த நாடு இருக்கின்றது; இந்த நாட்டின் மதங்கள், இனங்கள் இருக்கின்றன; தனி மனிதர்கள் இருக்கின்றனர்

"உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின் வாக்கினிலே தெளிவுண்டாகும்." என்று பாடினான் மகாகவி பாரதி. இதைத்தான் இயேசுபெருமானும் சொன்னார், "உள்ளத்தின் நிறைவிலிருந்தே வாய் பேசும்" என்று. சமாதானம் என்பது வெளியிலிருந்து வருவதல்ல. அது உள்ளிருந்து வருவது; உள்ளத்திலிருந்து வருவது! உள்ளத்தில் எது இருக்கின்றதோ அதுவே உதட்டிலும் வெளிப்படும். அதுவே செயல்களிலும் எதிரொலிக்கும்.

யுத்தம் முடிவடைந்து மூன்று வருடங்களாகியும் உண்மையான சமாதானமும், ஒப்புரவும் இன்னும் இந்த நாட்டில் ஏன் ஏற்படவில்லை? யுத்தம் முடிந்த கையோடு நாம் என்ன நினைத்தோம்? இனி எல்லாம் சரியாகிவிடும், சமாதானம் சாத்தியமாகிவிடும் என்று குதூகலித்தோம். ஆனால் நமது கனவுகள் இன்றுவரை நனவாகவில்லை. இது கவலை அளிக்கின்ற, ஏமாற்றம் அளிக்கின்ற ஒரு சூழ்நிலை ஆகும்.

இன்று எரியும் பிரச்சினைகள் பல நம் அனைவரின் கவனத்தை வெகுவாக ஈர்த்துக்கொண்டிருக்கின்றன. யுத்தத்தால் நேரடியாகப் பாதிக்கப்பட்டவர்களின் புனர்வாழ்வு, நிவாரணம், மீள்குடியேற்றம் போன்றவை அவசரமாக, அவசியமாக தீர்க்கப்படவேண்டிய பிரச்சினைகளாகும். கடத்தப்பட்டவர்களின் கதி, விசாரணை இன்றி தொடர்ந்து சிறைகளில் வாடும் அரசியல் கைதிகளின் நிலை போன்றவை நமது ஆழ்ந்த அக்கறைக்குரிய விடயங்களாக உள்ளன. போருக்குப் பின்னர் ஏற்பட்டுள்ள சுமுகமான சூழ்நிலையில் இடம்பெற்றுவரும் கலாச்சார சீரழிவு, சிறுவர் துஷ்பிரயோகம் போன்றவை மிகவும் வேதனை அளிக்கும் விடயங்களாக விளங்குகின்றன. எல்லாவற்றிற்கும் மேலாக தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைக்கான அரசியல் தீர்வு எட்டாக் கனியாக இருப்பது ஏமாற்றம் அளிக்கும் நிலையாக உள்ளது. இவ்விடயங்கள் மட்டில் இந்த நாட்டில் இருக்கக்கூடிய சமய, சமூகத் தலைவர்களின் கடமை, பொறுப்பு என்ன என்ற கேள்வி எழுகின்றது. வெறுமனே கைகட்டி வாய் பொத்தி நடப்பவற்றை வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கப்போகின்றோமா? அல்லது நாம் அனைவரும் ஒன்றிணைந்து ஒரு வலுவான சக்தியாக மாறி இந்நிலைமைகளை மாற்றி அமைக்க முயற்சிசெய்யப்போகின்றோமா? இந்தப்பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படாதவிடத்து இன்னுமொரு யுத்த சூழ்நிலை இந்த நாட்டில் ஏற்படுவது தவிர்க்க முடியாததாகிவிடும்.

யுத்தம் முடிவடைந்தாலும் யுத்தத்தால் ஏற்பட்ட மனக்காயங்கள் இன்றுவரை எல்லா சமூகங்களிலும் உள்ளன. இம்மனக்காயங்களுக்கு யார் மருந்திடுவது? இவ்வாறான ஒரு சூழ்நிலையில் அனைத்து சமூகங்களையும் சார்ந்த மதத்தலைவர்களின் பங்களிப்பு மிக முக்கியமானதாகும். இந்தப் பணி காலத்தின் கட்டாயத்தேவையாகும்.

*மீண்டும் மறுமடலில் சந்திக்கும்வரை*
*அன்புடன், அருட்பணியாளர் தமிழ் நேசன்,*
*பதிப்பாசிரியர் - மன்னா*




### இனிய மன்னாவே வருக.........

மாதத்தில் ஒருமுறை தவறாமல் மலரும் மன்னாவே
உன் வரவிற்காய் வழிமேல் விழிவைத்து காத்திருக்கின்றேன்.
உன் அனைத்து ஆக்கங்களும் அருமை அருமை!
இன்னும் உன் பணி சிறக்க என் வாழ்த்துக்கள்.
என் இதயம் கனிந்த இனிய மன்னாவே வருக வருக....!

*விஜயதாஸ் நிதர்சிக்கா, செம்மண்தீவு, முருங்கன்.*

### விடியலின் சேவை வாழியவே!

எம்மைக் கவர்ந்த விடியலே!
மறக்க முடியாத தேடல் நீ
அருமையான பணி செய்கின்றாய்!
தோழமையுடன் கூடிய தொண்டினை
தொடர்ந்து நீ புரிகின்றாய்
பற்பல ஆக்கங்களைத் தாங்கி பறந்தே வந்திடுவாய்!
பொருளுடன்கூடிய பொன் மொழிகள் பொன்னானவையே!
தேனினும் இனிய கவிதை மொழிகள்
எம்மையும் கவிஞனாக்குகிறதே!
சிந்திக்கச் சில வரிகள் தந்து
நாம் சிந்தித்துச் செயற்படச் செய்கிறாய்!
உன் விடியலில் விதைக்கப்படும்
அனைத்து விதைகளும் பலன்தருமே!
நீ எம்மிடம் மீண்டும் வந்து சேர்ந்திட – நாம்
என்ன தவம் செய்தோமோ?
உன் சேவை எமக்கு என்றும் தேவை!

*ம. காமலின் சௌமியா குரூஸ், அரிப்பு, சிலாவத்துறை.*

### வியப்பின் பத்திரிகைக் குறியீடு!

வியப்பின் பத்திரிகைக் குறியீடாக 'உண்மைகள் உறங்குவதில்லை' என்ற தங்களின் மே மாத பத்திரிகை ஆசிரியத் தலையங்கம் அமைந்திருந்தது.

இந்நாட்டில் வாழும் கத்தோலிக்க மக்களை சிங்களவர், தமிழர் என்று கூறுபடுத்தி, வேறுபடுத்தி பிரித்தாளும் சூழ்ச்சியை அரசியல்வாதிகள் வெகு நாசூக்காக கையாண்டு பிரிவினை மனப்பான்மையை கத்தோலிக்க மக்களிடையேயும் தோற்றுவித்து வெற்றிபெற்றுள்ளனர். இதன் பின்விளைவையே 'கவலையளிக்கும் கர்தினாலின் நிலைப்பாடு' என்ற உபதலைப்பில் (அதே ஆசிரிய தலையங்கத்தில்) நீங்கள் சுட்டிக்காட்டியிருந்தீர்கள். கத்தோலிக்க மக்களின் கருத்தொருமித்த கவலையை தாங்கள் கவனமெடுத்து பதிவு செய்துகொண்டமை நூறு விழுக்காடு (100%) சரியானதொரு பத்திரிகைத் தர்மமேயாகும். ஏனென்றால் ஒரு நாட்டில் பத்திரிகைகள் ஏற்படுத்தும் தாக்கம் என்றென்றும் நிரந்தரமாக நிலைத்து நீடித்து நின்று பயன்தரும் என்பது யதார்த்தம்.

காலம் காலமாக நம் நாட்டில் வாழும் தமிழ் பேசும் மக்கள் உண்மை உறங்காது நீதி தூங்காது தர்மம் தோற்காது என்ற தாரக மந்திரத்தின்மீது தளரா நம்பிக்கை வைத்து வாழ்ந்து வந்துள்ளார்கள். "இலங்கைக்கு எதிரான அமெரிக்காவின் தீர்மானம் ஜெனீவா மனித உரிமைப் பேரவையில் பெரும்பான்மை பலம் கொண்டு வெற்றிபெற்றமை நல்மனம் கொண்ட அனைத்து மக்களையும் ஆறுதல்படுத்தும்" என்று தாங்கள் குறிப்பிட்டிருந்தமை எம்மை எல்லாம் ஆறுதல் படுத்துகிறது. - *யோ. சே. நவரெத்தினராசா, உயிலங்குளம்.*

## மன்னார் மறைமாவட்டம்

### திருவழிபாட்டு நாட்காட்டி – 2012

#### ஆடி

02 - மடுமாதா திருவிழா
03 - யாழ் ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையின் பெயர்கொண்ட தினம்.
05 - தூய மரியமாதா விழா - மாளிகைதிடல்.
06 - தூய செபமாலை அன்னை திருவிழா - பாலையடிப்புதுக்குளம், மன்னார் மறைமாவட்ட சமூகத் தொடர்பு அருட்பணி மைய தினம், மன்னார் ஆயர் பேராருட்திரு இராயப்பு யோசேப்பு ஆண்டகை மன்னார் ஆயராக நியமனம் பெற்ற தினம் (1992)
08 - தூய தோமையார் திருவிழா - கல்நாட்டி
10 - தூய ஆரோக்கிய அன்னை திருவிழா - நானாட்டான்.
- தூய மரியகொறட்டி திருவிழா - பண்டிவிரிச்சான்.
13 - தூய செபஸ்ரியார் திருவிழா - மருதமடு
14 - தூய வேளாங்கண்ணி சிற்றாலயம் - ஆதார வைத்தியசாலை
16 - தூய கார்மேல் அன்னை திருவிழா - ஆவணம், அளவக்கை, இளமருதங்குளம், பொற்கேணி,
- தூய கப்பலேந்தி மாதா திருவிழா - பெரிய நொச்சிக்குளம்
- தூய சிந்தாத்துரை மாதா திருவிழா - பறப்பாங்கண்டல்
21 - தூய குழந்தை யேசு திருவிழா - குழந்தையேசுபுரம்
25 - தூய இயாகப்பர் திருவிழா - பறப்பாங்கண்டல், சிறுநீலாசனை, விடத்தல்தீவு, கொக்குப்படையான், கட்டுக்காரன் குடியிருப்பு, முருங்கன் கமம், நறுவிலிக்குளம்.
26 - தூய அன்னம்மாள் திருவிழா - வங்காலை
29 - சுதேச குருக்கள் துறவியர் தினம். (காணிக்கைகள் ஆயர் இல்லத்திற்கு அனுப்பிவைக்கப்படும்.




## ஆன்மீகம் அறிவியலுக்கு அடிமையா?

*எஸ். றெக்ஸ், ஞானோதயம், மன்னார்*

அறிவியலின் வளர்ச்சிக்குள் அடங்கிப்போயுள்ள மனிதன் ஆழமான ஆன்மீகத்தின் அடிப்படைப் பண்புகளை தொலைத்து வருவது நிகழ்கால கண்ணாடியின் நிஜமான உண்மையாகும். இறுதிவரை உறுதி தளராமல் களமாடி, கல்வாரியில் காவியமாகிய இறை இயேசுவின் இறையியல் தோற்றுப்போய் கொண்டிருக்கின்றதா? என்ற கேள்வி இயல்பாகவே தோன்றி மறைகின்றது. ஓரங்கட்டப்பட்ட மக்களின் குரலாக, ஒடுக்க முற்பட்ட சக்திகளுக்கு சவாலாக இயேசுவின் ஆன்மீகம் அரங்கேற்றப்பட்டது. தாயான திருச்சபைக்காக தலை கொடுக்கவும் தயங்காத அப்போஸ்தலர்களின் ஆன்மீகம் வரலாற்றின் வரையறைகளுக்குள் சாதனை படைத்தது. அடிக்கப்பட்டு, அடைக்கப்பட்டு, அடிமையாக்கப்பட்ட மக்களின் ஆன்மீகம் அறிவியலுக்கு ஓர் சவாலாகத் திகழ்ந்தது.

இவ்வாறான, கிறிஸ்தவ ஆன்மீகம் இன்றைய நவீனத்துவத்துக்குள் தன்னுடைய புனிதத்துவத்தை தொலைத்து நிற்பது கவலைக்குரிய விடயமாகும். அறிவியல் என்பது உலகியலுக்குள் புதையுண்டு உருக்குலைந்த உருவங்களாக மாற்றம் பெறுவதாகும். ஆன்மீகம் என்பது இறையியலுக்குள் புதையுண்டு உருமாற்றம் பெற்ற ஆன்மாவோடு இறைவனில் சங்கமமாவதாகும். நாளுக்கு நாள் நாறிப்போய்க்கொண்டிருக்கும் நவீனத்துவ வாழ்வானது ஈற்றிலே இறைவனை நோக்கிப் பயணிக்கும் என்பது உண்மையாகும். மாற்றம் பெற்றுவரும் உலகில் ஆட்டம் காண முடியாத ஆன்மீகம் அவசிய தேவையாகும். திருப்பலிகளும், செபவழிபாடுகளும், ஆன்மீக நெறிப்படுத்தல்களும் வெறுமனே கடமைக்காக நிறைவேற்றப்படும் சடங்குகளாக மாற்றம் கண்டுள்ளன. வரலாற்றில் கிறிஸ்து நடத்திய முக்கிய போதனைகளுக்கு மீண்டும் உயிரோட்டம் கொடுத்து அது தரும் பாடத்தை மக்களுக்கு கொடுக்க வேண்டியது காலத்தின் தேவையாகும்.

ஏழாவது அறிவை நோக்கிய உலகியல் பயணத்திலே, மனிதனுக்கும் இறைவனுக்கும் இடையே நீண்டதொரு இடைவெளி காணப்படுகின்றது. பிறப்பு முதல் இறப்பு வரை மனிதனை இயக்கும் ஆன்மீக சிந்தனைகள் களவாடப்பட்ட கனவுகளாகவே காட்சி தருகின்றன. பூக்கடையான இறையியல் எண்ணங்கள் இன்றைய வேக மனிதர்களுக்கு சாக்கடையாக தோற்றமளிக்கின்றன. கொட்டிக் கிடக்கும் கொடுமைகளுக்குள் எட்டிப்பார்க்கும் ஆன்மீக ஏக்கங்களை ஏற்ற வழிமுறையில் எடுத்தாள்வது இன்னைய தேவையாகும். சிதைந்துபோன சிற்பங்களாக சிதறிப்போன இறைவனின் பிள்ளைகள் சில்லறை சிந்தனைகளுக்கு விடைகொடுத்து தொலைந்த ஆன்மீகத்தைத் தேடிப் பயணிக்க வேண்டும்.

அடக்குமுறை இதயங்களோடும், ஆடம்பரமான வாழ்க்கைப் போக்கோடும், அர்த்தமில்லா சிந்தனைகளோடும் ஆன்மீகத்தை அடைவதென்பது மிகப்பெரிய சவாலாகும். நமக்கு நாமே நாமம் போடுவதை விடுத்து மற்றவர்களுக்காக எங்கள்ளக் கையளிக்கும் கிறிஸ்துவின் ஆன்மீகத்தைப் பின்பற்ற அழைக்கப்படுகின்றோம். சாதி வெறியும், மதவெறியும் தலைவிரித்தாடும் எண்ணங்களோடும், சுயநலவட்டத்துக்குள் சுருங்கிபோன வாழ்வோடும், கிறிஸ்து - அவன் (அவள்) என்ற பேரவைக்குள் சுருண்டு கிடக்கும் எமக்கு, கிறிஸ்துவினுடைய ஆன்மீகம் மிகப்பெரிய சவால்தான். அறிவியல் வேள்வியில் ஆகுதியாகி, சாம்பலாகிப் போகும் எமக்கு இறையியல் காட்டும் இடுக்கமான வாயில் இறுதிவரை எட்டப்படாத கனிதான். பாவச் சகதியில் மூழ்கடிக்கப்பட்டு அதிலிருந்து மீளமுடியாது தத்தளிக்கும் எம்மவர் நிலை கண்டு, நாம் மௌனம் சாதிப்பதேன்?

(தொடர்ச்சி 14ஆம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மன்னார் ஆயருக்கு எதிரான அச்சுறுத்தல்

# மன்னார் ஆயரின் பாதுகாப்பை உறுதிப்படுத்த திருத்தந்தை தன் அதிகாரத்தைப் பயன்படுத்த வேண்டும்

## திருத்தந்தையிடம் ஜயலத் எம். பி. கோரிக்கை

மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இராயப்பு யோசேப்பு ஆண்டகைக்கு எதிராக விடுக்கப்பட்டுள்ள அச்சுறுத்தல் தொடர்பில் திருத்தந்தை பெனடிக்ட் அவர்கள் தலையீடு செய்ய வேண்டும் எனக் கோரி ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்த்தன கடிதம் மூலம் திருத்தந்தையிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, பேரினவாத அதிகார போக்கைக் கொண்ட இலங்கை அமைச்சர்களால் விடுக்கப்பட்டுள்ள விமர்சனங்களாலும், அரசின் கட்டுப்பாட்டில் உள்ள ஊடகங்களில் தெரிவிக்கப்பட்டுள்ள விமர்சனங்களாலும் மன்னார் ஆயர் மன அழுத்தத்திற்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்.

மன்னார் ஆயர் அரசுக்கு எதிராகச் செயற்பட்டதாகவும், தமிழ் - முஸ்லிம் உறவைக் குழப்பும் நோக்கில் செயற்பட்டதாகவும் அவர்மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. இவற்றுக்குப் புறம்பாக சுமார் 16 மாதங்களுக்கு முன்னர் ஆயர் அவர்கள் கற்றுக்கொண்ட பாடங்களுக்கான நல்லிணக்க ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியமளித்த விடயம் தொடர்பாகவும், ஜனாதிபதிக்கும், ஐ.நா. மனித உரிமைகள் சபைக்கும் அவரால் எழுதப்பட்ட கடிதம் தொடர்பாகவும் கடந்த மாதம் புலனாய்வு அதிகாரிகளால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

மன்னார் ஆயர் ஒருபோதும் தனிநாடு கோரவுமில்லை. ஆயுதப் போராட்டத்தை மீளப் புதுப்பிக்கவும் இல்லை. அவர் வடக்கு, கிழக்கில் உள்ள தமிழ் மக்களுக்காகவும், தமிழ் பேசும் மக்களுக்காகவும் தொடர்ந்து குரல் கொடுப்பவர். அதேபோல் சிங்கள மக்களுக்காகவும் குரல் கொடுப்பவர். தமிழ் மக்களின் பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத் தீர்வை ஏற்படுத்துவதற்கு தனிநாட்டு கோரிக்கையோ ஆயுதப் போராட்டமோ தீர்வாக அமையாது என்பதையே அவர் தொடர்ந்து வலியுறுத்தி வந்துள்ளார்.

இப்படியான ஒரு மதத்தலைவருக்கு எதிராகவே இத்தகைய பொய்யான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. மன்னார் மறைமாவட்ட ஆயர் எந்தவித இடையூறுகள் இன்றியும், பாதுகாப்புடனும் தனது பணியை தொடரவும் அதற்கான சூழலை ஏற்படுத்துவதற்கும் பாப்பரசர் தமது அதிகாரத்தை பயன்படுத்த வேண்டும் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்த்தன தனது கடிதத்தில் வேண்டுகோள் விடுத்துள்ளார்.



### ஆயருடன் ஒருமைப்பாட்டை வெளிப்படுத்தும்

## கனடிய தமிழர் தேசிய அவை

கனடியத் தமிழர் தேசிய அவை மன்னார் ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகையுடனான தனது ஒருமைப்பாட்டையும் ஆதரவையும் வெளிப்படுத்தி பிரார்த்தனைக் கூட்டம் ஒன்றை ஏற்பாடு செய்துள்ளது. யூன் மாதம் 9 ஆம் திகதி இல. 2723 சென். கிளையர் வீதியில் அமைந்துள்ள தேவாலயத்தில் இடம்பெற்ற இப்பிரார்த்தனைக் கூட்டத்தில் மன்னார் ஆயருக்கு ஆதரவு தெரிவித்து பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

### மாற்றாற்றல் உள்ளோர் புனர்வாழ்வு நிலையத்திற்கு

## முருங்கனில் புதிய கட்டிடம்



மன்னார் மாற்றாற்றல் உள்ளோர் புனர்வாழ்வுச் சங்கம் (MARDAP) இன்னுமொரு புதிய புனர்வாழ்வு நிலையத்தை முருங்கனில் திறந்துள்ளது. நானாட்டான் பிரதேச செயலாளர் திரு. ஏ. சி. சந்திரஜயா அவர்களின் பெரும் முயற்சியுடனும் அயராத ஒத்துழைப்புடனும் இந்நிலையத்திற்கான காணி பெறப்பெற்றமை குறிப்பிடத்தக்கது. கடந்த 26.04.2012 அன்று இந்நிலையத்தின் புதிய கட்டிடம் வெகு விமரிசையாக திறந்துவைக்கப்பட்டது. இதற்கான நிதி அனுசரணையை U.N.H.C.R. நிறுவனம் வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

இக்கட்டிடத்தை திருக்குடும்ப கன்னியர்களின் வடமாகாணத் தலைவி அருட்சகோதரி ஜோலன்ட் மத்தாயஸ் அவர்கள் திறந்துவைத்தார். U.N.H.C.R. உத்தியோகத்தர் சவறின் அவர்கள் நினைவுக் கல்லை திரைநீக்கம் செய்துவைத்தார். முருங்கன் பங்குத்தந்தை அருட்பணி. அருள்ராஜ் குரூஸ் கட்டிடத்தை ஆசீர்வதித்தார். மன்னார் குருமுதல்வரும் மார்டப் ஆளுனர் சபையின் தலைவருமான அருட்பணி. விக்ரர் சோசை அடிகளார் வரவேற்புரையும் தலைமையுரையும் வழங்கினார். கிறீஸ்தவ, இந்து, இஸ்லாம் ஆகிய மும்மத தலைவர்களின் ஆசியும் இடம்பெற்றது.

இந்நிலையம் நானாட்டான், முசலி, மடு, மாந்தை போன்ற இடங்களிலுள்ள விசேட தேவைக்குட்பட்டவர்களின் கல்வி, தொழில்பயிற்சி, மருத்துவ தேவை போன்றவற்றிற்கு உறுதுணையாக அமைய வேண்டும் என்ற நோக்கத்துடன் அமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

*தகவல்:- திருமதி. ஜெசி அரியரெட்ணம், மார்டப், மன்னார்.*

### இலங்கையில் இயேசு சபை ஆரம்பிக்கப்பட்டு

## 50 ஆண்டுகள் நிறைவு

புனித இஞ்ஞாசியாரால் ஆரம்பிக்கப்பட்ட இயேசு சபை உலக நாடுகளில் பணியாற்றி வருகின்றது. சுமார் 32,000 இயேசு சபை குருமார்கள் இன்று உள்ளனர். இலங்கையில் இச்சபை ஆரம்பிக்கப்பட்டு 50 ஆண்டுகள் பூர்த்தியானதையிட்டு நடைபெற்ற பொன்விழா தெரணியாகலை கொல்பிங் நிறுவனத்தில் விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. இலங்கை இயேசு சபைத் தலைவர் அருட்பணி. ஜெயராஜ் இராசையா இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார். விழா சம்பந்தமான அனைத்து ஏற்பாடுகளையும் மாலிபொட பங்குத்தந்தை அருட்தந்தை வின்சென்ட் றொசைரோ (இ.ச) மேற்கொண்டார்.

அரண்மனையில் வாழ்ந்த இஞ்ஞாசியார் எவ்வாறு உலக இன்பங்களைத் துறந்து மக்கள் பணியில் ஈடுபட்டு இயேசு சபை மூலம் புனிதரானார் என்ற வரலாற்றை அருட்தந்தை ஜெயராஜ் இராசையா தமது அருளுரையின்போது விளக்கினார்.

## இணைய உலகில் அமலமரித்தியாகிகள்

இப்போது இணைய உலகில் அமலமரித்தியாகிகளின் யாழ் மாகாணமும் கைகோர்த்து உள்ளது. மாகாண முதன்மைச் செய்திகள், பரந்துபட்ட பணி விடயங்கள், நிறுவுனரின் ஆன்மீக விழுதுகள், அமலமாரித்தியாகிகளின் விசேட பணிகள், அமலமரித் தியாகிகளின் முக்கிய நாட்கள், இல்லங்கள் பற்றிய விபரங்கள், அனைத்து அமலமரித்தியாகிகள் பற்றிய விபரங்கள், ஞாயிறு மறையுரைகள் போன்ற இன்னும் பல விடயங்களை அறிந்துகொள்ள கூகுள் தேடுதளத்திற்குச் சென்று பின்வரும் இணைத்தளங்களை நீங்கள் பார்வையிடலாம்.

ஆங்கில இணையத்தளம் www.omijaffna.com

தமிழ் இணையத்தளம் www.amalamarithiyakikal.com

## உயிலங்குளம் பங்கில் மகா ஞானவொடுக்கம்

உயிலங்குளம் பங்கில் மகா ஞானவொடுக்கம் யூன் 16ஆம் திகதி தொடக்கம் யூலை 17ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது. இம்மகா ஞானவொடுக்கத்தை வவுனியால் உள்ள அமதிகளின் மறையுரைஞர் குழு நடாத்துகின்றது. இதற்கான ஏற்பாடுகளை உயிலங்குளம் பங்குத்தந்தை அருட்பணி. பிரான்சிஸ் மரி டி கோல் அவர்கள் மேற்கொண்டுள்ளார்.

## இத்தாலி நாட்டின் ஆன்மீகக் குருவாக அருட்திரு. விமல் அமதி



இத்தாலி நாட்டில் புலம் பெயர்ந்து வாழும் தமிழ் மக்களின் ஆன்மீகக் குருவாகப் பணியாற்ற அருட்திரு. பி. விமல்ராஜ் (அமதி) அவர்கள் அமதிகளின் மாகாண முதல்வரினால் இத்தாலிக்கு அனுப்பப்பட்டுள்ளார்.

யூன் மாதம் 13ஆம் திகதி அவர் இத்தாலிக்குப் புறப்பட்டுச் சென்றார். புதிய பணித்தளத்தில் மகிழ்வோடு பணியாற்ற மன்னா இறையாசி வேண்டி வாழ்த்துகிறது.

## மடுத்திருப்பதிக்கு வருகை தந்த சரத் பொன்சேகா



முன்னாள் இராணுவத் தளபதி யூன் மாதம் 14ஆம் திகதி மடு மாதா ஆலயத்திற்குச் சென்று நன்றி வழிபாடுகளில் கலந்துகொண்டார். முன்னாள் இராணுபத் தளபதி- சரத் பொன்சேகா விடுதலையாக வேண்டும் என அவரது பாரியார் மடுமாதா ஆலயத்திற்கு வந்து வேண்டிக்கொண்டதாகவும் அந்த வேண்டுதலை நிறைவேற்றுமுகமாக சரத் பொன்சேகா மடுவிற்கு வந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த விஜயத்தின்போது சரத் பொன்சேகா மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகையை சந்திக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## தமிழ் திருப்புகழ் மாலை இப்போது விற்பனையில்

இரண்டாம் வத்திக்கான் திருச்சங்கத்தின் ஆணையின்படி திருத்தி அமைக்கப்பெற்று, திருத்தந்தை 6ஆம் பவுலின் அதிகாரத்துடன் வெளியிடப்பட்ட திருப்புகழ் மாலை (Divine Office in Tamil) நீண்ட இடைவெளியின்பின் இப்போது இலங்கையில் விற்பனையாகிறது.

*"திருப்புகழ் மாலையால் திருச்சபை இடைவிடாது கிறிஸ்து வழியாக கடவுளுக்கு புகழ்ச்சிப் பலியை ஒப்புக்கொடுக்கிறது. திருப்புகழ் மாலையை செபிக்கும் அனைவரும் திருச்சபையின் கடமையை நிறைவேற்றுவதோடு அன்னையாம் திருச்சபையின் பெயரால் இறைவனின் அரியணையின் முன் நிற்கின்றனர்." (திருச்சபை 50).*

தமிழ் திருப்புகழ் மாலையைப் பெறவிரும்புவோர் திரு. றொனால்ட் அவர்களுடன் 0773931161, 0752610048, 0112434880 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொள்ளவும்.

## மன்னார் ஆயர் அனைவராலும் மதிக்கப்படுகின்ற மாமனிதர்

### மன்னார் நகரசபையில் திரு. குமரேஸ் கருத்து

### அமைச்சரின் செயலுக்கு மன்னார் நகரசபையில் கண்டனத் தீர்மானம்!

கடந்த 25.05.2012 அன்று மன்னார் நகர சபையின் மாதாந்த அமர்வு தலைவர் திரு. சந்தாம்பிள்ள ஞானப்பிரகாசம் தலைமையில் நடைபெற்றது. இந்த அமர்வில் கலந்துகொண்டு உரையாற்றிய நகர சபை உறுப்பினர் திரு. இரெட்ணசிங்கம் குமரேஸ் அவர்கள் மன்னார் ஆயரின் நற்பெயருக்கு களங்கம் கற்பிக்கும் வகையில் நடந்த அமைச்சர் றிசாட்டுக்கு எதிரான கண்டனத் தீர்மானத்தை முன்மொழிந்தார்.

கண்டத் தீர்மானத்தை முன்மொழிந்து திரு குமரேஸ் கூறியதாவது, எமது மன்னார் மறை மாவட்ட மேதகு ஆயர் அவர்கள் மன்னாரில் அனைத்து இன மக்களாலும் மதிக்கத்தக்க எல்லா மக்களாலும் நேசிக்கப்படுகின்ற ஓர் மகத்தான மனிதர். மன்னாரில் மட்டுமின்றி இலங்கையில் வாழுகின்ற முழு சிறுபான்மை மக்களுக்கும் ஏற்படுகின்ற துன்பங்கள், துயரங்கள், கொடுமைகள், அநீதிகள் மற்றும் எமது மக்களின் உரிமை மறுப்புக்களுக்கு எதிராக உலகம் பூராகவும் குரல் கொடுக்கின்ற மனிதர். அவர் தனி ஒரு மதத்துக்கோ, இனத்துக்கோ சொந்தக்காரர் அல்லர். ஆயரின் செயல்பாடு உள்ளூரிலும் உள் நாட்டிலும், வெளி உலகிலும் பொதுவானது. இப்படிப்பட்ட உயர்ந்த மனிதரை இலங்கையின் அதி உயர் பீடமான பாராளுமன்றில் அதுவும் சிறுபான்மை இனத்தை சார்ந்த அமைச்சர் றிசாட் கொச்சத்தனமாக பிறமத அடிப்படைவாதிகளுடன் இணைத்துப் பேசிய செயல் மிகவும் கவலைக்குரியது. இச்செயல் ஆயருக்கு மட்டுமின்றி சிறுபான்மை இனமக்கள் அனைவருக்கும் பாரிய மனக்காயங்களை ஏற்படுத்தியுள்ளது. அமைச்சரின் கொச்சத்தனமான செயல்பாட்டை அனைத்து மக்களும் வெறுக்கின்றார்கள், அதனை எதிர்க்கின்றார்கள். அந்த அடிப்படையில் பாராளுமன்ற கண்சாட்டில் இருந்து ஆயர் தொடர்பான குற்றச்சாட்டை நீக்க வலியுறுத்தியும் அமைச்சரின் செயல்பாட்டை கண்டித்தும் இச்சபையில் தீர்மானமாக முன்வைக்கின்றேன்.

அத்தோடு திருக்கேதீஸ்வர புத்தர் விகாரை திருக்கேதீஸ்வர ஆலயத்தின் பகுதிக்குள் அமைத்தல் அநீதியானதும் ஆக்கிரமிப்புச் செயலுமாகும். குறிப்பிட்ட புனித ஸ்தலங்களில் திருக்கேதீஸ்வர ஆலயமும் முக்கியத்துவம் வாய்ந்தது. ஓர் மதத்தை மிதித்தோ, அழித்தோ இன்னுமோர் மதத்தை ஏற்படுத்துவது அம்மதத்தின் கோட்பாடுகளுக்கும் போதனைகளுக்கும் முரணானது. (தொடர்ச்சி 15ஆம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை மண்ணில் காலடி பதித்த 150வது ஆண்டு நிறைவைக் கொண்டாட அணிதிரளும் திருக்குடும்ப கன்னியர் சபை

எழுத்துரு : திருமதி. அகத்தா குரூஸ்,
திருக்குடும்ப பொதுநிலை அங்கத்தினர், மன்னார்.

திவ்விய நற்கருணையில் அற்புதமாய் தோன்றிய இறைவனின் ஆசீர்பெற்று, இன்று பாரெங்கும் பலுகிப் பெருகி, மக்களுக்கு அயராது அருட்பணிகள் ஆற்றிவரும் திருக்குடும்ப கன்னியர் அருட்சகோதரிகள் (HOLY FAMILY SISTERS) இவ்வாண்டு அவர்களின் சபை இலங்கை மண்ணில் முதல் முதலாக காலடி வைத்த நினைவு தினத்தையும், அத்துடன் சிறப்பாக சபையை ஸ்தாபித்த நிறுவுனர் பீற்றர் பியன்வெலு நோயாய் அடிகள் விண்ணக வாழ்வு எய்திய தினத்தையும் பெருவிழாவாகக் கொண்டாட ஆயத்தங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

தாய்தந்தையரின் சொற்கேளாது தான்தோன்றித்தனமாக நண்பர்களுடன் சுற்றித்திரிந்து, அரட்டை அடித்து வாழ்க்கையையே உலக சிற்றின்ப மோகத்தில் தொலைத்து நின்றார் பீற்றர் பியன்வெலு நோயாய். காலப்போக்கில் தனது தாயின் கண்ணீருடன்கூடிய அயராத செபத்தால் மனம்மாறி, "இறைவன் மாத்திரமே" என்ற தாரக மந்திரத்தை தனது மனதிலும், வாழ்விலும் ஏற்றுக்கொண்டார். இடர்கள் ஏற்பட்டபோதும் மனம் சோராது அவற்றையெல்லாம் இறைவன் சித்தமென ஏற்று கிறீஸ்தவ மதிப்பீடுகளைக் கொண்ட ஓர் மாபெரும் குடும்பத்தை அமைத்தார். அந்த அருள்கொடையை அகில உலகெங்கும் பரவச்செய்து அதன் மூலம் இறைவனுடைய இராட்சியத்தை உலகெங்கணும் கட்டப் பாடுபட்டார். திருக்குடும்பத்தைப்போன்று, அவர்கள் வாழ்ந்த வாழ்க்கையின் பிரதிபலிப்பாக ஒவ்வோர் குடும்பமும் மாறி உலகிற்கு உப்பாக, ஒளியாக, "இறைவன் மாத்திரமே" என்ற விசுவாசத்தில் வாழ வேண்டுமென்று கனவு கண்டார்.

இறைவனின் ஆசீரை நற்கருணையில் பெற்ற அவர் 3, 4 கன்னிப்பெண்களுடன் இச்சபைக்கு அத்திவாரமிட்டார். இதனால் அச்சமுகத்தில் அவருக்கு தீராத பழியும், இடைஞ்சல்களும், அவமானமும் ஏற்பட்டன. இப்படியாக பல பெரிய சோதனைகள் ஏற்பட்டன. ஆனாலும் சோர்ந்து போகாமல், அவற்றை எதிர்த்து, நாளாந்தம் பெருகிய அங்கத்தினருடன் மிகுந்த போராட்டத்தின் மத்தியில் திருக்குடும்ப கன்னியர் சபையை உருவாக்கினார். சேர்ந்த அங்கத்தினரை குடும்ப உறவிலும், கிறீஸ்தவ மதிப்பீடுகளிலும் வாழப் பயிற்றுவித்து, மக்கள் மத்தியில் அந்த நல்ல பண்புகளை உலகெங்கணும் பரப்ப விரும்பினார். அக்கன்னியருடைய அன்புறவான வாழ்க்கையால் கவரப்பட்ட அனேகர் இச்சபையில் சேரத்தொடங்கினர். சபை பெருகிப் பெருகி வளர சவால்களும் சோதனைகளும் பெருகின. ஆனாலும் அவற்றையெல்லாம் எதிர்த்துப் போராடி இன்று சபை ஆல்போல் தழைத்து அறுகுபோல் வேரூன்றி அவுஸ்ரேலியாக் கண்டம் தவிர்ந்த அனைத்துக் கண்டங்களிலும் பரவியுள்ளது.

இக்கன்னியர் சபை அருட்சகோதரிகள் பல வழிகளிலும் தம்மால் இயன்ற பணிகளை இம்மண்ணின் மக்களுக்கு மிகுந்த தியாக சிந்தையுடன் செய்கின்றனர். மானிட மகன் எவ்வாறு மனித குலத்தை அன்பு செய்து வாழ்ந்தாரோ அதேபோன்று அவரின் இராச்சியம் இம்மண்ணில் மலர அரும் பெரும் பணியாற்றி வருகின்றனர். கல்வி போதித்தல், வயோதிப மக்களைப் பராமரித்தல், வறிய மக்களை தேடிச்சென்று




அவர்களின் கஸ்டங்களை கேட்டறிந்து உதவி செய்தல், வைத்தியசாலைகளுக்குச் சென்று நோயாளிகளைச் சந்தித்தல், அவர்களுக்கு நற்கருணை வழங்குதல், ஆன்மீகக் கடமைகளைச் செய்தல், தேவையானால் சரீர உதவிகள் செய்தல், அவர்களுக்கு ஆறுதலாய் இருத்தல், இனப்பிரச்சினையால் அல்லல்பட்டு உயிர்பிரிந்து, உடமையிழந்து அங்கவீனராகி விரக்தியின் விளிம்பில் நின்று கவலையுறும் மக்களை தேடிச்சென்று ஆறுதல் கூறி இன்னோரன்ன உதவிகள் செய்தல், குடும்பங்களைப் பிரிந்து வாழ்வோரை அவர்களுகளுடன் கதைத்து ஒன்றுசேர்க்கப் பாடுபடுதல், மற்றும பிற மதச் சகோதரர்கள் திருமணத்தில் இணையும்போது அவர்களுக்கு தம்முடைய மறைக்கல்வியைக் கற்றுக்கொடுத்து அருட்சாதனைங்களைப் பெற ஆயத்தம் செய்தல் போன்ற பல்வேறு பணிகளை இச்சகோதரிகள் செய்துவருகின்றனர்.

தாம் கன்னியர் மடங்களில் மட்டும் பணியாற்றுவதைவிட உலகெல்லாம் மக்களுடன் இணைந்து பணி செய்வதனால் கூடியவிதத்தில் இறைவன் இராட்சியம் பரவி பயனளிக்கும் என்பதை உணர்ந்த சபையினர், உலகில் வாழ் மக்களையும் 'திருக்குடும்ப பொதுநிலையினர்' என்ற பெயரில் தம்முடன் இணைத்துள்ளனர். ஒவ்வோர் குடும்பத்திலும் திருக்குடும்ப மாதிரியைப் பின்பற்றி வாழ இப்பொதுநிலையினருக்கு அருட்சகோதரிகள் உந்துதலும், ஆலோசனையும் வழிகாட்டலும் வழங்குகின்றனர். அன்பு, பொறுமை, மன்னித்தல், விட்டுக்கொடுத்தல் போன்ற பண்புகளில் ஒவ்வொரு குடும்பமும் வளர வழிகாட்டுகின்றனர். இதன் மூலம் கிறிஸ்தவ சமூகங்களில் ஓர் அன்பியப் புரட்சியையே ஏற்படுத்தி வருகின்றனர்.

இன்று திருக்குடும்பச்சபை 5 பெரும் கிளைகளைக் கொண்ட பெரும் விருட்சமாக ஆழமாக வேரூன்றி பாரெங்கும் பணியாற்றி வருகின்றது. அப்போஸ்தலிக்க குருமார், தியான யோக அருட்சகோதரிகள், பொதுநிலை அங்கத்தினர், திருமணச் சார்பற்ற அங்கத்தினர், இளைஞர் என்று 5 கிளைகளும் இணைந்து தந்தை நல்ல பிதாவின் கனவை நனவாக்க ஒன்றிணைந்து முழுமூச்சாக முனைந்து நிற்கின்றனர்.

திருக்குடும்ப சபையில் இணைந்த ஒவ்வோர் அங்கத்தினரும் தமது சாட்சிய வாழ்வினால் இறை இராச்சியத்தை, இறை அன்பை உலகெங்கும் பறைசாற்றுவார்களாக. மனித மாண்பை வளர்த்து அன்புறவில் குடும்பங்களைக் கட்டி எழுப்புவார்களாக.

# பாப்பரசர் தினம் 24.06.2012
## திருத்தந்தையே, இறையரசை நோக்கி எம்மை வழிநடத்தும்!

அருட்திரு. றெஜினோல்ட் சப்ரமாது,
தேசிய இயக்குனர், பாப்பரசர் மறைபரப்புச் சபைகள்.

இன்று, இலங்கையில் நாம் பாப்பரசர் தினத்தை கொண்டாடுகின்றோம். அதேபோன்று இன்று திருமுழுக்கு யோவானின் பிறந்த தினமும் ஆகும். அன்று இறைவனால் திருமுழுக்கு யோவானுக்கு வழங்கப்பட்ட, இறைமக்களை இறையரசை நோக்கி வழிநடத்தும் பணியே இன்று பாப்பரசருக்கும் வழங்கப்பட்டுள்ள பொறுப்பாகும்.

புனித பேதுரு மற்றும் அவரைப் பின்தொடர்ந்த அனைத்து பாப்பரசர்களும் நாம் கண்ணால் காணக்கூடிய திருச்சபையின் தலைவர்கள் என்பதை நாம் அறிவோம். அதேபோல் அவர்களது கடமையும் பணியும் கிறிஸ்துவைப் போன்றே நற்செய்தி அறிவிப்பதாகும் என்பதையும் நாம் அறிவோம். அப்படியாயின், மீட்பைப் பற்றிய நற்செய்தி, இறையரசைப் பற்றிய நற்செய்தி, இறைத்தந்தை பற்றிய நற்செய்தி என்பவற்றை அறிவிப்பதாகும். அவ்வாறு செய்வதன் வழியாய் இறைமக்களை தீமையின் பிடியிலிருந்து பாதுகாத்து அவர்களை இறையரசை நோக்கி வழிநடத்திச் செல்ல இயலும். பேதுரு மூன்று தடவைகள் இயேசுவை மறுதலித்ததன் பின்பும் இயேசு மும்முறை கேட்ட கேள்வி யாதெனில் : "யோவானின் மகன் சீமோனே, நீ இவர்களைவிட மிகுதியாக என்மீது அன்பு செலுத்துகிறாயா?" என்பதாகும் (யோவான் 21:15). அதற்கு பேதுறு: "ஆம் ஆண்டவரே, எனக்கு உம்மிடம் அன்பு உண்டு என உமக்குத் தெரியுமே" என்றார் (யோவான் 21:15b). (தொடர்ச்சி 15ஆம் பக்கம்)



ஈழத்தின் புகழ்பூத்த பன்மொழி அறிஞர்

# தவத்திரு தாவீது அடிகள்

(Rev.Dr.H.S.David Linguist and Polymath)

எழுத்துரு : துரை ஆரோக்கியதாசன்,
தலைவர், கத்தோலிக்க கலை இலக்கிய வட்டம்,
யாழ்ப்பணம்

**01.06.2012 அன்று தாவீது அடிகளாரின் 31வது நினைவு தினம்**

*அன்பின் சுடராம் தாவீதடிகள்*
*ஆழ்ந்த பன்மொழி ஆராய்ச்சியாளர்*
*இன்பத்தமிழுக்கு இதயம் கொடுத்தவர்*
*ஈகைக்கு இலக்கணமாகத் திகழ்ந்தவர்*
*உலகோர் உய்ய உழைத்த உத்தமர்*
*ஊரெல்லாம் தமிழ்மொழி பரப்பிய மேதை*
*எளிமை வாழ்வால் எம்மைக் கவர்ந்தவர்*
*ஏட்டிற்காக (யாழ் நூலகம்) உயிரையே துறந்தவர்*
*ஐயம் திரிபறத் தமிழைக் கற்றவர்*
*ஒப்பியல் அகராதியின் ஒப்பற்ற ஞானி*
*ஓதியபடியே ஒழுகிய ஆசான்*
*ஔடதமாவார் மானிடர் தமக்கு*

தமிழ் மொழியின் தகைமைசால் சிறப்பைத் தமிழினம் கருதிடாக் காலத்தில் "நும்மொழியின் சான்ற சிறப்பைத் தமிழ் மக்களே இன் இனியே முழுவதூஉம் உணர்மின்" என வீரமுரசு அறைந்து தமிழ் மக்களைத் தட்டி எழுப்பிய பெருமை ஒப்பியல் அகராதியின் ஒப்பற்ற மேதை தவத்திரு கலாநிதி ஹயசிந்து சிங்கராயர் தாவீது அடிகளைச் சாரும்.

பருத்தித்துறையில் தும்பளைக் கிராமத்தில் மாவச்சை என்னும் வளவில் 28.06.1907 இல் பிறந்த இவர், தனது கல்வியை யாழ். சம்பத்திரிசியார் கல்லூரியில் ஆரம்பித்து உயர்நிலைக் கல்வியை முடித்தார். இவர் கருவிலே திருவுடையராக விளங்கியபடியால் "என்னைப் பின்பற்றி வா" (மத்.9:9) என்ற இயேசுவின் அருளுரையால் ஆட்கொள்ளப்பட்டு கொழும்பு புனித பேணாட் குருத்துவக் கல்லூரியல் பயிற்சி பெற்று, 19.12.1931 இல் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார்.

### ஆளுமை (Personality)

எழில்மிக்க செவ்விளநீர் நிறம், புன்னகை பூத்துப் பொலிவோடு விளங்கும் முகம், ஞானக்குறியாகத் தோன்றும் வெண்ணிறக் குறுந்தாடி, அறிவொளி அவாவும் கண்கள், எடுப்பான கூரிய மூக்கு, ஈகையில் வள்ளல், பாரியை மிஞ்சும் கரங்கள், உருவத்தில் குறுமுனி அகத்தியர், நெப்போலியன் போன்று அபூர்ப ஞாபகசக்தி மிக்கவர், நேரத்தை உயிர்போன்று செயலுருவப்படுத்தியவர். ஒழுங்கும், சிக்கனமும் இவருக்கு இரு கண்கள் போன்றவை. மனிதக் கணனியாகவும், நுண்ணறிவு மிக்க நடமாடும் பல்கலைக்கழகமாகவும் திகழ்ந்தவர். துறவியன் இடது கரத்தில் 'ரெனிஸ்' வீரனைப் பிரதிபலிக்கும் 'றக்கெற்'. வலது கரத்தில் உத்தம மரியாளின் வீரவாள் ஆகிய திருச்செபமாலை. ஒருமுறை பார்த்தாலே நெஞ்சில் நிறைந்திடும் தோற்றப் பொலிவு. உந்துசக்திமிக்க ஆளுமை (Dynamic Personality). இவற்றின் ஒட்டுமொத்தமே தாவீது அடிகள் என்பது வெள்ளிடைமலை.

### குணக்குன்று (Magnificent character)

இருபதாம் நூற்றாண்டிலே பூமியில் மானிட, வானவ, தேவதையாக திகழ்ந்த அன்னை திரேசாவைப்போல தாவீது அடிகள் எளிமையும் தாழ்மையும் நிறைந்தவர். மனித நேயத்தின் இலக்கணமே இவர். ஆண்டவரின் அன்பைப் பகிர்ந்தளித்தவர். "ஒன்றே குலம், ஒருவனே தேவன்" என்பவற்றைக் கடைப்பிடித்த செம்மல். நாம் கண்ட நவீன சோக்கிறற்றீஸ். கடுகளவு கதைத்து மலையளவு பெரும்பணியாற்றிய பெருமகனார். ஏழை மாணவர்களின் கண்ணீரிலே துன்புறும் இயேசுவைக் கண்டார். வீதியோரங்களிலே வேதனைப்படும் கைவிடப்பட்ட மனித உள்ளங்களைக் கட்டி அரவணைத்து மோந்து முத்தமிடும் பழக்கமும், வஞ்சகமில்லாத பிஞ்சுக் குழந்தை உள்ளமும் கொண்டவர். பல்லாயிரக்கணக்கான ஏழை மாணவர்களின் வாழ்வு ஒளிமயமாகத் திகழச் சுயநலமின்றி அருளையும் பொருளையும் மனமகிழ்வுடன் வாரி வழங்கினார். நம் வாழ்வில் கண்ட புனிதர் தாவீது அடிகள்

### கல்விச் சாதனை (Academic Achievement)

இவர் இலண்டன் பல்கலைக்கழக கலைமானிப்பட்டத்துடன் முதுமானிப் பட்டத்தினையும், கலாநிதிப் பட்டத்தினையும் பெற்றுக்கொண்ட ஒரு மாபெரும் கல்விமான்.

### ஆசிரியப் பணி (1936 -1967)

தாவீது அடிகள் புனித பத்திரிசியார் கல்லூரியில் 31 ஆண்டுகள் பணிபுரிந்து சிறந்த அறிஞர்களை உருவாக்கியுள்ளார்.

### யாழ். நூலகமும் தாவீது அடிகளும்

01.06.1981 நடு இரவில் அப்போதுள்ள யாழ் நூலகம் விலைமதிப்புக்குரிய 97,000 நூல்களுடன் தீக்கிரையாக்கப்பட்டது. யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி மேன்மாடிக் கட்டடத்திலுள்ள மேற்குப் பக்க அறையில் வாழ்ந்து கொண்டிருந்த 74 வயதுடைய தாவீது அடிகள் இதனைக் கண்ணுற்றதும் பேரதிர்ச்சியினால் உயிர் துறந்தார். யாழ். நூலகத்தை உருவாக்கினாலும், நடமாடிய பல்கலைக்கழகமாகிய தாவீது அடிகளை யாரால் உருவாக்க முடியும்?

### எம் பணி (Our Obligation)

பிதா லோங், தாவீது அடிகள் ஆகிய பேரறிஞர்களின் ஆன்மா சாந்திபெற, யாழ் நூலகம் உயிரூட்டம்பெற, இலங்கை அரசும், தமிழ் மக்களும் பங்கெடுப்பது முக்கிய கடமையாகும்.

(தொடர்ச்சி 14ஆம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மன்னார் மறைமாவட்டச் செய்திகள்

# எந்தச் சமூகமும் அகதிகள் எனும் நாமத்துடன் அழைக்கப்படுவதை நாம் விரும்பவில்லை!

### மன்னார் பிரதேச செயலாளர் திருமதி ஸ்ரான்லி டி மெல்



மன்னாரைச் சொந்த மாவட்டமாக கொண்ட எந்தச் சமூகமும் வெளிமாவட்டங்களில் அகதிகள் எனும் நாமத்துடன் தொடர்ந்தும் அழைக்கப்படுவதை நாம் விரும்பவில்லை. ஆதலால் பிரதேச செயலகத்தினால் முன்னெடுக்கப்படும் மீள்குடியேற்றம் தொடர்பான தரவுகளைப் பெற்றுக்கொள்ளும் வேலைத்திட்டத்தில் ஒவ்வொருவரும் இதய சுத்தியுடனும் எமது மாவட்டம் என்ற பற்றுடனும் உண்மையான தகவல்களை வழங்கி ஒத்துழைக்க வேண்டும் என மன்னார் பிரதேச செயலாளர் திருமதி நந்தினி ஸ்ரான்லி டி மெல் தெரிவித்துள்ளார்.

மன்னார் மாவட்டத்தில் இருந்து இடம்பெயர்ந்து வெளிமாவட்டங்களில் வசிப்பவர்களது மீள் குடியேற்றத்தில் நிலவும் காலதாமதம் தொடர்பில் தரவுகளை சேகரிக்கும் வேலைத்திட்டத்தினை மன்னாரில் ஆரம்பித்து வைத்து அது தொடர்பில் விளக்கத்தினை வழங்குகையிலேயே மன்னார் பிரதேச செயலாளர் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

# மன்னார் திருக்கேதீஸ்சரத்தில் புத்தர் சிலை மன்னார் மக்கள் அதிர்ச்சி!







மன்னார் திருக்கேதீஸ்சர திருத்தல சூழலில் திடீரென புத்தர் சிலை ஒன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றமை மன்னார் வாழ் மக்களிடையே பெரும் அதிருப்தியை தோற்றுவித்திருக்கின்றது.

சமீப காலங்களாக நாட்டின் அநேக பகுதிகளில் குறிப்பாக தமிழர்கள் செறிவாக வாழும் பிரதேசங்களில் நிறுவப்பட்டிருக்கும் தமிழ் பெரியார்களின் உருவச்சிலைகளை திட்டமிட்டு சேதமாக்கும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றது. இந்நிலையில் தற்போது தமிழர் பகுதிகளில் புத்தர் சிலைகளையும், விகாரைகளையும் ஸ்தாபித்து சிறுபான்மையின சமூகங்களுக்கு பெரும் தலையிடியினை கொடுக்கும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக தெரிகின்றது.

பாடல் பெற்ற திருத்தலங்களில் ஒன்றாக நீண்ட காலமாக விளங்கிவரும் திருக்கேதீசரத்தில் பக்தர்கள் தீர்த்தமாடும் பாலாவித் தீர்த்தக் கரைக்கு பக்கவாட்டாக செல்லும் வீதியின் சமீபமாக தனியாருக்கு சொந்தமான காணி ஒன்றில் கடந்த ஏப்ரல் மாதம் 6ஆம் திகதி வெண்கலத்திலான புத்தர் சிலை ஒன்று திடீரென ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. இது திருக்கேதீஸ்சர திருத்தல சூழலில் வாழும் மக்களிடையே மட்டுமல்லாது ஒட்டுமொத்த மன்னார் மாவட்ட மக்களிடையே பெரும் அதிருப்தியையும், சந்தேகத்தினையும் தோற்றுவித்திருக்கிறது. பல்வேறு தரப்பிலிருந்தும் கொடுக்கப்பட்ட அழுத்தம் காரணமாக இந்த புத்தர் சிலை திறப்பு நிகழ்வு காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகத் தெரிகின்றது. ஒரு காலத்தில் இந்துத் திருத்தலமாக விளங்கிய கதிர்காமம் தற்போது பௌத்த திருத்தலமாகவே பொதுவாக அறியப்படுவதைப்போன்ற ஒரு நிலை இங்கும் ஏற்படலாம் என மக்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

# அடர்ந்த காட்டுப் பகுதிகளில் முள்ளிக்குள மக்கள்!

### *விழிப்போடு இருந்து உங்கள் பாதுகாப்பை உறுதிப்படுத்துங்கள்!*

### *முள்ளிக்குளம் மக்களுக்கு பங்குத்தந்தை அறிவுரை*



சிலாவத்துறை பங்குத்தந்தை அருட்பணி. இராஜநாயகம் அடிகளார் மீள்குடியேறிய முள்ளிக்குள மக்களைப் பார்வையிட்டு அவர்களோடு அளவளாவுகின்றார்.

மீளக்குடியமர்ந்துள்ள முசலிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட முள்ளிக்குளம் கிராம மக்கள் விழிப்புடன் இருந்து தமது பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு சிலாபத்துறை பங்குத்தந்தை அருட்பணி. இராஜநாயகம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

முள்ளிக்குளம் கிராம மக்கள் இடம்பெயர்ந்த நிலையில் மன்னார் மாவட்டத்தின் பல பாகங்களிலும் உள்ள உறவினர்களுடைய வீடுகளிலும், வாடகை வீடுகளிலும் வாழ்ந்து வந்தனர். கடந்த ஐந்து வருடங்களுக்கும் மேலாக இவ்வாறு வாழ்ந்து வந்த இந்த மக்கள் 18.06.2012 அன்று தமது சுய விருப்பத்தின்பேரில் முள்ளிக்குளம் கிராமத்திற்குச் சென்று அப்பகுதியில் உள்ள கடற்படையினரின் அறிவுறுத்தலுக்கு அமைவாக முள்ளிக்குளம் கிராமத்தை அண்டிய மலங்காடு மற்றும் பெரிய குளம் ஆகிய கிராமங்களில் தற்காலிகமாகக் குடியேறியுள்ளனர்.

இந்தக் கிராமங்கள் அடர்ந்த காடுகளாகக் காணப்படுவதுடன் யானை உள்ளிட்ட மிருகங்களின் நடமாட்டம் உள்ள இடமாகவும் இருக்கின்றது. எனவே அங்கு மீளக்குடியமர்ந்துள்ள மக்கள் காடுகளினுள் அதிக தூரம் செல்வதைத் தவிர்த்துக்கொள்ளுமாறும் தேவையற்ற நடமாட்டங்களைக் குறைத்துக் கொள்ளுமாறும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். தற்போது சுமார் 50 குடும்பங்களைச் சேர்ந்த 120 பேர் வரை இங்கு குடியேறியுள்ளனர்.

## யாழ் மண்ணில் மன்னார் கத்தோலிக்க இளையோர்

மன்னார் கத்தோலிக்க இளையோர் ஒன்றிய இயக்குனர் அருட்பணி நெவின்ஸ் அடிகளாரின் ஏற்பாட்டில் அதன் செயற்குழு உறுப்பினர்கள் 3 நாள் பயணமாக யாழ் வந்திருந்தனர். அவர்களை வரவேற்க யாழ் மறைமாவட்ட இளையோர் ஒன்றிய செயற்குழுவினரும் இயக்குனரும் அவர்களுக்கு பல்வேறு நிகழ்வுகளை ஏற்பாடு செய்திருந்தனர். கருத்தரங்கு, அனுபவப்பகிர்வு என்பவற்றோடு சக்கோட்டை இளையோர் ஒன்றியத்தினருக்கிடையிலான சந்திப்பும் மகிழ்மாலைப் பொழுதும் இடம்பெற்றது.

பயணத்தின் மூன்றாம் நாளிலே இறுதிப்போர் இடம்பெற்ற முள்ளிவாய்க்கால் பகுதிக்கான பயணமும், மீள்குடியேற்றப்படுவோருடனான சந்திப்பும் இடம்பெற்றது. பலவிதத்திலும் பயனுள்ளதாகக் காணப்பட்ட இந்த ஒன்றுகூடல் இரண்டு மறைமாவட்ட இளையோரையும் எதிர்வரும் காலங்களில் இணைத்து செயற்படத் தூண்ட வேண்டுமென்ற எண்ணம் எல்லோராலும் வெளிப்படுத்தப்பட்டது.

## மன்னாரில் வானவில் இசைக்குழு அங்குரார்ப்பணம்

மன்னார் மாவட்டத்தில் உள்ள பாடகர்கள், வாத்தியக் கலைஞர்கள், இசையமைப்பாளர்கள் போன்றோரை ஒருங்கிணைத்து 'வானவில் இசைக்குழு' உருவாக்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்தின் கலைஞர்களை ஒன்றிணைத்து அவர்கள் தங்கள் ஆற்றல் திறமைகளை வெளிக்கொண்டுவரக் களம் அமைத்துக் கொடுப்பதுதான் இந்த அமைப்பின் நோக்கமாகும்.

மன்னார் தமிழ்ச் சங்கத் தலைவரும் மன்னார் 'கலையருவி' அமைப்பின் இயக்குனருமான தமிழ் நேசன் அடிகளாரை போசகராகக்கொண்டு இந்த அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதன் தலைவராக எழுத்தாளர் ஜே. ஆர். மயூறன் அவர்களும் செயலாளராக பாடகர் எஸ். சுதர்சன் அவர்களும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். கடந்த யூன் மாதம் 10ஆம் திகதி கலையருவி எனப்படும் மன்னார் மறைமாவட்ட சமூகத்தொடர்பு அருட்பணி மையத்தில் காலை 10.00 மணிக்கு இதன் அங்குரார்ப்பண நிகழ்வு இடம்பெற்றது.

இந்நிகழ்வில் ஊடகவியலாளர் மக்கள் காதர், கலைஞர் ஜேம்ஸ், அவுஸ்ரேலியா டயஸ்போரா அமைப்பைச் சேர்ந்த திரு. ஜெரோம் ஆகியோரும் இன்னும் கலைஞர்களும் கலந்துகொண்டனர். எதிர்காலத்தில் பல நிகழ்ச்சிகளை நடாத்த திட்டமிடப்பட்டுள்ளது.

## பட்டப் பகலில் துணிகரக் கொள்ளை

மன்னார் மாவட்டம் நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட உமநகரி என்ற கிராமத்தில் திரு. எஸ். எமிலியானுஸ்பிள்ளை (சமாதான நீதவான்) அவர்களின் வீட்டில் கடந்த யூன் மாதம் 8ஆம் திகதி பட்டப் பகலில் காலை 10.00 -- 12.00 மணி இடைவெளியில் இந்த துணிகரக் கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

20 பவுண் நகை, ஒரு இலட்சம் பணம் ஆகியவை கொள்ளையிடப்பட்டுள்ளன. இதனைக் கண்டுபிடிக்க பொலிசார் தீவிர வேட்டையில் இறங்கியுள்ளனர். இப்படியான கொள்ளைச் சம்பவங்கள் பரவலாக இடம்பெறுவதால் பொதுமக்கள் விழிப்பாக இருக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

## எழுத்தூரில் அன்பிய எழுச்சி வாரம்



பங்குத்தந்தை
இ. செபமாலை அடிகளார்

மன்னார் மறைமாவட்ட பங்குகள் எங்கும் அன்பிய எழுச்சி வாரத்திற்கான திட்டங்களை ஆர்வமுடன் செயற்படுத்தி வருகின்ற இவ்வேளையில் எழுத்தூர் பங்கின் அனைத்து அன்பிய இணைப்பாளர்களும் பங்குத்தந்தையுடன் இணைந்து கடந்த 20.05.2012 அன்று அன்பிய எழுச்சி வாரத் திட்டங்களை நடைமுறைப்படுத்தத் தீர்மானித்தனர்.

இதற்கமைவாக, 27-05-2012 அன்று - பரிசுத்த ஆவியின் திருநாளன்று காலை திருப்பலிக்கு முன்னதாக, பங்கின் ஒவ்வொரு துணைப்பங்கின் ஆலயத்திலும் அன்பிய எழுச்சிப்பாடல் பாடப்பட்டு, அன்பியக் கொடி ஏற்றப்பட்டு அன்பிய வார தொடக்க நாள் ஆரம்பமானது.

28, 29 திங்கள், செவ்வாய் தினங்களில் அன்பியக் குழுக்களில் கைவிடப்பட்டோர், நோயாளர்களை அன்பிய இணைப்பாளர்கள் தேடிச்சென்று அவர்களை இனங்கண்டு, சந்தித்து, அவர்களோடு உரையாடி, அவர்கள் வீட்டில் வழிபாடுகளும் நடாத்தப்பட்டது.

30-05-2012 அன்று புதன் இல்லச்சந்திப்பாக, அன்பியப்பணியாளர்கள் தமக்குரிய அன்பியக் குழுமங்களைச் சந்தித்து அவர்களுடைய ஆன்மீகத் தேவைகளில் விழிப்புணர்வளித்தல் முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

(தொடர்ச்சி 15ஆம் பக்கம்)

## சின்னப்பண்டிவிரிச்சான் ஆலய விழாவின்போது அர்த்தம் நிறைந்த அலங்காரச் சிகரம்



பண்டிவிரிச்சான் பங்கைச்சார்ந்த துணை ஆலயமாகிய சின்னப் பண்டிவிரிச்சான் கிராமத்தின் புனித பிரான்சீஸ்கு சவேரியார் ஆலயத்திருவிழா கடந்த மே மாதம் 20ஆம் திகதி நடைபெற்றது. புனிதரின் வாழ்க்கைக் குறிப்பையும், புனித இன்னாசியாரின் மறைக்கல்விப் போதனையால் புனித பிரான்சீஸ்கு சவேரியாரின் புனிதத்தன்மையை உயர்த்திய இயேசுவின் திருவார்த்தையையும் கொண்ட பதாதையுடனான அலங்காரச் சிகரம் ஆலயத்தின் முன் வரவேற்பாக அமைக்கப்பட்ட விதம் அர்த்தம் நிறைந்ததாக இருந்தது. இந்த அலங்காரச் சிகரம் விழாவுக்கு சிறப்புச் சேர்த்ததோடு மக்களுக்கு இரட்டிப்பான மகிழ்ச்சியையும் தந்தது.

திருவிழா ஆயத்த நாட்களில் மறைமாவட்டத்தின் வெவ்வேறு பங்குகளிலுள்ள குருக்கள் மறைமாவட்டக் கருப்பொருளாகிய "எல்லோருக்கும் மறைக்கல்வி" எனும் கருப்பொருளில் சிறப்பாக மறையுரையாற்றி மக்களுக்காக செபித்தனர்.

இறுதியாக திருநாள் திருப்பலியை மன்னார் மறைமாவட்ட மறைக்கல்வி இயக்குனர் அருட்பணி. றெஜினோல்ட் அடிகளார் தலைமையேற்று ஒப்புக்கொடுத்தார். பங்குத்தந்தை அருட்பணி. செல்வநாதன் பீரீஸ் அவர்கள் விழா ஏற்பாடுகளை நெறிப்படுத்தியிருந்தார். தகவல் - எஸ். றொசாந்தினி, சின்னப்பண்டிவிரிச்சான், மடுக்கோயில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறைக்கல்விப் பொழிவு

மறைக்கல்வி ஆண்டு சிறப்புக் கட்டுரை

# விடுதலைக்கு வித்திடும் மறைக்கல்வி!


அ. ஜஸ்மின் ஷரோன்,
ஆவணம், நானாட்டான்.

### வரலாற்றில் மறைக்கல்வி :

மறைக்கல்வி என்பது மறை உண்மைகளையும், மறைக்கோட்பாடுகளையும், கேள்வி, பதில் என்ற முறையில் மனப்பாடம் செய்தல் என்ற நிலை பொதுவாக நிலவிவந்தது. ஜெர்மன் மறைக்கல்வி (1529) மற்றும் மார்ட்டீன் லூர்த்தரின் சின்னக் குறிப்பிடம் போன்றவை கேள்வி - பதில் முறையை வளர்த்தன. கத்தோலிக்க திருச்சபையிலும் இத்தகைய முறையில் ஜெர்மனியில் புனித கனிசியுஸ் இராயப்பர் (1521-1597) மூன்று விதமான அதாவது குருக்களுக்கு பெரிய மறைக்கல்வி நூல், சிறுவர்களுக்கு சிறிய மறைக்கல்வி நூல், இளைஞர்களுக்கு நடுத்தர மறைக்கல்வி நூல் ஆகியவற்றைத் தயாரித்தார். இத்தாலியில் புனித இர்ாபர்ட் பெல்லார்மினின் (1545–1621) மறைக்கல்வி நூல் பரவலாகப் பயன்படுத்தப்பட்டது. இ·து முதல் வத்திக்கான் சங்கத்தில் உலகளாவிய மறைக்கல்வியின் மாதிரியாகக் கொடுக்கப்பட்டது. திரிதெந்தின் திருச்சங்கத்தில் (1566) உரோமன் மறைக்கல்வி நூல் குருக்களுக்காகத் தயாரித்துக் கொடுக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து 1992ல் திருச்சபை கத்தோலிக்கத் திருச்சபையின் மறைக்கல்வி நூலை வெளியிட்டு மறைக்கல்விப்பணியை ஊக்கப்படுத்தி வருகின்றது.

### இன்றைய உலகில் மறைக்கல்வி :

அன்றைய மறைக்கல்விப்பணி விசுவாசக்கோட்பாடுகளை மனப்பாடம் செய்வதை முக்கியமாகக் கொண்டதாகத் தெரிகின்றது. ஆனால் இன்றைய மறைக்கல்வி மனிதனையும், அவனது வாழ்க்கைச் சூழலையும் மையப்படுத்திக் கொடுக்கப்படுகின்றது. *'எல்லோருக்கும் மறைக்கல்வி'* என்ற அடிப்படையில் ஞாயிற்றுக்கிழமை திருப்பலி முடிந்தவுடன் எல்லோருக்கும் மறைக்கல்விப் பாடம் நடைபெறுகின்றது. கிறிஸ்தவர்களாகிய ஒவ்வொருவருக்கும் அருட்சாதனங்கள் வழங்கப்படுகின்றது. அதற்கு தகுந்த முறையில் ஆயத்தம் செய்ய வாரங்களாக, மாதங்களாக எம்மைத் தயாரிக்கின்றோம்.




அருட்சாதனங்களின் தனித்தன்மையும, அதன் கடமை, பொறுப்பு என்பன பற்றியும் மறைக்கல்வியில் எமக்கு வழங்கப்பட்டு வருகின்றது.

### விடுதலை வாழ்வுக்கு மறைக்கல்வி :

ஏழைகள், வறியவர், ஒடுக்கப்பட்டோர், நசுக்கப்பட்டோர், கைவிடப்பட்டோர், புறந்தள்ளப்பட்டோர் என ஏராளமானோரின் வாழ்வு மலர சமுதாயத்தில் திருச்சபை இவர்களுக்காக ஆற்றவேண்டிய விடுதலைப்பணி பற்றி வத்திக்கான் சங்கமும், ஆயர் மன்றமும் தந்த புதிய சிந்தனையின் பயனாக மறைக்கல்வியின் பார்வையும், கருத்தோட்டமும் படிப்படியாக மாற்றம்பெறத் தொடங்கியது. கடவுள் - மனிதன் - சமூகம் - திருச்சபை எனும் வாழ்வின் பெரும் உண்மைகளை இணைக்கும் ஒரு மறைக்கல்வியை அளித்தது. வகுப்பறை, ஆசிரியர், பாடநூல்களை கற்பித்தல் - கற்றல், மனப்பாடம், தேர்வு, மதிப்பெண்கள் என்ற பாரம்பரியச் சுமைகளை இறக்கி வைத்துவிட்டு குழு ஆய்வு, வாழ்க்கைப் பிரச்சினைகளைப் பற்றி உரையாடல், இறைவார்த்தையின் ஒளியில் மனித வாழ்க்கைக்குப் பொருள் காணல், சுயநலமில்லாத சமுதாய ஈடுபாடுகள், விசுவாச வாழ்வு என்ற புதிய மறைக்கல்வியைத் தந்தது. இதனால் மறைக்கல்வித்துறையில் புதுப்பொலிவும், புது வசந்தமும் மலர்ந்தது. ஆம், மறைக்கல்வி வகுப்பில் ஆசிரியர் சொல்லித்தருகிறார்; மாணவர்கள் கேட்கிறார்கள்!, ஆசிரியர் கற்றுக்கொடுக்கிறார்; மாணவர்கள் கற்றுக்கொள்கிறார்கள்!, ஆசிரியர் தருகிறார்; மாணவர்கள் பெறுகிறார்கள் என்ற நிலை பழைய பார்வையாக இருந்தது.

### புதிய பார்வையில் மறைக்கல்வி :

ஆனால் இன்று மலர்ந்து வரும் புதிய பார்வையில் மறைக்கல்வியின் நோக்கம், இயேசுவின் இலட்சியக் கனவாம் இறையாட்சியை இம்மண்ணில் படிப்படியாக உருவாக்கி வளர்ப்பதற்கான பயிற்சியாகும். கிறிஸ்தவ வாழ்வை அர்த்தமுள்ளதாக்கும் வாழ்வுப் பயிற்சியாகும். இயேசுவின் இலட்சியம் இறையாட்சி. அவர் போதித்து, வாழ்ந்து காட்டியது, தம்மை அர்ப்பணித்து உருவாக்கியது இறையாட்சியே. இறையாட்சி என்பது உறவு வாழ்வு. இயேசு வெளிப்படுத்திய அப்பா இறைவனை, பாசமுள்ள தந்தையாக ஏற்று அவரோடு மிக நெருக்கமாக உறவுகொள்வதாகும். இறைவன் - அப்பா என்றால், அவர் அன்புள்ளவர்; இரக்கமுள்ளவர்; மக்களைத் தேடி வருபவர்; தேவைகளை அறிபவர்; பாதுகாத்து பராமரிப்பவர்; எல்லா அடிமைத்தனங்களில் நின்றும் விடுதலை அளிப்பவர். குறிப்பாக, ஏழைகள், ஒடுக்கப்பட்டவர், உரிமை இழந்தவர் சார்பாகப் போராடுபவர். தீமைகளையும், அக்கிரமங்களையும் அழித்து மாந்தர் அமைதியோடு வாழும் புத்துலகம் படைக்கும் நீதியின் கடவுள். இந்த அப்பா இறைவனை சந்தித்து ஆழ்ந்த இறையனுபவம் பெறவும், அவரது திட்டத்தையும், திருவுளத்தையும் நிறைவேற்ற உறுதி கொள்ளவும், முறையான திட்டமிட்ட பயிற்சியை, மறைக்கல்வியை அளிக்க வேண்டும். அதற்காக முன்வரவேண்டும்! எம்மை அர்ப்பணிக்க வேண்டும்!

இயேசுவுக்காக அவரது இறையாட்சி மண்ணில் மலர்ந்திட எம்மைத் தியாகம் செய்து மலர்ந்திருக்கும் மறைக்கல்வி ஆண்டில் மறைசாட்சிகளாக மணம் பரப்பிட மலர்ந்த உள்ளத்தோடு மறையைப் பரப்பிடுவோமா! ■

---

அமலமரித்தியாகிகள் சபை நிறுவுனருடைய விண்ணகப் பிறப்பின் 150வது ஆண்டு விழா

## நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசருடைய


# நாட்குறிப்புகளின் தொகுப்பு நூல் வெளியீடு! அமதிகளின் இணையத் தளம் ஆரம்பித்து வைப்பு!

உலகமெங்கும் பரந்து வாழும் அமலமரித்தியாகிகள் தங்கள் சபை நிறுவுனரின் விண்ணகப் பிறப்பின் 150வது ஆண்டு விழாவைச் சிறப்பாகக் கொண்டாடினர். இலங்கைத் திருச்சபையின் வளர்ச்சிக்கும் அபிவிருத்திக்கும் பலவழிகளிலும் முக்கிய பங்காற்றி, தொடர்ந்தும் தங்கள் பணிகளைக் காலத்தின் தேவை அறிந்து செயற்படுத்தி வரும் யாழ் மாகாண அமலமரித்தியாகிகள் தங்கள் நிறுவுனர் புனித இயூஜின் டி மசனட்டின் விழாவினை அமலமரித்தியாகிகளின் உயர் குருமடத்தில் திருவிழாத் திருப்பலியுடன் சிறப்பித்தனர். அன்றைய புனித நாளில் நூல் வெளியீடும், இணையத்தள வெளியீடும் முக்கிய நிகழ்வுகளாக, அமதிகளின் மாகாண முதன்மை இல்லமாகிய தொடர்பகத்தில் இடம்பெற்றன.

மறைந்த நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் (அமதி) அவர்கள் திருச்சபைக்கும், தமிழ்மொழிக்கும் ஆற்றிய பணிகள் காலத்தால் அழியாதவை பன்மொழிப்புலவர் என்று அழைக்கப்படும் சுவாமி ஞானப்பிரகாசர் (அமதி) அவர்கள், அக்காலத்தின் தேவை அறிந்து மக்களின் வாழ்வாதாரங்களையும், ஆன்மீகத்தையும் மேம்படுத்த அயராது பணியாற்றிய ஓர் இறையூழியன். இன்று எங்கள் மத்தியில் எழுச்சிபெற்று விழங்குகின்ற கோப்பாய், உரும்பிராய், நல்லூர், மட்டுவில் பங்குகள் மட்டுமல்ல எமது யாழ் மறைமாவட்டத்தில் பல பங்குகளை உருவாக்கி, மக்களை வழிப்படுத்தி அவர்களது அறிவு விருத்தியான பாடசாலைகளை நிறுவி மக்களுக்கு ஒரு மறுகிறிஸ்துவாக திகழ்ந்தவர்.

மனித நேயத்தையும், மனித மாண்பையும் மதித்து மக்கள் மத்தியில் சமத்துவத்தையும், ஒருமைப்பாட்டையும் ஏற்படுத்த அப்போதே பணியாற்றியவர். இத்தகைய உன்னதர் தனது நாளாந்த வாழ்வையும் பணிகளையும் ஒன்றுபடுத்தி நாட்குறிப்பாக எழுதிவைத்திருக்கிறார். இது எமது தமிழ் மொழிக்கும், யாழ் திருச்சபைக்கும் கிடைக்கப்பெற்ற ஒரு வரலாற்றுச் சான்று என்றே சொல்லலாம். இந்த அரிய பெரிய நாட்குறிப்பைப் பேராசிரியர் அருட்பணி. விக்ரர் பிலேந்திரன் அவர்கள் தனது அயராத உழைப்பினால் எமக்குத் தொகுத்துத் தந்துள்ளார். இத்தகைய பெருமைக்குரிய சுவாமி ஞானப்பிரகாசர் அமதி அவர்களின் நூலை யாழ் மாகாண அமதிகள் வெளியீடு செய்துள்ளனர்.

யாழ் மாகாண அமதிகளின் மாகாண முதல்வர் அருட்தந்தை போல் நட்சத்திரம் அமதி அடிகளாரின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்விற்கு யாழ் ஆயர் அதிவணக்கத்திற்குரிய தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்கள் பிரதம விருந்தினராகவும், யாழ் குருமுதல்வர் அருட்பணி. யஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகளார், திருக்குடும்பசபை முதல்வர் அருட்சகோதரி யோஎனன்ட் ஆகியோர் சிறப்பு விருந்தினராகவும் அழைப்புப் பெற்றிருந்தனர்.




ஆயர் அவர்கள் சுவாமி ஞானப்பிரகாசரின் வாழ்வை முன்னுதாரணப்படுத்தி, அருட்பணியாளர்களும் ஏனையவர்களும், பங்குகளிலும், நிறுவனங்களிலும் நாட்குறிப்புக்களை பேணவேண்டிய அவசியத்தையும், அதன் நன்மைத்தனங்களையும் தெளிவுபடுத்தினார். நூலுக்கு ஆய்வுரை வழங்கிய அருட்தந்தை மங்களராஜா அடிகளார் சுவாமி ஞானப்பிரகாசரின் பணிகளையும், அவர் அனுபவித்த நெருக்கடிகளையும் எடுத்துக்காட்டினார். அருட்பணி. பிலேந்திரன் அடிகளார் தனது ஏற்புரையில் சுவாமி ஞானப்பிரகாசரின் குணவியல்புகள் ம்ற்றும் அவரது வழி மரபுகளை எடுத்துக்காட்டி, தமிழுக்கும் திருமறைக்கும் அவர் ஆற்றிய பல தரப்பட்ட பணிகள் வரலாற்றுச் சான்றுமிக்கவை என்பதனை நிரூபித்தார்.

அத்தோடு இன்றைய நவீன காலகட்டத்திற்கேற்ப அதன் தேவைகளை நன்குணர்ந்த அமலமரித் தியாகிகள் உலகம் முழுவதும் தங்கள் தகவல்களை விரிவுபடுத்தவும், பணிகளை அறிமுகப்படுத்தவும், தரவுகளை பெறுவதற்கு இலகுவாகவும் இணையத்தளம் ஒன்றினையும் திறந்து வைத்துள்ளனர். ஆங்கிலத்தில் www.omijaffna.com மற்றும் தமிழில் www.amalamarithiyakikal.com என்ற முகவரியில் அருட்பணி. இரட்ணராஜ் அடிகளாரின் முயற்சியாலும், அயராத உழைப்பினாலும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. யாழ் அமதிகளின் அனைத்து விதமான செயற்பாடுகளையும், தகவல்களையும், ஆன்மீக சிந்தனைகளையும் எல்லோரும் இலகுவாகக் பெற்றுக்கொள்வதற்கு இது பெரிதும் உதவும் என்பதில் ஐயமில்லை.

---

இளைஞனே விழித்தெழுந்து ஒளி வீசு !

சலேசிய குருவாக மாறி இறைபணி செய்திட

## இயேசு உன்னை அழைக்கின்றார்!



### தூய டொன் பொஸ்கோவின் வாழ்க்கை வரலாறு

உலகம் போற்றும் இளைஞர்களின் தந்தை தூய டொன் பொஸ்கோ இத்தாலி நாட்டில் பெக்கி என்னும் சிற்றூரில் தந்தை பிரான்சிஸ் பொஸ்கோவுக்கும் தாய் மார்க்கரீத்தம்மாளுக்கும் நல்மகனான 1815ம் ஆண்டு ஆவணி மாதம் 16ம் நாள் பிறந்தார்.

தூய டொன்பொஸ்கோ இரண்டாம் வயதில் தனது தந்தையை இழந்தார். அவர் ஏழையாக இருந்தாலும் அயராது பாடுபட்டு 1841ம் ஆண்டு ஆனி மாதம் 15ம் நாளில் உன்னத குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார்.

இளைஞர் பணி செய்வதெ தன் உயிர் மூச்சு என்று இறுதிவரை இளைஞர்களுக்காகப் பணியாற்றி 1888ம் ஆண்டு தை மாதம் 31ம் திகதி இறைவனடி சேர்ந்தார். அவரின் உழைப்பின் பயனே இன்று 135க்கும் அதிகமான நாடுகளில் எம் சலேசியர்கள் இளைஞர் பணியாற்றுகின்றார்கள். இது எம் அனைவருக்கும் மகிழ்ச்சி தரும் செய்தி ஆகும்.

### நண்பா, உனக்கு ஓர் அன்பின் அழைப்பு!

1. வாழ வழி அறியாது அன்பிற்காய் ஏங்கி நிற்கும் இளைஞர்களின் குரல் உனக்குக் கேட்கின்றதா?
2. அல்லல்படும் இளைஞர்களுக்கு அன்புப்பணி செய்து இறைவழியில் அழைத்துச்செல்ல உனக்கு ஆசை இருக்கின்றதா?
3. அப்படியானால்.... இன்றே சலேசிய இல்லம் நோக்கி விரைந்திடு. சலேசிய குருவாக மாறி இறைபணி செய்திட இறை இயேசு உன்னை அழைக்கின்றார்!

*தொடர்புகளுக்கு:-*
*அருட்பணி. ஜெரால்டு ச.ச*
*தேவ அழைத்தல் இயக்குனர்*
*தொன் பொஸ்கோ குருமடம்*
*முருங்கன், மன்னார்.*
*T.P :- 0750978220*
*E-Mail :- arojeaj@gmail.com*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைத் திருச்சபைச் செய்திகள்

# நம்முடைய உள்ளங்களை இறைவன்பால் எழுப்பினால்தான் ஆண்டவர் எம்மை உயர்ந்த நிலைக்கு எடுத்துச் செல்வார்

## கொச்சிக்கடை அந்தோனியார் திருத்தலத்தில் கர்தினால் அதிமேதகு மல்கம் றஞ்சித் ஆண்டகை



மனித வாழ்க்கை அர்த்தமற்ற ஒரு வாழ்க்கை அல்ல. ஒருவர் தமது வாழ்க்கையின் முக்கியத்துவத்தை அறியாது இருப்பாரானால் இறைவனின் சித்தத்தை அறியாது இருப்பது என்பதே அர்த்தம். நம் ஒவ்வொருவரையும் இறைவன் விசேட விதமாக படைத்து உயர்ந்த நிலையில் வைத்திருக்கின்றார் என்றால் அதற்குக் காரணம் நாம் புனிதராக மாறுவதற்கே. பதவி, பட்டம், அந்தஸ்த்து என்பவற்றிலும் பார்க்க இறைவன் விரும்புவது நாம் ஒவ்வொருவரும் உலகிற்கு ஒளியாக, உப்பாக இருக்க வேண்டும் என்பதையே. நீங்கள் உலகிற்கு உப்பாகவும், ஒளியாகவும், இருப்பீர்களாக என்று இயேசு மொழிந்திருக்கின்றார். நாம் நம்முடைய உள்ளங்களை இறைவன்பால் எழுப்பினால்தான் ஆண்டவர் எம்மை உயர்ந்த நிலைக்கு எடுத்துச் செல்வார். இவ்வாறு கொழும்பு உயர்மறைமாட்ட பேராயர் கர்தினால் மல்கம் றஞ்சித் ஆண்டகை அவர்கள் தெரிவித்தார். கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் திருவிழாவை முன்னிட்டு நடாத்தப்பட்ட மாலை ஆராதனையில் கலந்துகொண்டு மறையுரையாற்றும்போதே கர்தினால் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து அங்கு கூறியதாவது,

புனித அந்தோனியார் ஓர் உயர்ந்த நிலையைப் பெறுவதற்குக் காரணம் அவர் தன்னுடைய திறமைகளை ஆற்றல்களை, ஆண்டவருக்கு அர்ப்பணித்து அவரை முற்று முழுதாக அறிந்து அவரோடு உறவுகொண்டதே ஆகும். ஆகவே கிறிஸ்தவர்களாகிய நாம் உலகளாவிய பொருட்களில் நிலைத்து இருந்தாலும் ஆண்டவரை அறிவோமானால், எம்முள்ளத்தை அவருக்குக் கொடுப்போமானால் இந்த உலகளாவிய சிறையில் இருந்து விடுபட முடியும் என்றார்.

மேலும் கர்தினால் தனது உரையில் கொழும்பு துறைமுக அதிகார சபைக்கு சொந்தமான காணியின் ஒரு பகுதியை தேவாலயத் தேவைகளுக்காக வழங்குவதற்கு தீர்மானம் எடுத்த மேன்மை தங்கிய ஜனாதிபதி உட்பட அனைவருக்கும் தமது நன்றியைத் தெரிவித்துக்கொண்டார்.

இத்திருத்தலத்தின் பரிபாலகர் அருட்தந்தை கிளமன்ற் றொசைறோ அடிகளார், உதவிப் பரிபாலகர் அருட்தந்தை ஜீட் லக்ஷாந்த ஆகியோர் இவ்விழாவைச் சிறப்புற ஒழுங்கு செய்திருந்தனர்.

## கொழும்புப் பாடசாலை மாணவர்கள் உரோமையில் இசை நிகழ்ச்சி

கொழும்பு புனித சூசையப்பர் கல்லூரி, கொட்டாஞ்சேனை நல்லாயன் கன்னியர் பாடசாலை, நீர்கொழும்பு மரிஸ்டெலா வித்தியாலயம், மற்றும் ஆவே வித்தியாலயத்தைச் சார்ந்த மாணவ மாணவிகள் பங்குபற்றிய, திரு பிரான்சிஸ் த. அல்மேடா அவர்கள் பயிற்றுவித்த, 'உரோமை கனவு' என்னும் இசை நிகழ்வு இத்தாலியில் உள்ள வத்திக்கான், மற்றும் உரோமையில் அரங்கேற்றப்பட்டது.

இந்நிகழ்வின்போது மாணவ மாணவிகளின் பாடசாலைகளை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் நல்லாயன் கன்னியர் பாடசாலையின் அருட்சகோதரி ரேனுக்கா, புனித சூசையப்பர் கல்லூரியின் இயக்குனர் அருட்தந்தை சில்வெஸ்டர் ரணசிங்க அடிகளார் ஆகியோர் மாணவர்களோடு உரோமைக்குச் சென்றிருந்தனர். அதிமேதகு கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை, மொன்சிஞ்ஞோர் நெவில் ஜோ அடிகளார் ஆகியோர் இந்நிகழ்வை உரோமையில் நடத்த ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தனர்.

## யாழ் மறைமாவட்டத்தில் வருடாந்த பொதுநிலையினர் மாநாடு

### பிரதம விருந்தினராக இளைப்பாறிய ஆசிரியர் திரு. ஏ. எஸ். அகஸ்ரின்

யாழ் மறைமாவட்ட பொதுநிலையினரின் வருடாந்த மாநாடு 29.04.2012 அன்று ஞாயிற்றுக்கிழமை புனித பத்திரிசியார் கல்லூரி மத்தியூஸ் மண்டபத்தில் கழகத்தின் தலைவர் திரு. அலெக்ஸ் அமலரட்ணம் தலைமையில் இடம்பெற்றது. மறைமாவட்டத்தில் உள்ள 46 பங்குகளில் இருந்து 183 பொதுநிலைப் பிரதிநிதிகளுடன் கழகத்தின் செயற்குழு உறுப்பினர்கள் பக்திச்சபைகளின் மறைமாவட்ட அமைப்புக்களின் தலைவர், செயலாளர் மறைக்கோட்ட இணைப்பாளர்களான அருட்பணியாளர்கள் உட்பட சுமார் 230 பங்கேற்பாளர்கள் கலந்துகொண்டனர்.

பிரதம விருந்தினராக மறைமாவட்டத்தின் மூத்த பொது நிலைப் பணியாளரான இளைப்பாறிய ஆசிரியர் திரு. எ. எஸ். அகஸ்ரின் அவர்கள் அழைக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார். சிறப்பு விருந்தினராக மறைமாவட்ட குருமுதல்வர் அருட்பணி. கலாநிதி யஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்கள் கலந்துகொண்டார்.

இந்நிகழ்வில் பொதுநிலையினர் தினம் 2011 தொடர்பான பரிசளிப்பு விழா, கழகத்திற்கான புதிய யாப்பு அறிமுகம், சிறப்புத் திருப்பலி, மறைக்கோட்ட செயற்குழுக்கள் தெரிவு மறைமாவட்ட புதிய செயற்குழு தெரிவு என்பன இடம்பெற்றன.

பிற்பகலில் திருமறைக்கலாமன்ற உதவி இயக்குனர் திரு. யோண்சன் ராஜ்குமார் தலைமையில் 'கலையரங்கு' இடம் பெற்றது. இதில் மறை மாவட்ட ரீதியாக போட்டிகளில் முதலிடம் பெற்ற 'வில்லுப்பாட்டு' 'விவாத அரங்கு' என்பன இடம்பெற்றன. இந்த இரு நிகழ்வுகளும் யாழ் சுண்டுக்குழிப் பங்கைச் சேர்ந்த குழுக்களினால் அரங்கேற்றப்பட்டன. மேலும் இந்த மாநாட்டில் பொதுநிலையினர் கழகத்திற்கான கொடி (Flag) ஒன்று வடிவமைக்கப்பட்டு ஏற்றப்பட்டதுடன் எழுச்சிக் கீதம் ஒன்றும் புதிதாக இயற்றப்பட்டு முதன்முதலாக இசைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்க நிகழ்வுகளாக அமைந்தன.

இந்த வருடாந்த நிகழ்வு மறைமாவட்ட பொதுநிலையினர், இளையோர், அன்பிய ஆணைக்குழுவின் இயக்குனர் அருட்பணி. ம.வி.இ.இரவிச்சந்திரன் அடிகளாரின் நெறிப்படுத்தலில் இடம்பெற்றது.

## கத்தோலிக்கக் கலை இலக்கிய வட்டத்தின் வெள்ளி விழாவில் சட்டத்தரணி கௌரவிப்பு

யாழ் மறைமாவட்ட கத்தோலிக்க கலை இலக்கிய வட்டத்தின் வெள்ளி விழா நிகழ்வுகள் அண்மையில் யாழ் அகவொளி நிலையத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வின்போது சிறப்பு நிகழ்வாக சமூக சமயப் பணிகளில் ஈடுபடும் சட்டத்தரணி T. M. அன்ரனிப்பிள்ளை அவர்களின் பணியைப் பாராட்டி 'சமூக ஜோதி' எனும் பட்டம் பிரான்சிஸ்கன் மாகாணத்தலைவர் அருட்சகோதரர் தோவியாஸ் அவர்களால் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் பாஷையூர் மறைக்கல்வி மாணவர்களால் கலைநிகழ்வும் மேடையேற்றப்பட்டது. இந்நிகழ்வில் சிறப்புரையை திரு. R. A திலகரட்ணம் அவர்கள் வழங்கி சிறப்பித்தார்.

## ஜோசவ்வாஸ் இறையியல் கல்வியக பட்டமளிப்பு விழா

கொழும்பு உயர் மறைமாவட்ட ஜோசவ்வாஸ் இறையியல் கல்வியக பட்டமளிப்பு விழா கடந்த வைகாசி மாதம் 19ம் திகதி சனிக்கிழமை மாலை 4.00 மணிக்கு மருதானை புனித சூசையப்பர் கல்லூரி பொஞ்சின் மண்டபத்தில் கொழும்பு உயர் மறைமாவட்ட பேராயர் அதிமேதகு கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகையின் தலைமையில் நடைபெறுகிறது.

கொழும்பு உயர் மறைமாவட்டத்தில் முதன் முதலாக தமிழ் மொழியிலான இறையியல் பட்டமளிப்பு நிகழ்வு இது என்பது குறிப்பிடத்தக்கது. இதில் 4 பேர் இறையியல் கல்வியக பட்டமளிப்பு பெறுகின்றனர். ஜோசவ்வாஸ் இறையியல் கல்வியகமானது உரோமை உர்பானிய பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.


## பிசப் சவுந்தரம் மீடியா சென்ரரில் கலைமானி – முதுமானி பட்டங்கள்

யாழ்ப்பாணத்தில் அருட்திரு. ரூபன் மரியாம்பிள்ளை அடிகளாரால் ஆரம்பிக்கப்பட்ட பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர் இந்திய கோயம்புத்தூர் பாரதியார் பல்கலைக்கழகத்துடன் இணைப்புப்பெற்று அதன் கல்வி நிலையமாக செயல்படவுள்ளது. இங்கு BSC (Visual Communication) PG Diploma (Communicative English ) MA (Mass Media and Journaliam) ஆகிய மூன்று கற்கை நெறிகளும் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது. பாடநெறி பரீட்சை சான்றிதழ் அனைத்தும் பாரதியார் பல்கலைக்கழகத்தின் ஒழுங்குமுறைக்கேற்ப மேற்கொள்ளப்படும்.

யூன் 2012இல் பதிவுகளை மேற்கொள்வோர் மே 2012 இல் பரீட்சைக்கு தோற்ற முடியும். அடிப்படைத் தகமைகள், கட்டணம், வகுப்பு நாட்கள் போன்ற விபரங்களை பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர் தொலைபேசி இலக்கமான 021-2226085 எனும் இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும். சனி, ஞாயிறு தினங்களில் நேரடியாக வந்து அனுமதிப் பத்திரம் போன்ற விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம். கல்வி கற்போர் தொகை மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் உடன் தொடர்புகொண்டு பதிவு செய்யவும்.

**அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை,**
**இயக்குனர், பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர்**
**இல. 891 ஆஸ்பத்திரி வீதி,**
**யாழ்ப்பாணம். தொலைபேசி இல. 021 2226085**

## கண்ணி வெடிகளை முற்றாக அகற்ற இன்னும் பத்து ஆண்டுகள்



நாட்டின் வடக்கே யுத்தம் நடைபெற்ற பகுதிகளில் புதைக்கப்பட்டுள்ள கண்ணி வெடிகளை அகற்றி முடிப்பதற்கு இன்னும் பத்து ஆண்டுகள் எடுக்கும் என ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிறுவனத்தை (U.N.D.P) சேர்ந்த அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

## அனைத்துப் பல்கலைக்கழக கத்தோலிக்க மாணவர் பயிற்சிப் பட்டறை

தேவத்தை இலங்கை மாதா பேராலய வளாகத்திலுள்ள தியான இல்லத்தில் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, பெரதெனியா, கொழும்பு பிரதேசங்களிலுள்ள ஒன்பது பல்கலைக்கழகங்களின் கத்தோலிக்க மாணவர்களுக்கான வருடாந்தப் பயிலரங்கு பெப்ரவரி 16-19 வரை இடம்பெற்றது. இயக்குநர்கள் முறையே அருட்பணியாளர்கள் இராசேந்திரம் ஸ்ரலின், அகஸ்ரின் நவரட்ணம் (நவாஜி), எகட்டன் பெரேரா, சமன் மக்சிமுஸ் ஆகியோர் சமூகமளித்திருந்தனர். அனைத்துப் பல்கலைக்கழகங்களையும் சார்ந்த 100 பேர் வருகை தந்திருந்தனர்.

பயிலரங்கின் மையப்பொருளாக 'ஞானத்தை அடையும் வழி' என்பது தேர்ந்தெடுக்கப்பட்டது. பயிலரங்கு உரைகளாக, பயிற்சிகளாக, குழுப்பகிர்வாக அமைந்திருந்தது. தேர்ச்சிபெற்ற வளவளர்கள் பயிலரங்கை நெறிப்படுத்தினர். தமிழ், சிங்கள மாணவர்கள் கொண்ட பயிலரங்காக அமைந்ததால். உரைகளைத் தமிழ் மாணவர்களுக்காக அருட்பணி. அகஸ்ரின் நவரட்ணம், இராசேந்திரன் ஸ்ரலின் மற்றும் கொழும்புப் பல்கலைக்கழக மாணவன் சஞ்ஜித் எட்வேட் மொழி பெயர்ப்பினைச் செய்தனர்.

அருகிலுள்ள அருளாளர் யோசவாஸ் அருங் காட்சியகத்திற்கு மாணவர்கள் அழைத்துச் செல்லப்பட்டனர். இது பெரும்பாலும் ஓவியங்கள், படங்கள் என்பனவற்றைக் கொண்டதாக அமைந்தது. பின்னர் மாணவர்கள் கொழும்பு மறை மாவட்டத்தின் கத்தோலிக்க அருங்காட்சியகத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர். இலங்கை மாதா ஆலயத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு அது உருவான வரலாற்று விளக்கம் அளிக்கப்பட்டது. கருதினால் கூறேயின் புனித வாழ்வு பற்றிய விளக்கமும் இடம்பெற்றது.

அனைவரும் அன்னையின் பாதத்தில் செபமாலைத் தியானத்தில் ஈடுபட்டனர். இறுதிநாளில் அனைத்து மாணவர்களுக்கும் பயிலரங்கச் சான்றிதழும் நினைவுப் பரிசில்களும் வழங்கப்பட்டன. ஞானத்தை நாட வேண்டும் என்ற ஆவலையும், வாழ்வின் முக்கிய மதிப்பீடுகள், சுயவிழிப்புணர்வு என்பனவற்றையும் இப்பயிலரங்கின் மூலம் மாணவர்கள் பெற்றுக்கொண்டனர்.

## கொழும்பு கத்தோலிக்க அச்சகத்திற்கு புதிய இயக்குனர்

கொழும்பு உயர் மறைமாவட்ட கத்தோலிக்க அச்சகத்தின் இயக்குனர் அருட்தந்தை ரொஹான் டி அல்விஸ் அடிகளார் இடம் மாற்றம் பெற்றுச் செல்வதால், அவரது இடத்திற்கு அருட்தந்தை எட்ரிச் ரொட்ரிகோ அடிகளார் நியமிக்கப்பட்டிருக்கின்றார்.

## கண்டி மறைமாவட்டத்திற்கு புதிய குரு

தியாக்கோன் திருத்தொண்டர் சற்குணராஜா அவர்கள் கடந்த 8.05.2012 அன்று கண்டி மறைமாவட்ட ஆயர் மேதகு வியானி பெர்ணான்டோ ஆண்டகை அவர்களினால் கண்டி புனித அந்தோனியார் பேராலயத்தில் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார்.

கண்டி மறைமாவட்டத்தின் பட்டல்கல பங்கை சேர்ந்த, திருமதி அருள்மேரி மற்றும் காலம் சென்ற திரு யேசடியான் ஆகியோரின் புதல்வரான புதிய குரு சற்குணராஜா தனது முதல் திருப்பலியை பொகவந்தலாவ புனித செபமாலை மாதா ஆலயத்தில் ஒப்புக்கொடுத்தார்.

*தகவல்:- எந்தனி பெனடிக்ட், திகன*

## யாழ் மறைமாவட்டத்திற்கு இரண்டு புதிய குருக்கள்

யாழ் மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்சகோதரர்கள் திருச்செல்வம் குயின்சன் பெர்னாண்டோ, பெனடிக்ற் சதீஸ்குமார் ஆகிய இருவரும் 24.05.2012 வியாழக்கிழமை யாழ் ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்களால் யாழ் பேராலயத்தில் காலை 09.00 மணிக்குக் குருக்களாகத் திருநிலைப்படுத்தப்பட்டனர்.

## தமிழ் கத்தோலிக்க செய்தி லங்கா தொலைக்காட்சியில் தினமும் காலைத் திருப்பலி

தமிழ் கத்தோலிக்க செய்தி லங்கா தொலைக்காட்சியில் **(TCNL TV)** மே மாதம் 01ம் திகதி முதல் நேயர்கள் காலை 5.30 மணி முதல் 6.30மணி வரை திருப்பலி பூசையைக் காணுகின்ற ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதுபாவனையால் ஏற்படும் சீரழிவும் திருப்புமுனை புதுவாழ்வகத்தின் பணியும்

எழுத்துருவாக்கம் :
அருள் ஞானசீலன்,
முகாமைளாளர், வர்த்தக வங்கி,
மன்னார்.



நீண்ட காலமாக மன்னார் மக்களை வாட்டி வதைத்துக் கொண்டிருக்கும் தீராப் பிணிகளில் ஒன்று மிதமிஞ்சிய மதுப் பாவனையாகும். கரையோரமாக அமைந்துள்ள குடிசைகளில் வாழும் வறுமையால் பீடிக்கப்பட்ட மக்களிடையே போதையூட்டும் மதுபாவனைப் பழக்கம் அதிகமாகக் காணப்படுகின்றது. பல வருடங்களாகக் கடுமையாக உழைத்தும் வறுமைப்பிடியில் இருந்து மீளமுடியாத காரணம் மதுவுக்கு அடிமைப்பட்டுள்ளமையே என்று கண்டறியப்பட்டுள்ளது.

2005ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட புள்ளிவிபரவியல் திணைக்கள ஆய்வின்படி மன்னாரில் ஒரு தொழிலாளியின் ஆகக்குறைந்த மாத வருமானம் ரூபா16,725 என்றும் தேசிய மட்டத்தில் ரூபா 20,048 என்றும் தெரியவருகின்றது.

மிதமிஞ்சிய மதுபாவனைக்கான பொதுவான காரணங்கள் எவை என்று ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். இது தொடர்பாக CRADA என்றழைக்கப்படும் திருப்புமுனை புதுவாழ்வகம் மக்கள் மத்தியில் மது பாவனையால் ஏற்படும் சீரழிவு பற்றிய விழிப்புணர்வை உண்டாக்க எடுக்கும் நடவடிக்கைகள் பற்றியும் எடுத்தியம்புவது இக்கட்டுரையின் மற்றுமொரு நோக்கமாகும்.

வடமாகாண யாழ்ப்பாண அமலமரித்தியாகிகள் சபையினரால் (OMI) நடாத்தப்படும் இத்திருப்புமுனை புதுவாழ்வகம் பலதரப்பட்ட முயற்சிகளை, பல தடைகளுக்கு மத்தியிலும் எடுத்து மனம் சோராமல் உறுதியாக நின்று இப்பிரச்சனைக்கு தீர்வுகாண விழைவது பாராட்டுக்குரியதாகும்.

### "அல்கோகொலிசம்" மதுபோதைக்கு அடிமை என்றால் என்ன?

மதுபானம்மீது மிதமிஞ்சிய அவாவுடன் கட்டுப்படுத்த முடியாத நிலையை எய்தி, மது அருந்தினாலேயன்றி, உடலியக்கம் இல்லை என்றவாறு, மதுவுக்கு அடிமையாவதே அல்கோகொலிசம்" எனப்படும்.

### ஒருவனை மதுவுக்கு அடிமையாக்கக்கூடிய ஆபத்தான நிலைகள் எவை?

தொடர்ச்சியாகவும் நேரக்கட்டுப்பாடின்றியும் மது அருந்தி, உடலியக்கத்திற்கே மதுவில் தங்கியிருக்கும் நிலையாகும்.

### மது அருந்துவதால் ஏற்படும் விளைவுகள் யாவை?

மது ஒருவனின் மத்திய நரம்பு மண்டலத்தை தாக்கி உடலியக்க உறுப்புக்களைச் செயலிலக்கச் செய்கின்றது. மது அருந்தும்போது அது ஆரம்பத்தில் உணர்வுகளைத் தூண்டி, மது அருந்துவது தொடர்ந்தால், உறுப்புக்களின் செயலியக்கத்தைக் குறைத்துவிடும்.

தொடர் மதுபாவனை, முறையில் உள்ள இரசாயன சம பலத்தை அழித்து, உடலியக்கம் மதுவின்றிச் செயற்படமுடியாத நிலையை ஏற்படுத்தும். மூளையின் இரசாயன செயற்பாடு மாற்றம் அடையும்போது மது அருந்தல் தணியாத தாகத்தை உண்டுபண்ணி மது அருந்தினால் மட்டுமே சுகமாக, நலமாக இருக்க முடியும் என்ற எண்ணத்தைத் தோற்றுவிக்கும். மது அருந்துவது ஓர் இன்பமான உணர்வினை ஏற்படுத்தி படிப்படியாக மது உடலில் ஒரு மயக்க நிலையை உண்டாக்கிறது.

### மதுபாவனையைத் தூண்டும் காரணிகள் எவை?

மதுபாவனை தொடர்பான பிரச்சினைகளுக்கு பல காரணங்கள் உண்டு. சமூகக் காரணங்களாக, குடும்ப உயர் அந்தஸ்து அல்லது செல்வாக்கு, மேலாண்மை, தாராளமாக எங்கும் எப்போதும் கிடைக்கக்கூடிய விநியோகம், உளவியல் ரீதியான மன அழுத்தம், வாழ்க்கையின் இயல்புநிலையைச் சமளிக்க முடியாத சுமை என்பவற்றை எடுத்துக்கொள்ளலாம்.

மேலும் சக மதுபான பாவனையாளர்களின் சீண்டுதல், தவிர்க்க முடியாததும் தொடர்பான சந்தர்ப்பங்கள் என்பனவும் பங்களிப்புச் செய்கின்றன. மேலும் உளரீதியான காரணிகளும் இந்தப் பழக்கத்துக்கும் தூபமிடுகின்றனவாயும் அமைகின்றன. ஒருவர் தன்னைப்பற்றிய தாழ்வு எண்ணம், உற்சாகமின்மை, அதீத ஆதங்கம், பயம், நெருங்கிய உறவினரின் இழப்பு, கவலையால் ஏற்படும் தலையிடி, ஓயாத உடல் நலமின்மை, பலதரப்பட்ட உள உடல் உபாதைகள், தூக்கமின்மை, குடும்பத்தில் குழப்பநிலை முதலியனவாகும். இந்த மிதமிஞ்சிய மதுபாவனையை, தீவிரமாக எழும் உணர்ச்சியை அவா எனலாம்.

### மதுபாவனையால் எழும் பாரிய சமூகச் சீரழிவுகள்

மதுபாவனையால் ஏற்படும் விளைவுகள் பாரதூரமானவை மட்டுமல்லாது ஒருவனின் வாழ்வுக்கே சு.ாதிகட்டக்கூடியது. உதாரணமாக மிதமிஞ்சிய மதுபாவனை பயங்கரமான புற்றுநோய்க்கு வித்திடுகிறது. ஈரல், தொண்டை, சிறுநீரகம், மலக்குடல், பெருங்குடல் ஆகிய உறுப்புக்களில் புற்றுநோய் ஏற்பட வழிசமைக்கும். உடலில் உள்ள எதிர்ப்புச் சக்தியை செயலிழக்கச் செய்கிறது. கர்ப்பிணித் தாயின் உதரத்தில் இருக்கும் சிசுவின் மூளையைப் பாதிக்கிறது.

## திருப்புமுனை புதுவாழ்வகம் என்றால் என்ன?

இது பொது மக்களுக்கான செலவழிவற்ற பொதுச்சேவை அமைப்பாகும். இது மதுபாவனையாளர்களையும், மது போதைக்கு அடிமைப்பட்டவர்களையும், அவர்களது குடும்பங்களையும் மீட்டெடுத்து நல்வாழ்வு அளிப்பதற்காக அருட்பணி. டேவிற் வின்சன் பற்றிக் அ.ம.தி. அடிகளாரால் 2004ம் ஆண்டு பேசாலைப் பங்கில் ஆரம்பிக்கப்பட்டது.

மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு இராயப்பு யோசேப்பு ஆண்டகை அவர்கள் இப்பணியை மறைமாவட்டத் திட்டமாக முன்வைத்து திருப்புமுனை புதுவாழ்வு மையத்தை தோட்டவெளியில் 2006ம் ஆண்டு ஐப்பசி மாதம் 10ம் திகதி அங்குரார்ப்பணம் செய்துவைத்தார்.

இப்பணியானது 2009ம் ஆண்டு மாசி 02ம் திகதி அமலமரித்தியாகிகளின் சிறப்புப் பணியாக வடமாகாண முதல்வர் அருட்தந்தை போல் நட்சத்திரம் அ.ம.தி. அடிகளாரால் பொறுப்பெடுக்கப்பட்டு தொடர்ந்து அமலமரித்தியாகிகளினால் முன்னெடுக்கப்படுகிறது. அருட்ணி. டேவிற் வின்சன் பற்றிக் அ.ம.தி. அடிகளார் திருப்புமுனை புதுவாழ்வகத்தின் இயக்குனராக செயற்படுகிறார். இவர் 25 வருடங்களுக்கு மேலாக சிறப்பான குருத்துவப் பணியை ஆற்றியவர். இப்போது இப்பணி புரிவதில் தம்மை அர்ப்பணித்துள்ளார். அடிகளார் இப்பணி தொடர்பாக ஆய்வுகளை மேற்கொண்டு மதுபோதை தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்தும் திட்டங்களை செயற்படுத்திவருகிறார். அத்தோடு மக்களின் வாழ்வில் மனமாற்றத்தையும் அதனூடாக முன்னேற்றத்தையும் சமூகப்பிரச்சினைகளுக்கு தீர்வுகளையும் கொண்டுவர முடியும் என நம்புகிறார். அருட்தந்தை அவர்கள் தமது சகோதர குருக்களுடனும் தாமாக உதவ முன்வரும் பணியாளர்களுடனும் இணைந்து ஒரு குழுவாக திருப்புமுனை நிர்வாகத்தை ஒழுங்கமைத்து நடாத்திவருகிறார்.

அமலமரித் தியாகிகளினால் நடாத்தப்படும் இத்திருப்புமுனை புதுவாழ்வகம், கத்தோலிக்கரை மட்டுமல்லாது பிறசமயத்தை உள்ளடக்கி அவர்களுக்கும் சேவையாற்றுகிறது. மதுபோதைக்கு அடிமையானவர்கள் சிலவேளை பலவந்தமாக குடும்பத்தினரின் ஒத்துழைப்புடன் இம்மையத்திற்கு கொண்டுவரப்படுகிறார்கள். பலதரப்பட்ட சமூகப்பிரச்சினைகளில் இருந்து இங்குவரும் நபர்களை சீர்திருத்தம் செய்வது கடினமாகவும், சிலவேளைகளில் பிரச்சனைகளுக்கு முகம்கொடுக்க வேண்டியதாகவும் உள்ளது.

### திருப்புமுனை புதுவாழ்வகத்தில் வழங்கப்படும் சிகிச்சையோடு கூடிய புதுவாழ்வு

இந்நிறுவனத்துக்கு புதுவாழ்வுபெற வந்துகொண்டிருக்கும் ஏராளமான மக்களின் தேவைகளைப் பூர்த்திசெய்யும், மையமாக திருப்புமுனை விளங்குகிறது. பாதிப்புற்ற பயனாளிகளுக்கு உள, உடல் நலம் பெற தரமான மருத்துவ சேவையை வழங்குகிறது. மதுபோதையால் ஏற்பட்டுள்ள உடல்நலக்குறையை சீர்செய்து வலுவுள்ளதாக்க சத்துள்ள போசாக்கை வழங்குகிறது. அத்துடன் தேகாரோக்கிய நலனில் அக்கறை செலுத்துகிறது. தேகப்பியாசப் பயிற்சியும் வழங்கப்படுகிறது.

### மருத்துவ பராமரிப்புச் சேவை

உடம்பில் மதுபாவனையால் ஏற்பட்டுள்ள நச்சுத்தன்மையை அழித்தொழிக்க, தொடர்ச்சியாக ஏழு நாட்களுக்கு மருத்துவ சேவை வழங்கப்படுகிறது. பின்வரும் நோக்கங்களுக்காக இந்த ஆரம்ப மருத்துவ சிகிச்சை நடாத்தப்படுகிறது.

**அ.** பயனாளிக்கு ஆரம்ப மருத்துவ உதவிகள் வழங்கும்போது ஏற்படக்கூடிய உயர் இரத்த அழுத்தம், நித்திரையின்மை போன்ற பாதிப்புக்கள் ஏற்படாவண்ணம் பாதுகாப்பதற்காக.

**ஆ.** மருத்துவ உதவிகள் வழங்கப்படும்போது ஏற்படக்கூடிய பக்கவிளைவுகளில் இருந்து விடுபடுவதற்காக.

**இ.** பயனாளி தமது வழமையான நித்திரை செய்யும் தன்மையையும் உணவருந்தும் பழக்கவழக்கங்களையும் மாற்றியமைப்பதற்காக.

### உளரீதியான மருத்துவ உதவிகள்

1. தியானித்து செபிக்க வழிகாட்டல்.
2. கருத்துரைகளும், அறிவுரைகளும் வழங்குதல்.
3. குழுமுறையிலான உடல்நலம் பேணும் பயிற்சிகள் வழங்கல்.



அருட்பணி.
வின்சன்ற் பற்றிக் அடிகளார்

4. மிதமிஞ்சிய மதுபாவனையால் பாதிப்புற்றவர்களுக்கு பயிற்றப்பட்ட உளநல ஆலோசனைகளைக் கொண்ட குழு மூலம் அறிவுரைகளும் மீள்வாழ்விற்கான ஆலோசனைகளும் வழங்குதல் முதலியவைகளாகும்.

### குழும முறையில் உளநல சேவை

இப்புதுவாழ்வு திருப்புமுனை பயனாளிகளுக்கு குழும முறையிலான உளநல சேவையை வழங்குகின்றது. இம்முறையானது பயனாளியின் அந்தரங்க, மறைவான, அல்லது அடிமனதில் மறைந்து கிடக்கும் நீணட மனக்காயங்களை உளநல ஆலோசகர்கள் புரிந்துகொள்ள உதவுகிறது. இந்நிகழ்வு அல்லது உளநல உரையாடல் இரண்டு மணித்தியாலயங்கள் நீடிக்கும். குழு நிலையிலான கருத்துப் பரிமாற்றப் பயிற்சிகள் வழங்கப்படும்போது பயனாளிகள் சுயமாக தங்கள் கருத்துக்களையும் எண்ணங்களையும் ஏனையோருடன் பகிர்ந்துகொள்ளவும், தங்கள் குழுவினரோடு ஆடிப்பாடி தங்களை ஈடுபடுத்திக்கொள்ளவும் ஊக்குவிக்கப்படுகிறார்கள். இம்முறையானது சுதந்திரமாக நடைபெறும்போது பயனாளிகளின் உளத்தாக்கங்கள் படிப்படியாக குறைந்துபோவதற்கு ஏதுவாக அமைகிறது.

### தனியாள் உளநல ஆலோசனை வழங்குவதன் நோக்கம்

தனியாள் உளநல ஆலோசனை உரையாடல்கள் 45 நிமிடங்களைக் கொண்டதாக அமையும். இவ்வாறான உரையாடல் எட்டு அல்லது ஒன்பது முறை நடைபெறும். உளநல மருத்துவ ஆலோசகர் பயனாளியையும் அவரது குடும்ப அங்கத்தவர்களையும் தனித்தனியாக அழைத்து ஆலோசனை வழங்குவார்.

1. பயனாளி முழுமையாக மது அருந்துவதினின்றும் தன்னை விலக்கிக்கொள்ள உதவுவதற்காக.
2. மதுபாவனையால் ஏற்பட்டுள்ள உடல், உள பாதிப்புக்களை அறிந்து உணர்ந்து அவைகளுக்கான பரிகார நடவடிக்கைகளை எடுப்பதற்காக.
3. பயனாளிகளுக்கு இத்தீய பழக்கத்தினால் ஏற்படக்கூடிய உளக்கிளர்ச்சிக்கான கோபம், பயம், தனிமை, வெட்கம் போன்ற தீவிர உணர்வுகளை அறிந்து அவற்றை ஏனையோருடன் பகிர்ந்துகொள்வதின் மூலம் அவற்றினின்று விடுபட ஆலோசனைகள் வழங்குவதற்காக.

### குடும்ப உளநல ஆலோசனை சேவை

குடும்பத்துக்கான அதாவது கணவன் மனைவி இருவரையும் ஒன்றாக அமர்த்தி ஆலோசனை வழங்கும் சேவையானது அவர்களிடையே ஏற்படக்கூடிய பலதரப்பட்ட பிரச்சனைகளைப் புரிந்துகொள்வதற்கும் தீர்வு வழங்குவதற்கும் பேருதவியாக அமையும்

பயனாளிகள் மனைவியர் அல்லது அவர்களுக்குத் துணையாய் இருப்பவர்கள், பயனாளிகள் நிரந்தரமாக குணமடைவதற்கும் திருப்புமுனை மையத்தில் முழுமையான உடல் உள சிகிச்சை பெற்று தம் இல்லங்களுக்குத் திரும்பியபின் மீண்டும் பழைய நிலைக்குத் திரும்பாதிருக்க எப்படி அவர்களுடன் நடந்துகொள்ள வேண்டும் என்றும் ஆலோசனை மூலம் வழிநடத்தப்படுகிறார்கள். ஒரு பயனாளி முழுமையாக மாற்றம் பெற குறைந்தபட்சம் 21 நாட்களாவது எடுக்கும். ஆனால் ஒருவர் பாரதூரமாக மதுபான பாவனையால் மிகமோசமாகப் பாதிப்புற்றிருப்பின் திருப்புமுனை புதுவாழ்வகத்தில் கூடுதலான நாட்கள் தங்கியிருந்து முழுமையான நன்மை அடைய அவரே விருப்பம் தெரிவிக்கிறார் என்றும் அறியக்கூடியதாக இருக்கிறது.

### முடிவாக

திருப்புமுனை மையமானது மன்னார் பட்டணத்திலிருந்து 8 கிலோமீற்றர் தூரத்திலுள்ள தோட்டவெளி என்ற இடத்தில் 6 ஏக்கர் நிலப்பரப்புக் காணியில் அமைந்துள்ளது. இந்நிறுவனம் தனது நாளாந்த செலவினங்களுக்கும், நடவடிக்கைகளுக்கும் பிற நிதி வழங்கும் நிறுவனங்களில் தங்கியிருந்தாலும், தன்னிறைவு காணும் நோக்கில் சிறிய வருமானத்தைத் தரும் முயற்சியில் கவனம் செலுத்திவருகிறது.

அவையாவன, பாண் தயாரிப்பு, கோழிப்பண்ணை நடத்துதல், விவசாயம் செய்தல், மேட்டு நிலப் பயிர்ச் செய்கை முதலியன. இம் மையத்தில் இருப்பவர்களுக்கு தச்சுத்தொழில் பயிற்சி, மிருக வேளாண்மை பயிற்சி போன்றவையும் வழங்கப்படுகின்றன. இம்மையத்தின் ஊடாக அது சமூகத்துக்கு ஆற்றிவரும் சேவையை மதித்து அதன் பணியை விருத்திசெய்ய விரும்பும் நல் உள்ளங்கள், தங்களது நன்கொடைகளை வழங்கி ஆதரவு வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகத் திருச்சபைச் செய்திகள்

# உண்மையைப் புறக்கணிக்கும் கலாச்சாரத்தை ஒதுக்கிவிடுங்கள்

## திருத்தந்தை அழைப்பு



இக்காலத்தில் சாத்தானின் மாயக்கவர்ச்சிகளைப் புறந்தள்ளுவது என்பது, உண்மைக்கு முக்கியத்துவம் கொடுக்காத ஒரு கலாச்சாரத்தைப் புறக்கணிப்பதாகும் என்று திருத்தந்தை 16ம் பெனடிக்ட் கூறினார். "திரு அவையில் திருமுழுக்குத் திருவருட்சாதனம்" என்ற தலைப்பில் உரோம் மாவட்டம் தொடங்கியுள்ள ஆண்டுக் கூட்டத்தில் யூன் 11ஆம் திகதி மாலை உரையாற்றிய திருத்தந்தை இவ்வாறு கூறினார்.

"தந்தை, மகன், தூய ஆவியின் பெயரால்" என்ற திருமுழுக்குத் திருவருட்சாதனச் சடங்கு முறைகள் பற்றிய சிந்தனைகளைப் பகிர்ந்துகொண்ட திருத்தந்தை, திருமுழுக்கினால் நாம் மூவொரு கடவுளின் வாழ்வில் இருக்கின்றோம், கடவுளுக்கேயுரிய புதிய வாழ்வோடு அவரோடு தனிப்பட்ட விதத்தில் ஒன்றித்திருக்கிறோம். கடவுளில் ஐக்கியமாகி இருக்கின்றோம் என்றும் தெரிவித்தார்.

இதனால் கடவுள் நமக்கு எட்டாத தூரத்தில் இல்லை, ஆனால் நாம் கடவுளில் இருக்கின்றோம். கடவுள் நம்மில் இருக்கின்றார் என்றும் உரையாற்றிய திருத்தந்தை, இந்த உறவு கடவுளோடு தொடங்குகிறது என்றும் கூறினார்.

திருமுழுக்கு திருவருட்சாதனம் நம் வாழ்வு முழுவதும் என்றும் இருந்து நம் வாழ்வில் தீமையையும் விலக்குகின்றது என்றும் குறிப்பிட்டுப் பேசிய திருத்தந்தை, கிறிஸ்தவராக இருப்பது என்பது வெறுமனே 'வேண்டாம்' என்று சொல்வதல்ல, மாறாக, விசுவாசப் பிரமாணத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ள கிறிஸ்து பற்றிய உண்மைகளுக்கு 'ஆகட்டும்' என்று சொல்வதாகும் என்றும் கூறினார்.

## திருப்பீட பல்சமய உரையாடல் அவையின் புதிய செயலாளராக இலங்கைக் குரு

திருப்பீட பல்சமய உரையாடல் அவையின் நேரடிச் செயலராக இலங்கைக் குருவான கொடிதுவக்கு கங்கணமாலகே அவர்கள் திருத்தந்தை 16ஆம் பெனடிக்ற் அவர்களால் அன்மையில் நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கையின் பதுளை மறைமாவட்டத்தைச் சேர்ந்த இவர் உரோம் உர்பான் பாப்பிறை பல்கலைக்கழகத்தில் நற்செய்திப்பணியியல் துறையில் பேராசிரியராகப் பணியாற்றி வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

## உலகில் சுமார் 21 கோடியே 50 இலட்சம் சிறார் தொழிலாளர் உள்ளனர்





உலகில் சுமார் 21 கோடியே 50 இலட்சம் சிறார் தொழிலாளர் உள்ளனர். இவர்களில் 11 கோடியே 50 இலட்சம் பேர் எவ்விதப் பாதுகாப்புமற்ற ஆபத்தான வேலைகளில் உட்படுத்தப்பட்டுள்ளனர் என்று அனைத்துலக தொழில் நிறுவனம் சமர்ப்பித்துள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

சிறார் தொழிலாளருக்கு எதிரான அனைத்துலக நாள் கடந்த, யூன் மாதம் 12ஆம் திகதி கடைப் - பிடிக்கப்பட்டதையொட்டி அறிக்கை வெளியிட்ட இந்த ஐ.நா. நிறுவனம், சிறார் தொழிலாளர் ஆசியா, பசுபிக் பகுதி மற்றும் ஆபிரிக்காவில் அதிகம் உள்ளனர் என்று கூறியது. ஆசியா மற்றும் பசுபிக் பகுதியில் 11 கோடியே 30 இலட்சம், ஆபிரிக்காவில் சுமார் 6 கோடியே 30 இலட்சம் என சிறார் தொழிலாளர் உள்ளனர் எனவும் அந்நிறுவனம் கூறியது.

இத்தாலியில் வறுமையால் 5 இலட்சம் சிறார் கட்டாயமாக வேலை செய்கின்றனர் எனவும் இலத்தீன் அமெரிக்காவில் 50 இலட்சம் முதல் 1 கோடியே 40 இலட்சம் சிறார்வரை வேலை செய்கின்றனர் எனவும் அவ்வறிக்கை கூறுகின்றது. சிறார் தொழிலாளருக்கு எதிரான அனைத்துலக நாள், 2002ம் ஆண்டிலிருந்து ஒவ்வோர் ஆண்டும் யூன் 12ம் தேதி கடைப்பிடிக்கப்படுகின்றது. சுமார் 60 நாடுகள் பல்வேறு நிகழ்ச்சிகள் மூலம் இத்தினத்தைச் சிறப்பிக்கின்றன.

## புதிய வடிவங்களில் நற்செய்தியைப் பரப்பும் பணிகளுக்கு நாம் தொடர்ந்து அழைக்கப்படுகிறோம்.

- கர்தினால் அன்ரோனியோ மரியோ வேஜ்லியோ


விசுவாச ஆண்டைத் துவக்குவதற்கு இன்னும் ஒரு சில மாதங்களே உள்ள நிலையில், கிறிஸ்துவோடு நாம் மேற்கொள்ளும் விசுவாசப் பயணத்தில் ஆற்றவேண்டிய கடமைகளைச் சிந்திக்க நாம் அழைக்கப்பட்டுள்ளோம் என்று திருப்பீட உயர் அதிகாரி ஒருவர் கூறினார்.

உரோம் நகரில் யூன் 4ஆம் திகதி துவங்கிய 15வது உலகக் கத்தோலிக்க விமானப் பயணிகளின் ஆன்மீகப் பணியாளர்கள் கருத்தரங்கில் துவக்க உரையாற்றிய புலம் பெயர்ந்தோர் மற்றும் பயணிகளின் மேய்ப்புப்பணிக்கென உருவாக்கப்பட்டுள்ள திருப்பீட அவையின் தலைவர் கர்தினால் அன்ரோனியோ மரியோ வேஜ்லியோ இவ்வாறு கூறினார்.

உலகின் கடையெல்லை வரை நற்செய்தியை அறிவிக்க அழைக்கப்பட்டிருக்கும் திருஅவையின் கண்கூடான அடையாளங்களாக விளங்குபவர்கள் விமானப் பயணிகளின் ஆன்மீகப் பணியில் ஈடுபட்டுள்ளவர்கள் என்று கர்தினால் சுட்டிக் காட்டினார்.

"பரமனின் விருந்தினில் பாசமுண்டு,
அயலவன் அன்புக்குப் பாடமுண்டு,
இருப்பதைப் பகிர்ந்திட அழைப்பு உண்டு"

## வேளாங்கண்ணி திருத்தலத்தில் மரியன்னை மாநாடு!



கடந்த யூன் 15,16,17 ஆகிய திகதிகளில் வேளாங்கண்ணி திருத்தல பொன் விழாவையொட்டி மரியன்னை மாநாடு நடைபெற்து. இம்மாநாட்டில் தமிழகத்தின் அனைத்து மறைமாவட்டங்களிலிருந்தும் மறை மாவட்டத்திற்கு 15 பேர் வீதமும் தஞ்சை மறைமாவட்டத்தின் 88 பங்குகளிலிருந்து 88 பேரும் கலந்துகொண்டனர்.

இந்த மாநாட்டைப் பேராயர் எம். எம். சின்னப்பா ஆரம்பித்து வைத்து தலைமை தாங்குகின்றார். ஆயர் சூசைமாணிக்கம் முதல் நாள் நெறியாளராகவும், ஆயர் அந்தோனிசாமி 2ம் நாள் நெறியாளராகவும் வழிநடத்தினார். இம்மாநாடு தஞ்சை ஆயர் தேவதாஸ் அம்புறோஸ் முன்னிலையில் நடைபெறும். இம்மாநாட்டில் தந்தை குரூஸ் ஏரோணிமுஸ் (விவிலியத்தின் மரியா) தந்தை பன்னீர்ச் செல்வம் (திருச்சபை வரலாற்றில் மரியா) தந்தை அல்போன்ஸ் (மரியியல் புதிய இறையியல் பார்வை) தந்தை மதுரை ஆனந்த் (மரியா ஆன்மீகம்) மற்றும் தந்தை அமுதன் (வேளாங்கண்ணி அன்னை மரியா நேற்றும் - இன்றும்) என்ற தலைப்புக்களில் விரிவுரையாற்றினர்.

## நைஜீரியாவில் இரண்டு ஆலயங்கள் தாக்கப்பட்டன, 8 பேர் இறந்துள்ளனர், 50க்கும் அதிகமானோர் படுகாயமடைந்துள்ளனர்

மேற்கு ஆபிரிக்க நாடான நைஜீரியாவில் உள்ள ஜோஸ் நகரின் ஆலயத்துக்கு வெளியே கடந்த யூன் மாதம் 10ஆம் திகதி வாகனத் தற்கொலை குண்டுவைப்பு தாக்குதல் நடத்தப்பட்ட அதேவேளை, அந்நாட்டின் வடகிழக்குப் பகுதியில் மற்றுமோர் ஆலயத்தில் துப்பாக்கி ஏந்திய மனிதர் தாக்குதலை நடத்தியிருக்கின்றனர்.

அல் கெய்தா குழுவோடு தொடர்புடையதாகச் சொல்லப்படும் Boko Haram என்ற பயங்கரவாதக் குழு இத்தாக்குதல்களை நடத்தியிருப்பதாகச் சொல்லப்பட்டுள்ளது. அந்நாட்டின் மத்திய மற்றும் வடக்குப் பகுதியில் வாழும் கிறிஸ்தவ சமூகங்களுக்கு இடையே வன்முறையை இக்குழு விதைத்து வருகிறது.

இத்தாக்குதல்கள் குறித்து வத்திக்கான் வானொலிக்குப் பேட்டியளித்த ஜோஸ் பேராயர் போல் கேய்க்கமா (Paul Kaigama), Boko Haram மற்றும் இது போன்ற அமைப்புக்கள் உரையாடலில் ஆர்வம் காட்டுவதில்லை என்று குறை கூறினார். அக்குழுக்கள் கொலை செய்கின்றன, அழிக்கின்றன, எரிக்கின்றன இவை மிகவும் தொந்தரவாக இருந்து அதிகமான பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றன என்றும் பேராயர் தெரிவித்தார். இஞ்ஞாயிறன்று இரண்டு கிறிஸ்தவ ஆலயங்கள் குண்டு வைத்த தாக்கப்பட்டதில் 8 பேர் இறந்துள்ளனர். மற்றும் 50க்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர். ஒரு வாரத்துக்கு முன்னர் Bauchi நகரில் இடம்பெற்ற தாக்குதல்களில் 12 பேர் இறந்தனர்.

## 50வது அகில உலக திருநற்கருணை மாநாடு

### திருத்தந்தையின் சார்பில் சென்றுள்ள கர்தினால் ஆற்றிய மறையுரை



அயர்லாந்து பல நூற்றாண்டுகளாகக் கத்தோலிக்க விசுவாசத்தில் ஊறிய ஒரு நாடு என்றும், இயற்கை வளங்கள் பலவும் நிறைந்த இந்நாடு, உயர்வான கலாச்சாரப் பரம்பரைக்கும், விருந்தோம்பலுக்கும் புகழ்பெற்ற ஒரு நாடு என்றும் வத்திக்கான் உயர் அதிகாரி ஒருவர் கூறினார்.

கடந்த யூன் 10ஆம் திகதி அயர்லாந்தின் டப்ளின் நகரில் துவங்கிய 50வது அகில உலக திருநற்கருணை மாநாட்டிற்குத் திருத்தந்தையின் சார்பில் சென்றுள்ள திருப்பீட அவையின் தலைவர் கர்தினால் Marc Ouellet துவக்கத் திருப்பலியில் ஆற்றிய மறையுரையில் இவ்வாறு .கூறினார்.

கத்தோலிக்க விசுவாசத்தில் ஆழமாக வேரூன்றியுள்ள அயர்லாந்து, உலகெங்கும் இந்த விசுவாசத்தை விதைக்க தன் மக்களை நற்செய்திப் பணியாளர்களாக அனுப்பியுள்ளது என்று அவர் சுட்டிக்காட்டினார்.

ஒவ்வொரு ஞாயிறன்றும் கத்தோலிக்க விசுவாசிகள் கூடி வந்து திருப்பலியில் கலந்துகொள்வது ஒரு சாதாரண சமுதாயக் கூட்டமாக உலகத்தின் கண்களுக்குத் தெரிந்தாலும் இந்த விசுவாச செயல்பாட்டில் அடங்கியுள்ள மேலான உண்மைகளை நாம் [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அதிர்வுகள் .....!

## அருட்பணியாளர் அன்புராசா (அமதி) எழுதும்

### சமகால சமூக அரசியல் ஆன்மீகம் சார்ந்த தொடர்
### தொடர் 09.

**கப்பலோட்டிப் பெருமை பெற்றவன் இன்று...**

1970, 1980களில் தமிழர்களை வெளிநாடுகளில் காண்பதே அரிதாம் எனச் சொல்லுகிறார்கள். அப்போது புலம்பெயர் மண்ணில் புகுந்தவர்கள் அப்படித் தமிழர்களை அங்கு பார்த்துவிட்டால் ஓடோடிச்சென்று நலம் விசாரிப்பது, ஊர்ப் புதினம் கேட்பது என்று உறவு வளருமாம். அது பின்னர் தொடருமாம். ஆனால், இப்போது புலம்பெயர் மண்ணில் சில தமிழரைச் சில தமிழர் கண்டுவிட்டால், "என்னடா சனியன்(கள்)!... இங்கையும் நிக்கிறாங்கள்" என எண்ணுகின்ற நிலையில் கணிசமானோர் இருக்கிறார்கள் எனச் சொல்லுகிறார்கள்.

அந்த அளவுக்கு சண்டைகளும், சண்டித்தனங்களும், அடிபுடிகளும், அடாவடித்தனங்களும் புலம்பெயர்ந்து வாழும் நம்மவர்களிடையே நடைபெறுவதாக அவ்வப்போது செய்திகள் கிடைத்த வண்ணமாய் இருக்கின்றன. நாகரீகமான நாடுகளிலே வாழ்ந்துகொண்டிருந்தாலும் வாள்வெட்டு, வாள்வீச்சு, கத்திக்குத்து என நம் ஊர்களில் நடக்கிற சண்டைகளைப் போல புலம்பெயர் மண்ணிலும் இந்த அடாவடித்தனங்களில் மிகக் கணிசமானோர் ஈடுபடுகிறார்கள்போல்தான் தெரிகிறது. இதில் இன்னுமொரு புதினம் என்னவென்றால் இசைக் குழுக்கள், நாடக மன்றங்கள், நடனக் குழுக்கள் வைத்திருப்பதுபோல சில இடங்களில் 'அடிபாட்டு குழு'க்களும் வெவ்வேறு நாமம் சூட்டப்பட்டு இயங்கி வருவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. 'கப்பலோட்டிப் பெருமை பெற்றவன் கத்திக் குத்திலும் சாதனை படைக்க வேண்டாமா?... அதனால்தான்!' என்று நீங்கள் முணுமுணுப்பது எனக்குப் புரிகிறது.

இது ஒருபுறமிருக்க, இன்று பல துறைகளில் மிக உச்ச நிலைக்கு புலம்பெயர் மண்ணில் நம்மவர்கள் குறிப்பாக அங்கு பிறந்து வளரும் நம் பிள்ளைகள் வளர்ந்திருக்கிறார்கள் - வளருகிறார்கள் என்பதையும் இங்கு குறிப்பிட்டே ஆகவேண்டும். கலையிலும், கல்வியிலும், ஆய்விலும், ஆராட்சியிலும், விஞ்ஞானத்திலும், அரசியலிலும் என நம்மவர்கள் கொடிகட்டிப் பறக்கிறார்கள் என்பதையும் இவ்விடத்தில் கோடிட்டுக்காட்ட வேண்டிய கடப்பாடும், உரிமையும் இருக்கிறது.

**அது அன்றைக்கு இது இன்றைக்கு:**

முல்லா நசுருதீன் நீண்ட பிரயாணம் ஒன்றை மேற்கொண்டு ஒரு விடுதியில் ஓர் இரவுப்பொழுதைக் களிக்கவேண்டி ஏற்பட்டது. முல்லா சாதாரண உடையிலும் உருவத்திலும் சென்றதால் விடுதியில் நின்ற பணியாளர்கள் அவரை அக்கறையோடு கவனித்துக்கொள்ளவில்லை. மறுநாள் பிரயாணத்தை ஆரம்பிக்குமுன் இரவு தங்குவதற்கான வாடகையைக் கட்டிவிட்டு அங்கு நின்ற ஒரு பணியாளனுக்கு ஐநூறு (500) ரூபாவை முல்லா 'சந்தோச'மாக வழங்கியபோது அவன் அதிர்ச்சியில் உறைந்து போனான். 'ஒரு சிறிய பையைத் தூக்கிக் கொடுத்ததற்கே இவ்வளவு பணத்தைத் தாராளமாகத் தந்திருக்கிறாரே!' என மலைத்துப் போனான். நடந்ததை ஏனைய சக பணியாளர்களிடம் சொன்னபோது அவர்களும் மிகுந்த ஆச்சரியத்திற்கு உள்ளானார்கள்.

சில நாட்கள் களித்து முல்லா அதே சாதாரண கோலத்திலும், அதே உருவத்திலும், மீண்டும் அதே விடுதியில் தங்குவதற்கு நேரிட்டது. முல்லாவைக் கண்டதுதான், 'நான் முந்தி நீ முந்தி' என விடுதியின் முதலாளி தொடக்கம் சாதாரண பணியாளன் வரை முல்லாவைக் கவனிக்கத் தொடங்கினாலும் முதல் தடவை முல்லா வந்தபோது கவனித்துக்கொண்ட அதே பணியாளன் முல்லாவைத் தான்தான் கவனித்துக்கொள்ள வேண்டும் என விடாப்பிடியாக நின்று வெற்றியும் கண்டான். அவனின் கவனிப்பைக் கண்டு இப்போது முல்லா அதிர்ச்சியில் உறைந்துபோனார். மறுநாள் காலைவேளை வழமைபோல முல்லா இரவு தங்கியதற்கான வாடகைப் பணத்தைக் கொடுத்துவிட்டு விடுதியைவிட்டு புறப்படுவதற்கு முன்பதாக தனக்குப் பணிசெய்த பணியாளனிடம் தன்னைக் கவனித்துக் கொண்டதற்காக மிகுந்த நன்றியைக் கூறிவிட்டு தனது பைக்குள் பணத்தை எடுக்க விளைந்தார். அப்பணியாளன், "போன தடவை இவரைக் கவனித்துக் கொள்ளாமலே ஐநூறு (500) ரூபா தந்தாரென்றால் இம்முறை நன்றாகக் கவனித்ததற்கு நிச்சயமாக ஆகக்குறைந்தது ஆயிரம் (1000) ரூபாயாவது கொடுப்பார்!" என தனக்குள்ளே கூறிக்கொண்டான். ஆனால், முல்லா நூறு (100) ரூபாயை எடுத்து அவனுடைய கையில் கொடுத்து, "நண்பா, இது அன்றைய நாளுக்கு, அது இன்றைய நாளுக்கு" என்று கூறிவிட்டு புன்னகையுடன் புறப்பாட்டார்.

**'அவர்களிடம் நிறைய இருக்குது' என்ற மனநிலை:**

பொதுவாக புலம்பெயர் மண்ணில் இருப்பவர்கள் தங்களுக்கு நிறையத் தரவேண்டும் என்ற எதிர்பார்ப்புதான் ஈழத்தில் இருப்பவர்களுக்கு மேலோங்கிக் கிடக்கிறது. அண்மையில் எனக்குத் தெரிந்த நண்பர் ஒருவர் தம் ஊருக்கு வந்திருந்தார். நீண்ட காலத்துக்குப் பின்னர் வந்திருப்பதால் ஊர்க்காற்றைச் சுவாசிக்க வேண்டும், உறவுகளைச் பார்க்க வேண்டும் என்று ஒவ்வொரு குடும்பமாகச் சந்திக்கத் தொடங்கினார். நிச்சயமாக நடந்துசென்று பார்க்கக்கூடிய தூரமாகையால் நடந்துசென்றே தம்முடைய சந்திப்புக்களைச் செய்திருக்கிறார்.

ஒரு தடவை இவர் நடந்து சென்றுகொண்டிருக்கும்போது இவரின் உறவுக்காரர் ஒருவர், "வெளிநாட்டிலிருந்து வந்து, நடந்தா திரியிறது! வாகனத்தில அல்லோ போகவேணும். உங்கட்ட காசா இல்ல!..." என்று கூற, "வாகனத்தில போறது ஒன்றும் பிரச்சினை இல்ல, காச நீங்க குடுங்கோ, நான் வாகனத்தில போறன்" என்று பகிடியாகக் கூறிவிட்டு நடந்தே சென்றிருக்கிறார்.

இன்னுமொரு முறை இதே அன்பர் சந்தையில் மீன் வாங்கிக்கொண்டு நின்றிருக்கிறார். மீன் வாங்கிவிட்டு பணத்தை எண்ணிக் கொடுத்திருக்கிறார். இவரோடுகூட நின்ற இன்னுமொரு உறவுக்காரர், "வெளிநாட்டில இருந்து வந்து, காசக் கணக்குப் பாத்தா கொடுக்கிறது? அள்ளி இறைக்க வேணும்..." என்றாராம்.

வேறொரு சந்தர்ப்பத்தில் இந்நபரே சந்தைக்குச் சாமான்கள் வாங்கச் சென்றிருக்கிறார். அங்கு அவர் பொருட்களின் விலையைக் கேட்டிருக்கிறார். அவரைக் கூட்டிச்சென்ற உறவினர் ஒருவர், "வெளிநாட்டில இருந்து வந்து காசையெல்லாம் கணக்குப் பாத்துக் கொடுக்கிறது வெட்கமில்லையா? காசை, இழுத்து வீச வேணும் கண்டியோ!" என்றாராம்.

**வார்த்தை + வாய் வீச்சைப் பார்த்தீர்களா?**

இவ்வார்த்தைகளையும், இவ்வார்த்தைகளில் உள்ள 'வீச்சு'க்களையும் ஒருகணம் இவ்விடத்தில் வாசிப்பை நிறுத்திவிட்டு!... சிந்தித்துப் பாருங்கள். இவ்வார்த்தைகளில் உள்ள வீச்சுக்கள் உங்களால் உணரப்படவில்லை என்றால் இரண்டு, மூன்று தடவைகள் சரியான 'ரோணோடு' (tone) சொல்லிப் பாருங்கள், அர்த்தம் புரியும்! மாமரத்தில் பிஞ்சு பிடித்துக் காய்ப்பதுபோல வெளிநாட்டில் 'காசுமரம்' பிஞ்சுபிடித்துக் காய்ப்பதாக நம்மில் பலர் நினைத்துக் கொள்கிறார்கள் போலும்! "அப்ப போனவைகள் (1980களில்) போய், அப்படியே இருக்கிறாங்கள். இப்ப போன இவன், சங்கரப்பிள்ளையின்ர (பெயர் மட்டும் மாற்றப்பட்டுள்ளது.) மோன் வீடு வாங்க, நல்ல வசதிவாய்ப்போட இருக்கிறானாம். இங்கையும் ஊரில பத்தேக்கர் காணியும் வாங்கிப் போட்டுட்டானாம். அத்தோட நல்ல வீடொண்டும் கட்டீற்றானாம். அத்தோட அங்கையும் நல்ல வசதிவாய்ப்போட இருக்கிறானாம்" என கணித்துக் கொள்கிறார்கள். இப்ப போன இவன், 'எப்பிடி உழைச்சான்'?, "எப்படி இவ்வளவு காசு ஓரே தடவையில் வந்தது?" என்பதைப் பற்றியெல்லாம் சிந்திப்பது கிடையாது.

**வீண்விரயம் செய்யப்படுகிறதா?**

உண்மையில் இவ்விடத்தில் ஒன்றைக் குறிப்பிட்டே ஆகவேண்டும். வெளிநாட்டில் உள்ள நம்மவர்களின் பண உதவியால் இங்கு ஈழத்தில் வாழும் பலர் பல்வேறு நலன்களைப் பெறுகிறார்கள். அதேவேளையில், இவ்வுதவிகள் தேவைப்படுபவர்களுக்கு அனேகமாகப் போய்ச் சேராமல் உள்ளவர்களுக்குத்தான் மேலும் அளவுக்கு அதிகமாக வந்து சேர்கிறது அல்லது வந்து குவிகிறது! என்பதையும் அவதானிக்க முடிகிறது.

இதனால், பணத்தை என்ன செய்வது என்று தெரியாமல் நன்றாகக் கட்டியிருக்கின்ற வீட்டையே உடைத்துக் கட்டுவதும், அழகாக இருக்கின்ற மதிலை உடைத்து உயர்த்துவதும், 'சுள்ளான்', 'நுளம்பு' என்று புதிய புதிய வரவுகளை (மோட்டார் சையிக்கிள்களுக்கான புதிய உள்ளூர் பெயர்கள்) வாங்குவதும், வகைவகையான நகைநகையாய் அணிவதும், அவற்றைக் கொள்வனவு செய்வதும் என இப்பணம் பல வழிகளில் விரையம் செய்யப்படுகிறது. அதாவது உண்மையாக தேவைப்படுபவர்களுக்குப் போய்ச் சேராமல் இருப்பவர்களுக்கே இன்னும் போய்ச் சேர்வதால் ஏற்படும் விபரீதம் இது!

எனினும் வெளிநாட்டிலிருந்து நம்மவர்கள் அனுப்பும் பணத்தை இன்னும் சிலர் பல ஏழைக் குடும்பங்களை வாழ்விக்கவும், ஏழைச் சிறார்களின் கல்விச் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்லவும், அபிவிருத்திப் பணிகளைச் செய்யவும் பயனுள்ள வகையில் பயன்படுத்துகிறார்கள் என்பதையும் இங்கு குறிப்பிட்டுத்தான் ஆகவேண்டும்.

ஆக, இப்பணம் யாருடைய கையில் கிடைக்கிறது என்பதைப் பொறுத்து இருக்கிறது. அதாவது இவ்'வெளிநாட்டுப் பணம்' யாருடைய கையில் கிடைக்கிறது, யாருக்குப் போய்ச் சேருகிறது என்பதைக் கவனித்தால் பயனுள்ள வகையில் இப்பணம் பகிரப்படும் என்பதில் நாம் சந்தோசம் அடையலாம். வெளிநாட்டில் வாழுகின்ற நம்மவர்கள், சொந்தங்கள் - உறவினர்கள் என்ற நிலை கடந்து ஏழைகள் - தேவையில் உழல்வோர் என சிந்தித்தால் அவர்களின் உதவிகளால் பல நன்மைகளைச் செய்ய முடியும், சாதனைகளைப் படைக்க முடியும்.

**'அள்ளி இறைக்கவேணும்' என்ற மனநிலை:**

"வெளிநாட்டில இருந்து வந்து பத்தாயிரம் தந்திற்றுப் போறார் அவர்! அத, (அதை) ஒரு நாள்ள உழைப்பன் நான்! பிச்சக்காரக் காசு! அதக் கொண்டுபோய் அவனிட்டே குடுத்திற்று வாடி..." என்று திட்டித் தீர்த்தார் ஒரு குடும்பத் தலைவர். வெளிநாட்டிலிருந்து வந்தவர்கள் "நல்லா அள்ளி இறைக்க வேணும்" என்ற மனநிலை எம்மவர்களில் இன்று நிறையவே காணப்படுகிறது.

'அவர்களிடம் உள்ளதைப் பகிர்ந்துகொள்கிறார்கள்', 'அவர்களின் இந்தத் தாராள உள்ளத்திற்கு நன்றி சொல்ல வேண்டும்', 'நம்மைப்போல பலருக்கும் அவர்கள் உதவிகள் செய்ய வேண்டியிருக்கும்', 'அவர்கள் தங்களுடைய தேவைகளையும் கவனிக்க வேண்டும்' என்பதை எல்லாம் இப்போது ஆட்கள் எண்ணிப் பார்ப்பது கிடையாது. "கொட்டுவதை எல்லாம் என்னிடம் அல்லது எங்களிடம் கொட்டிவிட்டுப் போங்கள்" என்ற மனநிலைதான் இப்போது விஞ்சி நிற்கிறது. பத்தாயிரம் ரூபா கொடுத்தால் இருபதாயிரத்தை எதிர்பார்க்கிறார்கள். ஐம்பதாயிரம் ரூபா கொடுத்தால் ஒரு இலட்சத்தை எதிர்பார்க்கிறார்கள்.

(தொடர்ச்சி 14ஆம் பக்கம்)

# புனிதர்களின் பாதையில்

## புனித தாமஸ் மூர்

மறைசாட்சி – (கி.பி. 1478 – 1535)



மாதமொரு புனிதரை அறிந்து கொள்வோம்

**யூன்**

இவர் இலண்டனிலிருந்த ஒரு நீதிபதியின் மகன். இவர் தமது படிப்பை முடித்தபின் சட்டவல்லுனர் என்று புகழ் பெற்று வழக்கறிஞர் தொழிலில் அமர்ந்தார். ஆழ்ந்த பக்தி உள்ளவர். தமது 27ஆம் வயதில் இல்லறத்தைத் தெரிந்துகொண்டார். இங்கிலாந்து நாட்டின் மன்னன் எட்டாவது ஹென்றியின் நண்பராகப் பல நற்பணிகளை ஆற்றினார். பக்தியில் நாளுக்கு நாள் சிறந்தோங்கி வளர்ந்தார். நாள்தோறும் 4 அல்லது 5 மணி நேரமே தூங்குவார். எப்போதும் முள் ஒட்டியாணம் அணிந்திருப்பார். பெரிய பதவியில் இருந்தும் நாள்தோறும் பூசைக்கு உதவி செய்யத் தவறமாட்டார்.

எட்டாவது ஹென்றி தன் முதல் மனைவி கத்தரினை பிள்ளையில்லாத காரணத்தால், தள்ளிவிட்டு ஆன்பொலின் என்பவளை மணந்துகொள்ள பாப்பரசரின் இசைவினைக் கேட்டான். பாப்பரசர் மறுத்தபோது "தானே திருச்சபையின் தலைவன்" என்று கூறிக்கொண்டான். அப்போது தாமஸ் மூர் அரச அவையில் தாம் வகித்திருந்த பெரிய பதவியிலிருந்து விலகினார். அதற்குப் பின்னால் எழவிருந்த சமயப் புயலுக்கு தம்மையே தயார் செய்தார். அரசன் திருச்சபைக்கு எதிராக விடுத்த ஆணையை தாமஸ் ஏற்றுக்கொள்ளவில்லை. எனவே சிறையில் அடைக்கப்பட்டார். 15 மாதங்கள் சிறையில் வாடி உடல்நலம் குன்றினார். பின்னர் அரசனின் ஆணைப்படி கொல்லப்பட்டு உயிர் நீர்த்தார்.

இவர் சட்டக்கலை பயிலும்போது, லண்டனில் உள்ள கார்தூசியின் சபை மடத்தில் தங்கி 4 ஆண்டுகள் படித்தார். அங்கு அவர் பெற்ற பயிற்சியில் இறுதிவரை நிலைநின்றார். காலை 2 மணிக்கே துயிலெழுதல், மாதாவின் மந்திரமாலையை நாள்தோறும் சொல்லுதல், அன்றாடம் திருப்பலியில் பங்கேற்றல், இரத்தம் சிந்தும் அளவுக்கு அடித்துக்கொள்ளுதல், முள் ஒட்டியாணம் அணிதல் ஆகியவற்றில் பற்றுறுதி கொண்டிருந்தார்.

இவர் தலை வெட்டப்பட வேண்டுமென்று நீதிமன்றத்தில் அறமற்ற முறையில் தீர்ப்பாயிற்று. இந்தத் தீர்ப்பைக் கேட்ட புனிதர் கூறியது. "தூக்கு மேடையில் நான் சாகப்போகிறேன். அரசனின் பணிவான ஊழியனாகவும், ஆனால் அதைவிட கடவுளிடம் முதற்கண் உறுதி தவறாதவனாகவும் சாகிறேன்". தூக்கு மேடையைப் புனிதர் அடைந்ததும், தன் தலை துண்டிக்கப்படு முன், கொலையாளிளை ஒரு நொடி தாமதிக்கக் கேட்டுக்கொண்டார். பெரிய மரத்தடிகளுக்கிடையில் இவரது தலை செலுத்தப்பட்டதில் இவரது தாடியும் சிக்கிக்கொண்டது. அப்போது கொலையாளியிடம், "இந்த மரக்கிளைகளுக்கிடையில் எனது தாடி மாட்டிக்கொண்டது. இந்தச் சிக்கலிலிருந்து இதை எடுத்துவிட விரும்புகின்றேன். என் தாடி என்ன குற்றம் புரிந்தது?" என்று சிரிப்பு உண்டாகும்படி பேசி மகிழ்ந்தார். பின்னர் அச்சமூட்டக்கூடிய கூர்மையும் வலிமையும் பொருந்திய இரும்புக் கத்தி மேலே தொங்கிக் கொண்டிருந்தது. மெதுவாகக் கத்தி இவரது தலையை நோக்கி கொலையாளியால் இறக்கிவிடப்பட்டது. பிறகு மின்னல் வேகத்தில் இவரது தலை துண்டிக்கப்பட்டது. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருச்சிதைவு இலங்கையில் சட்டமாக்கப்பட வேண்டுமா?

## திருச்சபையின் கண்ணோட்டத்தில் சில சிந்தனைகள்

அருட்சகோதரர். கு. கிருஷாந்,
ஆரம்ப மெய்யியல் பீடம், களுத்துறை தெற்கு.

கருச்சிதைவு (Abortion) இலங்கையில் சட்டமாக்கப்பட வேண்டும் என்று இலங்கை அரசாங்க பிரதானிகள் சிலர் ஆராய்ந்து வருகின்ற இந்நிலையில் இதன் விளைவுகளைத் திருச்சபைக் கண்ணோட்டத்தில் தர விளைகின்றேன்.

திருச்சபை ஒருபோதும் கருச்சிதைவை அங்கீகரிப்பதில்லை. அதற்கு ஏராளமான காரணங்கள் உண்டு. அவற்றைப்பற்றிப் பார்ப்பதற்கு முன்பு கருச்சிதைவை ஆதரிக்கின்ற கட்சியினரின் வாதங்களைச் சற்று விரிவாகப் பார்க்கலாம். சமீபத்தில் அரசாங்க இணையத்தளத்தைப் பார்வையிட்ட வேளையில். அதில் பெண்கள் விவகார மற்றும் சிறுவர் அபிவிருத்தி அமைச்சர் திஸ்ஸ கெரலியத்த வெளியிட்டிருந்த சில தகவல்களைப் பார்வையிட நேர்ந்தது.

இலங்கையின் தற்போதைய சட்டத்தின்படி கருச்சிதைவு சட்டத்திற்கு முரணானது. கருவைச் சிதைப்பது ஒரு பிறந்த குழந்தையைக் கொல்வதற்குச் சமன். ஆனால் விதிவிலக்காக குழந்தையின், அல்லது தாயின் உயிருக்கு ஆபத்து ஏற்படுவது உறுதிப்படுத்தப்பட்டால் இதற்கென சிறப்புப் பயிற்சி பெற்ற நிபுணர் (Gynecologist Doctor) ஒருவரின் தலைமையில் கருச்சிதைவு செய்யலாம் என்ற நிலை நடைமுறையில் உள்ளது. இதற்கு மாறான எந்தவொரு கருச்சிதைவும் சட்டத்திற்கு முரணானது.

ஆனால் இன்று பல தனியார் மருந்தகங்களில் கருச்சிதைவு சட்டத்திற்கு முரணாக மேற்கொள்ளப்பட்டு வருவது கவலைக்குரிய உண்மை. மேலோட்டமாக இதுபற்றித் தெரிந்த சிலர் பணம் சம்பாதிக்கும் நோக்குடன் இவ்வாறு செயற்பட்டு வருகின்றனர். இதன் விளைவாகப் பல இளம் தாய்மார் மரணத்தைத் தழுவியுள்ளனர். இந்த நிலை காலாகாலம் அதிகரித்து வருவது அரசினால் அவதானிக்கப்பட்டுள்ளது. எனவே இந்நிலையை மாற்றி மக்களுக்கு நன்மை தரும்படியாக கருச்சிதைவை சட்டமாக்க அரசு ஆராய்ந்து வருகின்றது. ஆனால் எங்கே எல்லைப்படுத்துவது? எவ்வாறு சட்டத்தை இணைப்பது? என்பது பெரிய பிரச்சினையாக உள்ளது. இறுதியாக பின்வரும் மூன்று காரணங்களுக்காக மட்டுமே கருச்சிதைவு அங்கீகரிக்கப்படும் என்று முடிவானது.

01. வயது குறைந்த பெண்கள் கற்பழிக்கப்பட்டால் (Rape of underage girls)

02. முறைகேடான உறவுகள் - அம்மா+ மகன், அப்பா+மகள், சகோதரன்+சகோதரி, (Incest)

03. குறைபாடுகளுடன் குழந்தை கருப்பையில் வளர்ந்தால் (Defective Fetus)

இம்மூன்று காரணங்களுக்கு அப்பால் செய்யப்படும் எந்தக் கருச்சிதைவும் சட்டத்திற்கு முரணானது. முதலிரு காரணங்களின்போது சமூகப்பிரச்சினை காரணம் காட்டப்படுகின்றது. மூன்றாவது காரணியில் தாயின்/ சேயின் உயிர் காரணம் காட்டப்படுகின்றது. இச்சட்டமானது இலங்கையில் உள்ள திருமணமாகாத தம்பதிகள் (Unmaried Coupes) மற்றும் விபச்சாரிகள் என்போரைக் காப்பாற்றவே என்று கொதிக்கின்றனர் ஒரு தரப்பினர்.

இந்த இடத்தில், கற்பழிப்பு மூலமாகவோ, முறைகேடான உறவு மூலமாகவோ ஒரு குழந்தை பிறக்க நேரிடின் அக்குழந்தை பாரிய சமூகப்பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டிவரும். யார் தந்தை? என்று கேள்வி கேட்டே உயிரை வாங்கிவிடுவர் நம்மவர். இவ்வாறு அவமானப்பட்டு வளரும் குழந்தை பின்னாளில் ஒரு வன்முறையாளனாய் உருவெடுக்கும். இது சமூகத்திற்கு மிகப்பெரும் சவால். எனவே கருவிலேயே சிதைப்பதுதான் சரி என்கின்றனர்.

ஊனமுற்ற குழந்தைகள் பிறப்பதால் என்ன இலாபம்? வீட்டாருக்கும், நாட்டாருக்கும் சிரமம்தான் மிஞ்சும். எனவே அந்தக் குழந்தையின் செலவை வேறு அபிவிருத்திப்பணிகளில் பயன்படுத்தலாம். எனவே குழந்தையை கருவிலேயே சிதைப்பது நல்லது என்று இன்னும் சிலர் கூறுகின்றார்கள்.

எல்லா மதங்களிலும் உயிரைக்கொல்வது பாவகாரியம். சிறப்பாக இஸ்லாம் மத அல்குர்ஆனில் 'குழந்தையைக் கொல்லக்கூடாது' என்று இறைவன் அல் ஹஜ் கூறியிருக்கிறாரென்று இயம்புகின்ற சிலர் கூறும் காரணம் மிக வேடிக்கையானது. அதாவது குழந்தையைத்தான் கொல்லக்கூடாது. குழந்தை என்றால் அது பிறந்த பின்னரே, அதற்குமுன் அது குழந்தை அல்ல எனவே அதைக் கொல்லலாம் என்கின்றனர்.

ஒரு சரியான மனநிலை அளவைக் (Mental Capacity) கொண்டிராத எதையும் சாகடிப்பது கொலையல்ல. உதாரணமாக தினமும் எத்தனையோ நுளம்புகளைச் சாகடிக்கின்றோம். அதற்காக நாம் வருந்துவதில்லை. எனவே கருவும் அதைப் போன்றதே எனவே கருச்சிதைவு கொலையாகாது என்கின்றது இன்னொரு தரப்பு.

எதிர்காலத்தில் சனத்தொகைப் பெருக்கத்தினால் வளநெருக்கடி ஏற்படும். அதனால் சனத்தொகையைக் கட்டுப்படுத்த வேண்டும். எனவே கருச்சிதைவை அறிமுகம் செய்வோம் என்று இந்தியா கிளம்பியதுபோல (1971ல்) நாம் அனைவரும் செயற்பட வேண்டும் என்று சமூக நலம் பேசுவோரும் உள்ளனர். சரி அதெல்லாம் இருக்கட்டும் கருச்சிதைவு என்றால் என்ன என்பது பற்றிப் பார்ப்போம்.



கருச்சிதைவு என்பது ஒரு தாயின் கருப்பையில் கருவாகி உருவாகி வரும் ஒரு உயிரை அங்கிருந்து வெளியேற்றும் முகமாக அழித்துவிடுதல் ஆகும். ஆரம்ப காலத்தில் குழந்தை பிறந்தவுடன் கொன்று போட்டனர் (ஏரோது போல) அல்லது மூலிகைகளைப் பயன்படுத்தி அழித்துவிட்டனர் இன்று மருந்து கொடுத்து, அறுவைச் சிகிச்சை செய்து அழித்து விடுகின்றனர். அதில் முக்கியமாகத் தாயின் நலன் கருதிச் செய்யப்படும் கருக்கலைப்பை/ சிதைவை **'சிகிச்சைக் கருக்கலைப்பு'** என்றும், ஏனையவற்றைத் 'தேர்வுக் கருக்கலைப்பு' என்றும் வகுத்துள்ளனர். கருத்தரித்த 1-10 வாரங்களுக்குள் செய்யப்படும் கருச்சிதைவு D&C (Dilation and Curetlage) என்றும் 10 - 20 வாரங்கள் என்றால் கருச்சிதைவு (Abortion) என்றும், அதற்குமேல் செய்தால் கொலை என்றும் பல நாடுகளில் சட்டம் உள்ளது.

இங்கு நாம் முக்கியமாகக் கவனிக்க வேண்டியது நம் தாய்த் திருச்சபை இதுபற்றி என்ன கூறுகின்றது என்பதாகும். கடவுள் முதன் முதலில் மனிதனைப் படைக்கும்போது தனது உயிர்மூச்சை அவனுக்குத் தந்தார். அவனிலிருந்து பெண் உருவானாள். அதன் பின்பு சந்ததிகள் அனைத்தும் உருவாகின. அதாவது ஆண்டவரின் உயிர்மூச்சு அனைவருள்ளும் இருந்து அவர்களை இயக்கி வருகின்றது. எனவே மனித உயிர் ஆனது இறைவனின் ஆவியே ஆகும். மனிதன் ஒரு தெய்வீகப் (Devine) பிறவி.

தாயின் வயிற்றில் உருவாகும் முன்பே ஆண்டவர் எம்மை அறிந்துள்ளார். (எரே 1:5) அதாவது நமது உண்மையான பிறந்த தினம் மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பே நிகழ்ந்திருக்கும். அந்நேரமே அவர் பெயர் சொல்லிக் கூப்பிட்டிருப்பார்.

அத்துடன் காலத்தின் தேவைகருதிக் கூட்டப்பட்ட இரண்டாம் வத்திக்கான் சங்கத்தில் அலசப்பட்ட முக்கிய விடயங்களில் கருச்சிதைவும் ஒன்று. இரண்டாம் வத்திக்கான் சங்க ஏட்டில் 'Gaudium et spes' என்ற பகுதியில் 'Married life and Reapect for Human Life' என்ற தலைப்பின் கீழ் படித்துப்பார்க்கின்றபோது "மிக உன்னிப்பான கவனத்துடன், கருவாக ஓர் உயிர் உருவாகுவதிலிருந்து அந்த உயிர் பாதுகாக்கப்பட வேண்டும். கருச்சிதைவு, சிசுக்கொலை என்பன அருவருக்கத்தக்க குற்றச் செயல்களாகும்" என விதந்துரைக்கப்பட்டுள்ளது. பலுகிப் பெருகிப் பூமியை நிரப்புங்கள் என்றுதான் கடவுள் கட்டளை தந்தார். உயிர்களை அழிக்கும்படியல்ல.

பத்துக் கட்டளைகளிலும் 'கொலை செய்யாதிருப்பாயாக' என்று கூறப்பட்டுள்ளது. உயிரைக் கொல்வது பத்துக் கட்டளைகளுக்கெதிரானது. முழு உலகத்துக்கும் (Boss) அதிபதியான மனிதனுக்கு மனிதனைக் கொல்லும் உரிமை தரப்படவில்லை. அனைத்தும் மனிதனின் கண்காணிப்பில், மனிதன் இறைவனின் கண்காணிப்பில்.

இலங்கைக் கத்தோலிக்க ஆயர் ஒன்றியமும் இதனையே வலியுறுத்தி நிற்கின்றது. கருச்சிதைவு தொடர்பான சட்டம் இலங்கையில் சட்டமாக்கப்படக்கூடாது என இலங்கை ஆயர்கள் தெரிவித்துள்ளனர். எந்தவொரு சந்தர்ப்பத்திலும் கருச்சிதைவு தொடர்பான சட்டத்தை அமுல்படுத்துவதனை ஏற்றுக்கொள்ளமுடியாதென ஆயர் ஒன்றியத்தின் பொதுச் செயலாளர் ஆயர் நோபர்ட் அந்திராதி ஆண்டகை தெரிவித்துள்ளார். திருவிவிலியத்திற்கெதிராகவே இச்செயல் அமையும். கடவுளே வாழ்வை உருவாக்கும் படைப்பாளி. இது கொலைக்கு நிகரானது. எனவே கருச்சிதைவைச் சட்டமாக்குவதற்கு அரசு ஒருபோதும் முயற்சிக்கக்கூடாது. என்று மேலும் தெரிவித்துள்ளார்.

சரி நம்முடைய சமூக மட்டத்திற்கு வருவோம் கருச்சிதைவைப்பற்றி நாம் கொண்டுள்ள கருத்து/மனநிலை என்ன? எம்முடைய கலாச்சாரத்தின் பின்னணியில் பார்க்கின்ற போது சமீபத்திய தலைமுறை உயிர்கள்மீதான மரியாதையை குறைப்பதுபோலவே தென்படுகின்றது. மிருகங்கள் மீதான பாசம் சற்று அதிகரிப்பது நல்ல விடயம்தான். இருப்பினும் மனித உயிர்கள் மீதான கரிசனையை நாம் இழந்து விடக்கூடாது. அண்மைய காலங்களில் கணிசமான அளவு கத்தோலிக்கப் பெண்களும் கருச்சிதைவை மேற்கொண்டிருப்பது கண்டறியப்பட்டுள்ளது. ஏன்? நாம் தெரிந்துகொள்ள வேண்டியவை நிறைய உள்ளன.

(தொடர்ச்சி 13ஆம் பக்கம்)

# மனநோய் ஒரு சமுதாய நோயா?

வைத்திய கலாநிதி, நி. தர்ஷனோதயன்,
பெற்றா, மன்னார்.

இன்று சமுதாயத்தில் பத்துப் பேரில் ஒருவர் ஏதேனும் ஒரு வகை மனநோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாக புள்ளி விபரங்கள் கூறுகின்றன. பிறப்பால் உயர்ந்தவன் - தாழ்ந்தவன் என்னும் பாகுபாடும் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளும் உள்ளவரை மனநோய் என்பதும் ஒரு சமுதாய நோயாகவே இருந்து வரும். ஏற்றத்தாழ்வுகள் அதிகரிக்கும்போது மனநோயின் வீச்சும் அதிகரிக்கவே செய்யும். வறுமையின் பிடியில் சிக்கித் தவிப்பவர்களுக்கு, சமூகப் பொருளாதார வசதி படைத்தவர்களைக் காட்டிலும் மனநோய் பாதிக்கும் அபாயம் அதிகமுள்ளதாக ஆராய்ச்சி முடிவுகள் தெரிவிக்கின்றன.

என்னதான் விஞ்ஞான, தொழில் நுட்பம் மற்றும் மருத்துவத் துறைகள் மிக அதிக முன்னேற்றம் கண்டபோதிலும் அன்பு, பொறுமை, மனநிறைவு, சமூக மதிப்பு, சுயமதிப்பு ஆகிய பல பொருள்கள் பதிந்த அர்த்தமுள்ள மகிழ்ச்சியான வாழ்க்கையினை மக்கள் இன்று அமைத்துக்கொள்ள முடியாத சூழ்நிலையே நிலவுகிறது. நவீன வாழ்க்கையில் பல வகையான பிரச்சினைகளும், தோல்விகளும், விரக்தி நிலையும், மன அழுத்தங்களும், மனச்சிதைவும் ஏற்படுகின்றன. மக்களில் பலர் விபரீதமாக நடந்துகொள்கின்றனர். ஏதேனும் ஒருவகை மனநோயால் பாதிக்கப்படுகின்றனர்.

மனநோயுள்ளவர்கள் அனைவரும் தங்கள் சட்டையைக் கிழித்துக்கொண்டு நடுத்தெருவில் தலைவிரி கோலமாய் அலைந்தவாறே கல்லெடுத்து எறிவர் என நினைப்பது ஒரு தவறான கண்ணோட்டமாகும். இந்தத் தவறான கண்ணோட்டத்தால்தான் பலரும் உளவியல் நிபுணர்களையோ அல்லது மனநோய் மருத்துவர்களையோ சந்தித்து தங்கள் குறைகளை ஆரம்ப நிலையிலேயே சரிசெய்து கொள்ளத் தவறுகின்றனர். உடல் நோய்கள் நமக்கோ, நமது உறவினர்களுக்கோ ஏற்படும்போது, அதற்காக நாம் வெட்கப்படுவதில்லை. அதை மூடி மறைக்கவும் முயல்வதில்லை. மாறாக சரியான மருத்துவரை நாடி நமது குறையைத் தயங்காது கூறி சரிசெய்து கொள்கிறோம். மனநோய் பற்றியும் நாம் இதுபோன்ற அணுகுமுறையைக் கையாள வேண்டியது அவசியமாகும்.

ஆரோக்கிய விதிகளை மீறும்போது உடல் எவ்வாறு நோய்வாய்ப்படுகிறதோ, அதேபோல் மனத்தூய்மை கெடும்போது மனநோய் தோன்றுகிறது. ஒருவனை வருத்தக்கூடிய நினைவுகளும், நிறைவேறாத ஆசைகளும், மனதைக் காயப்படுத்தக்கூடிய அனுபவங்களும் அவனது ஆழ்மனதில் புதைக்கப்படுகிறது. இவை பின்னாளில் வெளிப்படும்போது மனநோயாக பரிணாமிக்கிறது.

ஒருவனுக்கு மனநோய் தோன்ற 3 முக்கிய காரணங்கள் உள்ளதாக சமீபத்திய ஆராய்ச்சிகள் தெளிவுபடுத்தியுள்ளன. அவையாவன,

**1. மரபுக் கூறுகள் 2. குடும்பச் சூழல் 3. சமூக உறவுகள்**

மரபுக் கூறு ஆராய்ச்சிகள் குரோமோசோம்களின் (Chromosomes) அமைப்பு மற்றும் எண்ணிக்கை அளவீட்டில் ஏற்படும் குறைபாடுகள் காரணமாக அமைகின்றன என்பதைக் காட்டியுள்ளன. உதாரணம் மன வளர்ச்சிக் குறைபாடு (Mental Retardation)

குழந்தைப் பருவத்தில் தாயின் அரவணைப்பு கிடைக்காத குழந்தைகளுக்கு பின்னாளில் மனநோய் ஏற்படும் வாய்ப்பு அதிகமுள்ளது. விடுதிகளில் தங்கிப் படிக்கும் குழந்தைகளைவிட வீட்டில் பெற்றோருடன் வசிக்கும் குழந்தைகள் அதிக மனநலத்துடன் இருக்கின்றனர்.

பெற்றோர் - குழந்தை உறவு சரிவர அமையாதபோது, குழந்தையின் மனவளர்ச்சி குறைகிறது. குழந்தையிடம் பிரியமாக நடந்துகொள்ளாதது, போதுமான அன்பு காட்ட மறுப்பது, குழந்தையின் செயல்கள் மற்றும் வெற்றிகளைப் பாராட்டாமல் இருப்பது, குழந்தைகளை வன்மையாகக் கண்டிப்பது மற்றும் தண்டிப்பது, குழந்தையிடம் தனது நேரத்தைப் பகிர்ந்து கொள்ளாதது போன்ற செயல்கள் குழந்தைகளின் நன்மதிப்பு உணர்வையும், பாதுகாப்பு உணர்வையும் நுண்ணறிவு வளர்ச்சியையும் பாதித்து அவர்களின் தனிமை உணர்வையும் கோப உணர்வையும் அதிகப்படுத்துகின்றன. இதனால் குழந்தைகள் முறைகேடாக நடந்துகொள்கின்றனர்.

தேவைக்கு அதிகமாக குழந்தையை பாதுகாத்து வளர்ப்பது குழந்தையின் மனவளர்ச்சிக்கு தடையாக அமைகிறது. அதிக செல்லம் கொடுத்து வளர்க்கப்படும் குழந்தைகள் வாலிப வயதை அடையும்போது வாழ்க்கையில் ஏற்படும் பிரச்சினைகளையும் சிக்கல்களையும் சந்திக்க முடியாதவர்களாக இருக்கின்றனர்.

பெற்றோர்கள் குழந்தைகளிடம் அதிகம் அளவில் இசைவுடன் நடந்துகொள்வதும், அளவுக்கதிகமாக சலுகைகள் காட்டுவதும் குழந்தையின் மனவளர்ச்சியை பாதிக்கிறது. இதன் காரணமாக வளரும் குழந்தைகளிடம் சுயநல உணர்வும், விரும்பும் எதையும் பெறவேண்டும் என்ற உணர்வும் வளர்கிறது. அதிக சலுகைகள் காட்டுவதன் காரணமாக பின்னாளில் சமூக விரோத நடவடிக்கைகளில் குழந்தைகள் ஈடுபடுவதாகவும் ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன.

பெற்றோர்கள் குழந்தைகள் காணும்படியாக தங்களுக்குள் அடிக்கடி சண்டை போட்டுக்கொள்வதும் குழந்தைகளிடம் பதட்ட உணர்வை ஏற்படுத்தி மனச்சிதைவை ஏற்படுத்தக் காரணமாக அமைகிறது.

(தொடர்ச்சி 13ஆம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலை இலக்கியச் சாளரம்

## கவிதைக் களம்

## முருங்கன் ஜெயா பாலாஜியின் கவிதை

### முகங்கள்

இறைவா!
என் சின்ன வயதை ஒருமுறை திரும்பித் தருவாயா?
ஒருமுறை ஒரே ஒருமுறை!
என் சின்ன வயதை ஒருமுறை திரும்பித் தருவாயா?
என்னமாய் இருந்தது அந்த சின்ன வயது வாழ்க்கை!
உண்மையாய் .... முழுக்க முழுக்க உண்மையாய் ....

பிடித்ததை உண்டு பிடிக்காததைத் தூக்கி எறிந்து
தலைவாரத் தெரியாவிட்டாலும்
வாரிவிட்டது பிடிக்காவிட்டால்
அழுது அடம்பிடித்து அம்மாவிடம் அடிவாங்கி
பிடித்த மாதிரியே தலைவார வைத்து
பிரயாணங்களில் சாரளத்து ஓரத்து இருக்கைக்காக
சகோதரர்களுடன் சண்டை பிடித்து
என்னமாய் இருந்தது அந்தச் சின்ன வயது வாழ்க்கை!
உண்மையாய் முழுக்க முழுக்க உண்மையாய் ....
வயது அந்தஸ்து கௌரவம் எத்தனை முகமுடிகள் இன்று
முற்றிலும் பொய்யான ஒரு வாழ்க்கை.

பேரூந்துகளில் பயணம் ஒரு யுத்தகளம்
மிதிபலகையில் கால் வைக்கும் முன்பே
மணியடிக்கும் நடத்துனர்.
"பயணிக்கும் எல்லாப் பெண்களும் சுசந்திக்கா அல்ல"
சொல்ல வாய் திறக்கும்.
பக்கத்திலே வேண்டப்பட்டவரின் வேண்டப்படாத பார்வை
இன்றைய உரைநடையில் அதற்கு
"பொத்திக்கொண்டு இரு" என்று அர்த்தம்.
எனவே பொத்திக்கொண்டு .....

பாடசாலை முடிந்து வீடு திரும்பும்
முதலாம் ஆண்டு மாணவர்கள்
வீதியில் பேசுவது கேட்கும்
"மவனே வைக்கிறேண்டா உனக்கு ஆப்பு"
ஆத்திரமாய் வரும்.
மகன் கேட்பான் "உங்களுக் கென்னம்மா"?
ஒன்றும் இல்லையா - இதில் ஒன்றுமே இல்லையா?
வியாபாரிகள் தாங்கள் கெட்டிக்காரர்கள் என்று
நினைத்துக்கொள்ளலாம் - தவறே இல்லை.
ஆனால் மற்றவர்கள் மடையர்கள்
என்று நினைக்கிறார்கள் பாருங்கள்.
சகித்துக்கொள்ளாவிட்டால் சண்டைக்காரி

"குற்றம் பார்க்கில் சுற்றமில்லை"
என் தமிழே என் தாய்த் தமிழே நீ சொன்னாய்
அழகாகச் சொன்னாய்
சுற்றங்களைக் காத்துக்கொள்ள
குற்றங்களை தாங்கிக்கொள்வது
ஏளனமாக - இளக்காரமாகத் தெரிகிறதே.
ஏறி மிதிக்கலாம் என்று எண்ணப்படுகிறதே
என் தாயே என் தமிழே இதற்கு நீ
என்ன சொல்கிறாய்?

ஆலயத்துக்குள்ளே யேசுவின் சிலுவையைவிட
சிலவேளைகளில் யேசு ஏந்திய சவுக்கு
அதிகமாய் நினைவு வருகிறது.
நம்முடைய பிள்ளைகள் குருக்கள். மகிழ்ச்சிதான்!
ஆனாலும் வெள்ளைக்கார சுவாமிகளின் தேவை
உணரப்படுகிறது சில சந்தர்ப்பங்களில்.
மறுகன்னத்தை காட்டத் தேவையே இருக்காது.
இரண்டு கன்னங்களுமே காயப்பட்டுவிடும் ஏக காலத்தில்
வெள்ளைக்கார சுவாமிமாார் தேவைப்படுகின்றார்கள்.

இறைவா!
என் சின்னவயதை ஒருமுறை திருப்பித் தா
என் சொந்த முகத்தை ஒரு முறை காட்ட
நிஜத்தை பிரதிபலிக்கும் சொந்த முகத்தைக் காட்ட
என் சின்ன வயதைத் திருப்பித் தா

## துளிப்பா

**உரம்**
பூக்களுக்கு சூரிய ஒளி.
மனித நேயத்திற்கு
புன்னகை

**கனவு**
இப்போது நிரூபிக்கப்
பட்டவையெல்லாம்
ஒரு சமயம் கற்பனை
செய்யப்பட்டவையே.

**அன்பு**
திறமையானவர்கள்களைப்
போற்றலாம் - ஆனால்
அன்பானவர்களை மட்டுமே
நேசிக்கமுடியும்.

**முள்**
முள்ளாக இரு.
பாதையில் அல்ல
முன்னேறத் தூண்டும்
கடிகாரத்தில்

**உண்மை**
கடவுளை நீங்கள் நிருபிக்க
வேண்டியதில்லை
கடவுளுக்கு உங்களை
நிருபியுங்கள்.

**தெய்வம்**
எல்லாம் எனக்குள்
இருந்தாலும் தனக்குள்
என்னை வைத்திருக்கும்
அன்னை மனமே என்
கோயில்.

*அ.மேரி கொண்செப்ரா,*
*மடுக்கோவில், மடு.*

## சிந்தனைத் துளிகள்

- உங்கள் மனக்
கதவைத் திறந்தே
வைத்திருங்கள்.
எந்த நேரத்திலும் புதிய
சிந்தனைகள் உள்ளே
நுழையலாம்.

- புத்தகங்களைப்
படிக்கும்போது
கவிழ்த்து வைக்காதீர்கள்
மூலைகளை
மடிக்காதீர்கள்.

- காயங்களை மன்னித்து,
மறந்து விடுங்கள்.
நன்மைகளை ஒருபோதும்
மறவாதீர்கள்.

- தன்னம்பிக்கையோடு
இருங்கள், ஆனால்
கர்வம் கொள்ளாதீர்கள்.

- மனிதர்களின்
சகோதரத்துவத்தை
நம்புங்கள்.
சாதி, மத, வகுப்புப்
பேதங்களை
ஏற்றுக்கொள்ளாதீர்கள்.

- எல்லோருடனும்
கனிவுடனும்,
மரியாதையுடனும் பேசக்
கற்றுக்கொள்ளுங்கள்.

*ச. அஸ்ரோ டற்சியன்*
*அச்சங்குளம்,*
*நானாட்டான்.*

## கொஞ்சம் சிரிங்க

**மனைவி** - "நீங்கள் எனக்கு அழகிய நெக்லஸ் வாங்கித் தருவதாக நேற்று கனவு கண்டேன்"!
**கணவன்** - "நாளை அதை அணிந்து கொண்டிருப்பதாகக் கனவு கண்டுகொள்"!

..........................................

**கமல்** - "நான் ஆபிரிக்காவில் இருந்தபோது புலி வேட்டையாடினேன்"!
**நிமல்** - "பொய் சொல்லாதே! ஆபிரிக்காவில்தான் புலிகளே இல்லையே?"
**கமல்** - "அதுதான் நான் எல்லாவற்றையும் வேட்டையாடி விட்டேன்"! - *க. மெர்லின், இத்திக்கண்டல், அடம்பன்.*

**கணவன்** - என்னடி இவ்வளவு நேரமா சாறி எடுக்கிறா?
**மனைவி** - கணவனைத்தான் சரியா செலைக்பண்னேல, சாறியையாவது சரியா செலைக்பண்ண விடுங்க.

..........................................

**ஒருவர்** - என் புருஷன் கோட்டு வாசலையே மிதிச்சது இல்லையே.
**மற்றவர்** - அதை ஏன் வருத்தமா சொல்றே?
**ஒருவர்** - அவர் சட்டத் தரணியாச்சே.

..........................................

**பொலிஸ்** - முகமூடி போட்டிருந்தது தெரிந்தும் ஏன் கொள்ளையர்களை உள்ளே விட்டீர்கள்.
**வீட்டுக்காரன்** - பன்றிக் காய்ச்சலுக்கு முகமூடி போட்டிருக்காங்க என்று நினைச்சிட்டோம் சார்.
*எ. அகிலா, எமில் நகர், மன்னார்.*

**பொலிஸ்** - விபத்து எப்படி நடந்தது ?
**வாகன ஓட்டுனர்** - எனக்கும் தெரியவில்லை
**பொலிஸ்** - நீ அப்ப என்ன செய்தனி
**வாகன ஓட்டுனர்** - நான் தூங்கிக்கொண்டு இருந்தேனே.

..........................................

**ஆசிரியர்** - திருப்பலியில் உனக்கு பிடித்த பகுதி என்ன?
**மாணவன்** - "சென்று வாருங்கள் திருப்பலி நிறைவேறிவிட்டது."

## சிறுகதை எங்கே?

தே. துஷ்யந்தி,
கற்கிடந்த குளம், முருங்கன்.

கதிரவன் தன் பொற்கதிர்களை பரப்ப விலங்குகளும் பறவைகளும் தம் இருப்பிடத்தை விட்டு எங்கோ செல்கின்றன. இனிமையான தென்றல் மனதினை வருடுகின்ற காலைப் பொழுது அது. ஒரு இளம் பெண் செல்கின்றாள். அவளைப் பார்த்ததுமே அனைவரும் ஏளனமாகச் சிரிக்கின்றார்கள். அருவருப்பாகப் பார்க்கின்றார்கள். ஒதுங்கிச் செல்கின்றார்கள். அந்தப்பெண் நிமிர்ந்து பார்க்கக்கூட முடியாமல் தலையை கீழே போட்டுக் கொண்டு செல்கின்றாள். எங்கே செல்கின்றாள்? அவள் சென்றுகொண்டிருக்கும் போதே அவளது பழைய நின்னவுகள் அவளை மீட்டுகின்றன. பூஞ்சோலை என்னும் அழகிய கிராமத்திலே ராஜேஸ், மாலா என்னும் அழகிய பெற்றோருக்கு பிறந்த ஒரே ஒரு செல்ல மகளே நிறோ. அழகு, அறிவு, பணம் போன்ற எல்லாச் செல்வங்களையும் பெற்ற அவளுக்கு மிதமிஞ்சிய கர்வமும், பிடிவாதமும் நிறைந்து காணப்பட்டது. மற்றவர்களை மதிக்கின்ற தன்மை சிறிதும் அற்றவளாகக் காணப்பட்டாள். நல்ல முறையில் படித்து O/L பரீட்சையில் திறமைச் A/L முதல் வகுப்பில் கணிதப் பிரிவில் நுழைந்தாள். கல்வி கற்றுக்கொண்டிருக்கின்ற வேளையிலே அவளது விதி அவளை எங்கோ இழுத்துச் செல்கிறது. இவ்வேளையிலே இவளது வாழ்க்கையில் குமார் என்னும் இளைஞன் புகுந்தான். இருவரும் பாடசாலை வாழ்க்கையிலே காதலிக்கின்றார்கள்.

இவர்களது காதல் விசயம் நிறோவின் வீட்டிற்குச் செல்கிறது. மகளின் இச்செய்கையினால் நொந்துபோன பெற்றோர் நிறையப் புத்திமதிகளைக் கூறுகின்றனர். ஆனால் அவளுக்கு அப்புத்திமதிகள் கொஞ்சங்கூட பிடிக்கவில்லை. இவ்வாறான நேரத்தில் எல்லாப் பிள்ளைகளும் இப்படித்தானே. இதற்கு நிறோ விதி விலக்கல்ல. குமாரின் குடும்பமும் நிறோவின் குடும்பத்தைவிட செல்வத்தில் சளைத்தவர்களல்ல. இதனால் இருவரும் வீட்டை விட்டு ஓடிவிடுகின்றார்கள். இந்த அவமானம் தாங்க முடியாமல் நிறோவின் பெற்றோர் இறந்து விடுகின்றனர். ஓடி நான்கு மாதங்களின் பின்தான் அவளுக்கு குமாரின் மற்றோர் உருவம் புரிந்தது. பாடசாலைக் காலத்திலே பல பெண்களின் கற்பை சூறையாடிய கொடிய பாவியென்றும் மோசமான குடிகாரனென்றும் புரிந்தது.

தன்னுடைய வரட்டுக் கர்வத்தினால் தன் வாழ்க்கையை தொலைத்து மீண்டும் பெற்றோரைத் தேடிச் செல்கின்றாள். அப்போதுதான் பெற்றோர் இறந்த செய்தியை அறிகின்றாள். அப்போது தான் அவளது ஊர் மக்கள் அவளை அருவருப்பாகப் பார்க்கின்றனர். பெற்றோரையும் இழந்து, கல்வியையும் இழந்து, வாழ்க்கையையும் தொலைத்து கண்ணீரோடு செல்கின்றாள் எங்கே?

குறிப்பு : இதுதான் இன்றைய எமது சமூகத்தின் நிலையும். வாழ்க்கை வாழ்வதற்குத் தான். அந்தந்த வயதில் நடப்பதெல்லாம் நடக்கும். நமக்காக நாம் ஒரு வாழ்க்கையை அமைக்கக் கூடாது. 20 வருடம் வளர்த்த பெற்றோரைவிட 2 மாதத்தில் தெரியும் ஒருவனுடன் சென்றால் இதுதான் நிலமை. எனவே காலம், நேரம் வரும்போது பெற்றோரின் கரங்கள் நமக்குக் கைகொடுக்கும் என்பதை மறவாதிருப்போம்.

## மன்னா விளம்பரப் பலகை

நல்ல மனிதனை விண்ணுக்கு இட்டுச் செல்லும்
சிறகுகள் மரணமும், அன்புமே
ம. யோன்சன், மாகியப்பிட்டி, சண்டிலிப்பாய், யாழ்ப்பாணம்.

ஒருவன் தனது வீடுமுழுவதும் பொருளைப்பரந்த அளவிலே நிரப்பி வைத்திருந்தானாயினும், அதனை அவன் அனுபவிக்காத வரையில் அவன் இறந்தவனே. அந்தப் பொருளில் அவனுக்குச் செய்யத்தக்கதான உரிமை எதுவும் இல்லை.
றெ. மெடிலின் நிறோஸ்,
இறம்பைக்குளம், வவுனியா.

கவிஞன் என்பவன் பிறப்பதில்லை,
உருவாக்கப்படுவதுமில்லை, அவன் உருவாகின்றான்.
கவிஞன் என்பவன் ஓர் உண்மையான மனிதன்.
மற்ற மனிதர்களை நேசிப்பவன். அன்பு காட்டி தழுவிக் கொள்பவன். அவனுடைய வார்த்தையில் மட்டுமல்ல வாழ்க்கையிலும் பொய் வந்து புகாது.
(கவிஞர் மு.மேத்தா) ஜெயா பாலாஜி,முருங்கன்.

"தியாகமும் கடின உழைப்பும் வெற்றியின் கால்தடங்கள்"
"வார்த்தை தவறும்போது வாழ்க்கையும் தவறுகின்றது."
"உண்மைக்கு குரல் கொடுப்பவர் என்றும் விலையேறப் பெற்றவர். உண்மை கடவுளின் உயிர், உண்மைதான் நம்மை விடுவிக்கும்"
அ. [illegible]

"எளிய வாழ்வைப் பற்றி பேசுவதற்கோ எழுதுவதற்கோ நாம் தயங்குவதில்லை. ஆனால் வாழ்வதற்கு தயங்குகின்றோம்."
"பகைமையை இவ்வுலகில் ஒருபோதும் பகைமையால் வெல்ல முடியாது. அன்பினாலே வெற்றிகொள்ள முடியும்"
அ. மரிஸ்ரெலா, பெரிய குஞ்சுக்குளம், மடுரோட்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விண்மீன்களை நோக்கி .....

தொடர் கட்டுரை

— ஆங்கில மூலம் —

அமரர். அருட்கலாநிதி பப்ரிஸ் குரூஸ் FSC

## அத்தியாயம் – 16

*தமிழாக்கம்: அ. யோ. மரியநாயகம் சோசை J.P வங்காலை.*

## சிந்தனைக்கு ஒரு கதை



ஒரு அரசன் அந்த இராச்சியத்திலேயே அதி வேகமாக ஓடக்கூடிய ஒரு குதிரையை வைத்திருந்தான். ஆனால் ஒரு நாள் அந்தக் குதிரை நொண்டத்தொடங்கியது. நொண்டுதல் மிக மோசமாகிவிட்டது. அந்தப்பகுதியிலே உள்ள மிகச் சிறந்த வைத்தியர்கள் பலவிதமான மருந்துகளைக் கொண்டு அதனை குணமாக்க முயற்சித்தனர். ஆனால் ஒன்றும் பயனளிக்கவில்லை. மருந்து கூடக்கூட நொண்டுதலும் கூடியது.

நாட்கள் சில கடந்தபின் ஒரு நாள் அந்த அரசர் யன்னலின் ஊடாக தனது பிரபல்யமான குதிரை காற்றைப்போல் விரைந்து பந்தயம் ஓடும் மைதானத்தை மனச்சோர்வுடன் பார்த்துக்கொண்டிருந்தார். என்ன செய்யலாம் என்று அங்கலாய்த்தார். அப்பொழுது குதிரைக்காவலன் அந்தக் குதிரையை அழைத்து வருவதைக் கண்டார். குதிரை வழமை போல் நொண்டிக்கொண்டு வந்தது. ஆனால் ஏதோ ஒன்று அவரது கண்ணில் பட்டு அவரது சிந்தனைக்கு ஒரு அதிர்ச்சி அலையை அனுப்பியது. அந்தக் குதிரைக் காவலனும் நொண்டிக்கொண்டு வந்தான். இரவு வேளையில் ஆகாயத்தில் ஒரு மின்னல் பளிச்சிடுவது போன்று அவரது சிந்தனைக்கு ஒரு விடயம் தென்பட்டது. அதாவது பாவம் அந்தக் குதிரை தனது குதிரைக் காவலனைப்போல் நடக்கிறது என்பதுதான் அது. குதிரைக் காவலனுக்கு மருந்து தேவைப்பட்டது. ஆனால் வைத்தியம் செய்யப்பட்டது குதிரைக்கு.....!

# உங்களுக்குத் தெரியுமா?

## மறையறிவுப் போட்டி– 106

*தொகுப்பு : திரு ச. மாட்டின் டயஸ்*

இம்மாதத்துக்கான வினாக்கள் யாவும் 52ம் திருப்பாடலில் இருந்து 61ம் திருப்பாடல்கள் வரை உள்ள பகுதிகளிலிருந்து தொகுக்கப்படுகின்றன. இவை யாவும் தாவீதரசனால் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் பாடப்பட்டவை.

இப்பாடல்களுக்கு மேலுள்ள விவரணங்களைப் படித்துப் பார்த்தால் தாவீது மன்னன் எத்தனை விதமான துன்பங்களுக்குள் போய்வந்துள்ளார் என்பது நமக்குத் தெளிவாகத் தெரியவரும். அவர் தமது எதிரிகளுக்கு பயந்து ஒழிந்துகொண்ட சந்தர்ப்பங்களும் உண்டு. பெலிஸ்தியரால் பீடிக்கப்பட்ட சம்பவங்களும் இருந்திருக்கின்றன என்பதைக் கண்டுகொள்ளலாம். இந்தப் பாடல்கள் எல்லாம் இசை சேர்த்துப் பாடப்பட்ட பாடல்கள்.

இனி நமது வினாக்களுக்கு வருவோம்.

1. கடவுளின் பேரன்பில் நான் எப்போதும் நிலைத்திருப்பதனால் நான் எப்படி இருக்கின்றேன்?
2. இறைவன் யாருடைய எலும்புகளைச் சிதறடிப்பார்?
3. நெடுந்தொலைவு சென்று பாலைநிலத்தில் இளைப்பாறுவதற்கு தனக்கு என்ன வேண்டும் எனத் தாவீதரசன் கேட்கின்றார்?
4. கடவுள் யாரை ஒருபோதும் வீழ்ச்சியுற விடமாட்டார்?
5. கடவுள் தன் தோற்பையில் எதைச் சேர்த்து வைத்துள்ளதாகத் தாவீதரசன் கூறுகின்றார்?
6. ஆண்டவரின் பேரன்பு வானளவு உயர்ந்துள்ளது என்றால் அவரது எப்பண்பு முகில்களைத் தொடுகின்றது?
7. பொல்லார் எவ்விதம் நடந்துகொள்கின்றனர்?
8. 59ம் திருப்பாடல் தாவீதரசனால் பாடப்பட்டது. தன்னைக் காக்கும்படி அவர் இறைவனிடம் வேண்டுகின்றார் எப்போது?
9. கடவுளுக்கு அஞ்சி நடப்போர் எதிரிகளின் அம்பினின்று தப்பித்துக்கொள்ளுமாறு கடவுள் செய்தது என்ன?
10. துன்ப நாட்களில் தாவீதரசன் எங்கே தஞ்சம் புக விரும்புகின்றார்?

**மாணவர் மறையறிவுப் பகுதி இல. 104இற்கான கேள்விகளுக்கு .21..... பேர் விடையளித்திருந்தனர்.**

## இவர்களுள் பரிசுக்குரியவராகத் தெரிவுசெய்யப்பட்ட அதிஸ்ரசாலி:

வி. வின்சன் பற்றிக், 5ம் வட்டாரம், விடத்தல் தீவு.

### பாராட்டுக்குரியவர்களாக தெரிவுசெய்யப்படும்

## 10 அதிஸ்ரசாலிகள்

1. பி. யூஜிற்றா, இசைமாலைத்தாழ்வு, முருங்கன்.
2. எம். அன்புநாயகி, சூரியகட்டைக்காடு, நானாட்டான்.
3. என். எச். ஜிம்சன் குலாஸ், 9ம் வட்டாரம், வங்காலை.
4. டெ. டெனிஸ்ரன் றோச், யோசவ் வாஸ் நகர், தோட்டவெளி.
5. அ. மேரி ஜஸ்மின், இல.-24, ஆஸ்.வீதி, குடியிருப்பு, வவுனியா.
6. யே. மொறின் சிந்துஜா, கன்னாட்டி, அடம்பன்.
7. வை. ஜே. டியூலன், நானாட்டான்.
8. ச. தர்ஷிக்கா றொஷானி, பெரியகடை, மன்னார்.
9. கென்றீசன் சுகந்தினி, பொன்தீவுகண்டல், அளவக்கை
10. அ. ஆன் ஜெறோமி குரூஸ், தாழ்வுபாடு, மன்னார்.

## கருச்சிதைவு .....

11ஆம் பக்கத் தொடர்ச்சி

ஏன் நாம் கருச்சிதைவினை நாடுகின்றோம் என்று பார்க்கின்றபோது அது நமது பண்பாட்டு விழுமியங்களை இழந்த காரணத்தினாலே என்பதை அறிந்துகொள்ளலாம்.

முதலாவது ஒருத்தனுக்கு ஒருத்தி என்ற திருமணச்சட்டத்தினை பலர் இன்று புறக்கணித்து வருகின்றனர். குடும்ப எல்லை தாண்டிய உறவுகள், கள்ளக் காதல்கள், முறையற்ற திருமணங்கள் என்பன மூலம் கருத்தரித்தால் கருச்சிதைவை நாடவேண்டி ஏற்படுகின்றது. எனவே குடும்ப உறவின் புனிதத்துவத்தைப் பேணிக்காக்க வேண்டியது எம் அனைவரின் கடமை. அப்போதுதான் கருச்சிதைவு ஒருபோதும் அவசியப்படாது.

அடுத்தது முதிர்ச்சி இல்லாத காதல்கள். சுயகட்டுப்பாடு, உண்மையான அன்பு, ஏதுமின்றிப் புரிந்துணர்வில்லாத மனத்துடன் கட்டிளமைப் பருவத்தினர் பலர் காதலிக்கின்றபோது சிலவேளைகளில் அனைவரின் கண்களிலும் மண்ணைத் தூவிவிட்டு தங்கள் கற்பைப் பறிகொடுத்து வாழ்வைத் தொலைக்கின்றனர். முடிவு கருச்சிதைவு! மனச்சாட்சியை மாடு தின்றுவிட்டதோ என்னவோ?

மற்றும் இன்று முன்னேற்றம் கண்டு வருகின்ற தொழில்நுட்பமும் பாரியளவு பங்களிப்பை வழங்கி வருகின்றது. இணையத்தளம், கைப்பேசி, சீடி, டிவிடி எனப் பல கோணங்களில் நீலப்படங்கள் உலா வருகின்றன. இவை மிக இலகுவாக இளவயதினரைத் தன் வலைக்குள் போட்டுக்கொள்கின்றது. இதன்போது தூண்டப்படுகின்ற பலர் படத்தில் வருவது போலவே தாமும் நிஜத்தில் செய்ய நினைத்து படுகேவலமான உறவுகளில் (Rape, Incest) ஈடுபட்டு மாட்டிக்கொள்கின்றனர். விளைவு கருச்சிதைவு! எனவே நாம் நமது கலாச்சார விழுமியங்களைச் சீராக கடைப்பிடிக்கும்போது அவசியமே இல்லாத கருச்சிதைவு எமக்குத் தேவைப்படாது.

கருச்சிதைவு சாதாரணமான 'Operation' அன்று. மாறாக அது திட்டமிட்டுச் செய்யும் மனிதக் கொலை. உடலுறவின்போது விந்தைத் தரையில் சிந்தியவனுக்கே (தொ. நூல்.38:9) ஆண்டவர் மரணத்தை தந்தார் என்றால் கருச்சிதைவு செய்வோரின் நிலை? குழந்தை ஊனமுற்றிருந்தால் எம்மால் அதை வளர்க்க முடியாதா? ஏன் ஏராளமான மறைபரப்புச் சபைகள் உள்ளன? அவற்றைப் பராமரிக்கக் கூடாதா? ஒருவர் ஊனமுற்றிருந்தால் (பிறப்பால்) அது கடவுளின் வல்லமை வெளிப்படவே என்று இயேசுவே கூறியிருக்கின்றார் (யோவா 9:3).

தன்குட்டிகளைத் தின்னும் நாய், முயல் போன்ற உயிரினங்களைப் பார்த்திருக்கின்றோம். ஆனால் தன் சொந்தக் குழந்தையைக் கொல்லும் தாய் பற்றிக் கேள்விப்படும்போது என்ன நினைக்கத் தோன்றுகின்றது! இனி அம்மா என்று அழைக்க முடியுமா? கொலைகாரி என்று அழைப்பதே சாலப் பொருந்தும். வயிற்றில் தன் குருதி பருகி வளரும் குழந்தையைத் தானே கொல்லுதல் தாய்மையைக் கொல்லுவதாகும், மனிதத்துவத்தைக் கொல்லுவதாகும். இன்று கொலை செய்யப்படுவதில் அடங்குவது குழந்தையல்ல. அது நாளைய ஞானி, விஞ்ஞானி, தலைவன், கவிஞன், சிந்தனையாளன், சிறந்த ஆன்மீகச் சிற்பி என்பதை நினைத்துக்கொள்வோம்.

**குறிப்பு:–** ♦ கருச்சிதைவு செய்யும் பெண்களில் 33% பேர் மீண்டும் குழந்தை பெற்றுக்கொள்ள முடிவதில்லையாம். ♦ கருச்சிதைவு செய்யும் பெண்களில் 30% பேர் மனநோய்க்கு அடிமையாகி வாழ்வை இழக்கின்றனராம்.

பொய்வழிகாட்டும் உலகை மறந்து மெய்வழி காட்டும் திருச்சபை வழி செல்வோம். இளம் தலைமுறையினரே இது உங்கள் கவனத்திற்கு.■

## மனநோய் ...... 11ஆம் பக்கத் தொடர்ச்சி

குடும்பத்தில் உள்ள முக்கிய அங்கத்தினர் இறத்தல், விவகாரத்து, கணவன் - மனைவி பிரிந்து வாழ்தல் போன்ற நிகழ்வுகள் போன்றன குழந்தைகளை இளம் குற்றவாளிகளாக மாற்ற உதவுகின்றன. மனிதர்கள் ஒருவரை ஒருவர் ஏமாற்ற முனையும்போதும் ஒருவரை மற்றொருவர் அநியாயமாக நடத்தும்போதும் மனித மனம் துன்புறுகிறது. ஒருவருக்கொருவர் புரிந்துகொண்டு விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை இன்மை காரணமாக மனவருத்தம் ஏற்படுகிறது.

இன்று நம் சமுதாயம் அதிக போட்டி உடையதாக உள்ளது. இதன் காரணமாக தோல்வி மனப்பான்மை நமக்கு அதிக அளவில் ஏற்படுகின்றன. ஒருவருக்கு அடுக்கடுக்காக தோல்விகள் நேரும்போது மனச்சிதைவு ஏற்படுகிறது.

வாழ்க்கையில் ஏற்படும் சுமைகள், பிரச்சினைகள் காரணமாக அச்சம், கோபம் போன்ற உணர்வுகள் அதிகம் ஏற்பட்டு உடலில் பல சமச்சீர் குலைவுகள் ஏற்பட்டு உள்ளம் பாதிக்கப்படுகிறது. ஒருவனுக்கு தன்னைச் சுற்றியுள்ளோரிடையே இணக்கமற்ற நிலை ஏற்படும்போது அதாவது தனது குறிக்கோளும், சுற்றி உள்ளவர்களின் குறிக்கோளும் வேறுபடும் நிலையில் - மனநிலையில் கோளாறுகள் ஏற்படுகின்றன.

எனவே, மனிதனின் மன தைரியத்துக்கும், நம்பிக்கைக்கும் நிம்மதிக்கும், உற்சாகத்திற்கும், குதூகலமாக இருக்க இறைதியானம் செய்வதே சாலச்சிறந்தது.■

# நீங்காத நினைவுகள்

## 12ம் ஆண்டு நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 11 . 03 . 1936 | 05 . 06 . 2000 |

### திரு. நீ. சந்தியாப் பிள்ளை

(ஓய்வு பெற்ற அதிபர்) ஒலிமடு. நானாட்டான்.

*"ஆண்டவரும் தாம் மீட்டுக்கொண்டவர்களை நாள்தோறும் அவர்களோடு சேர்த்துக்கொண்டே இருந்தார்" (திரு.பணி 2:47)*

விண்ணக வாழ்வில் நுழைந்து ஆண்டுகள்
பன்னிரெண்டானாலும் எம் அகங்களை விட்டு
என்றும் நீங்காத அன்புப் பப்பாவே! அன்பாகப் பேசி
பண்பாக பழகி பணிவோடு பணிகள் பல ஆற்றி
ஓய்வுபெற்ற வேளையிலே காலன் உம்மைக்கொண்டு
சென்றானே மறக்கமுடியுமா! உம் புன்னகையை
நினைக்காத நாளில்லை உம் அன்புச் செயல்களை
எண்ணி எண்ணி கருமங்கள் ஆற்றி - எம்மை சீரோடும்
சிறப்போடும் வாழ வைத்துவிட்டு நீங்கிச் சென்றீர்களே
கோடான கோடி நன்றிகள் கூறிநிற்கின்றோம்.
எம் உயிர் உள்ளவரை உம் ஆன்ம
ஈடேற்றத்திற்காய் வேண்டுகின்றோம் இறைபதத்தை

*உம் பிரிவால் துயருறும் :*
*மனைவி, பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்*

## 4ம் ஆண்டு நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 02 . 12 . 1933 | 26 . 06 . 2008 |

### ஜேற்றாட் அழகேஸ்வரி சந்தாம்பிள்ளை

(முருங்கன் பிட்டி. முருங்கன்)

என்றும் எங்கள் அன்பின் அம்மம்மா இன்றுடன் நீங்கள் எம்மை விட்டுப்பிரிந்து நான்கு ஆண்டுகள் ஆகிவிட்டன. பெற்ற பிள்ளைகள் போன்று, பேரப்பிள்ளைகளாகிய எம் மேலும் நீங்கள் அக்கறை காட்டி, அன்பாக வழிநடத்தி நல்வழிப்படுத்தினீர்கள். நாங்கள் படிப்படியாக வளர்ச்சி அடைந்துகொண்டு செல்லும்போதும் உங்கள் நினைவும் எங்களுடன் தொடர்ந்து வளர்ந்துகொண்டே செல்கின்றது. உங்கள் செபத்தின் வலிமை இறை வல்லமையாக எம்மேல் பொழியப்படுவதை நாங்கள் உணர்கின்றோம். உங்கள் விருப்பப்படி நாங்கள் வளர்வோம், உயர்வோம், வாழ்வோம். அம்மம்மா எங்களுக்காக இறைவனிடம் வேண்டுங்கள்.

*பிரிவால் துயருறும் - குடும்பத்தினர், பேரப்பிள்ளைகள் - ஜோய், விஜய், நிறோஷினி, லக்ஷினி, மிசேல், டானியல், றாகுல், லக்ஷிக்கா, பிறியங்கா, மரினோ, புறினோ, புளோறா, மிலிங்டன், மிலிங்டா.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.119

## எசாயா அதிகாரம் 34 முதல் 66 முடிய

உங்கள் விடைகளை யூலை மாதம் 20ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கவும். சரியான விடைகளை எழுதிய மூன்று அதிஸ்ரசாலிகளுக்கு பரிசுத்தொகைகள் அனுப்பிவைக்கப்படும். பாராட்டுப்பெறும் 50 பேருடைய பெயர் விபரங்கள் மன்னாவில் பிரசுரிக்கப்படும். (பதிப்பாசிரியர்)

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | 21 | | | 05 | | * | 12 | | |
| | | * | | | 16 | | | | |
| | | * | 07 | | | | | | |
| 10 | | | | 02 | | | * | 09 | 14 |
| | * | | * | | | 25 | | | 06 |
| | | 23 | 17 | | | 15 | 27 | 29 | * |
| 20 | * | | 08 | 26 | | 19 | | | |
| | 18 | | | 22 | 28 | | 24 | | |
| | * | 13 | | | | | * | 03 | |
| 04 | | | | | | 11 | | | * |

(___ என்ற அடையாளம் சுட்டி நிற்பது முழு இறைவார்த்தையின் இடைச்சொற்கள் என்பதை கவனத்தில் கொள்ளவும்)

### இடமிருந்து வலம்

1.உதரத்திலிருந்தே உங்களைத்___உங்களைச்.............. நான்.
3. உன் .................... இனித் தேய்ந்து போகாள்.
4. ஆண்டவரின் பெயர்மீது ................ கொண்டு ___கொள்பவன்
10. .................... கக்கும் மணல்பரப்பு நீர்த்தடாகம் ஆகும்.
11. எசேக்கியாவிற்குச் .................... கொடுக்காதீர்கள்.
12. அவன் .................. கல்தேயருக்கு எதிராக எழும்.
13. நீதியுள்ளவரும் மீட்பு அளிப்பவருமான .................. என்னையன்றி___இல்லை.
16. தீமை செய்ய அவர்கள் .................. விரைகின்றன.
17. யூதா வீட்டாருள்___எஞ்சியோர் ...................... வேர்விட்டு மேலே கனி தருவர்.
18. கல்தேயரின் மகிழ்ச்சிப் ...................... புலம்பலாக மாறும்.
19. மணமகன்___உன் ...................... உன்னில் மகிழ்வார்.
24. ........ காற்று அவர்களைத் துரும்பென அடித்துச் செல்கிறது.
25. உம் புனித நகர்கள் .................. நிலமாயின.

### வலமிருந்து இடம்

2. வேறொருவன்___என்றுதன் ............... எழுதி ___கொள்வான்.
6. உன் .................. எழுப்பு, அஞ்சாதே!
15. நான் அவர்களைக் கை .................. மாட்டேன்.
16. பாதை வழியே .................. படாது செல்கின்றான்.
22. உங்கள் எலும்புகள் பசும் .................. போல் வளரும்.
23. என் பணிக்கான ................ என் கடவுளிடம் இருக்கின்றது என்றேன்.

### மேலிருந்து கீழ்

1. உன் ............... எப்பொழுதும் என் கண்முன் நிற்கின்றன.
3. உண்மையாகவே நீதியை .................... நாட்டுவார்.
5. என் .................. விண்ணுலகை விரித்து வைத்தது.
8. அவன் .................. அவர்களைப்___செய்கிறது.
12. எனக்கென்று நான்___என் .................. எடுத்துரைப்பர்.
16. மண்ணகம் என் ....................
17. ஆண்டவராகிய என் தலைவரின் ....... என்மேல் உளது.
20. அவர்களின் மேன்மை வயல்வெளிப் ........................
21. அவனுக்குப் பின்___அவன் ...................... ஆட்சி செய்தான்.
23. அவ்வாறே அண்ணகனும், நான் வெறும் ...................... மரம்___கூறாதிருக்கட்டும்.
28. மேற்கிலிருந்து .................... ஒன்று திரட்டுவேன்.
29. அவர் புகழைத் ...................... நாட்டினரிடையே அறிவிப்பார்கள்.

### கீழிருந்து மேல்

4. நீங்கள் வேதனையின் .................... உழன்று கிடப்பீர்கள்.
7. எனவே அவர்கள் ஒருங்கே ...................... வந்தனர்.
9. அவர் எனக்கு ........................ பொழிவு செய்துள்ளார்.
11. ........................ போது அவர் செல்வரோடு இருந்தார்.
14. ........... செய்வோரே. இதை நினைவில் கொள்ளுங்கள்.
23. ஏனெனில்___எவரும் ...................... தரவில்லை.
25. அவருக்கு எதிராக அன்றோ நாம் ............ செய்தோம்.
26. உங்கள் ............ கொண்டு வாருங்கள் என்கிறார் ஆண்டவர்.
27. திராட்சை இலை___அத்தி .......... வீழ்வது___உதிர்ந்து விடும்.
28. மலைகள் உம் முன்னே ...................... ஓடின.

## விவிலியக்குறுக்கெழுத்துப் போட்டி இல. 117ல்

சரியான விடைகளை அனுப்பியவர்களில் பரிசுபெறும் மூன்று அதிஸ்ரசாலிகள்:




**முதலாம் பரிசு**
இ. லக்சினி,
இல -19A , பாக்கியம் லேன்,
பெரிய உப்போடை, மட்டக்களப்பு.

**இரண்டாம் பரிசு:**
எம். அன்பு நாயகி,
சூரியகட்டைக்காடு,
நானாட்டான்.

**மூன்றாம் பரிசு:**
என். ஜஸ்மினி,
முதலியார்குளம்,
செட்டிகுளம்.

விடைகளை எழுதி அனுப்பியவர்கள் 95 பேர்.
சரியான விடைகளை எழுதியோர் 78 பேர்.

## விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல. 117ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பாராட்டுப் பெறும் போட்டியாளர்கள்

1. பி. யூஜிற்றா, இசைமாலைத்தாழ்வு, முருங்கன்
2. செ. இருதயநாதன் பறுனாந்து, முத்தரிப்புத்துறை.
3. குணமணி சேவியர், பெரியகடை, மன்னார்.
4. க. செலஸ்ரினா, இத்திக்கண்டல், அடம்பன்.
5. விஸ்னுகாந்தன் ஷெண்ஜீவ், 384/65, லூ.வீதி, பெ.உ., மட்டக்களப்பு.
6. எம். அனிஸ்ரெலா, சென்இராயப்பர் இல்லம், கார்.ம, பூண்டுலோயா.
7. திருமதி. ஜெயம் நந்தா, பரீஸ் - 19, பிரான்ஸ்.
8. அ. கில்டா, கட்டையடம்பன், மடு றோட்.
9. ஞா. மரிய ஜெனிஸ்ரின், யோசப்வாஸ் நகர், தோட்டவெளி.
10. வி. வேஜின் டிலைக்சனா, சின்னப்பண்டிவிரிச்சான், மடு.
11. கென்றீசன் சுகந்தினி, பொன்தீவு கண்டல், அளவக்கை.
12. அ. பர்னாந்து தவராசா, இத்திக்கண்டல், அடம்பன்.
13. எஸ். மேரி குலோஜினி மொறாய்ஸ், 1ம் வட்டாரம், வங்காலை.
14. சி. வின்சன் யோட்ஸ், சின்னப்பண்டிவிரிச்சான், மடு
15. ம. மத்தியூஸ்குரூஸ், அரிப்பு, சிலாவத்துறை.
16. நோ. ஜெக ஜீவன் றோச், பள்ளிமுனை, மன்னார்.
17. சி. நோயல் கிறிஸ்ரி றோச், மாவட்டநீதிமன்றம், மன்னார்.
18. டி. றெஜிதா, கரவெட்டி வடக்கு, கரவெட்டி.
19. எம். சாலினி, சூரியகட்டைக்காடு, நானாட்டான்.
20. செ. ஸ்ரீபன்றாஜ் லெம்பேட், முத்தரிப்புத்துறை.
21. மே.பி.றோ. கிறிஸ்றோய், 18, கோவில்வீதிஒழுங்கை, யாழ்ப்பாணம்
22. யே. யஸ்ரீன், மடு ஆலயம், மடு.
23. யோ. சுதர்சினி, அப்.கார்மேல் நவகன்னியாசம், கம்பஹா.
24. சுகந்தன், மடு ஆலயம், மடு.
25. அ. கரோளின் கிர்த்திகா, 41, மரியா.வீதி, திருகோணமலை.
26. அ. ஜெயப்பிரியா, பெரியகட்டைக்காடு, நானாட்டான்.
27. வி. மேரி வினுஜா, முத்தரிப்புத்துறை.
28. எஸ். ஆனந் டில்ஷான் மொறாய்ஸ், 1ம் வட்டாரம், வங்காலை.
29. டெபோறா மோகன்ராஜ், தபால்கந்தோர் வீதி, மன்னார்.
30. றொ. ஸ்ரெலா, இல.50, வீரபுரம், நேரியகுளம்.
31. என். எச், ஜிம்சன் குலாஸ், 9ம் வட்டாரம், வங்காலை.
32. எ. றொசானி, இல16/2 பாக்கியம்லேன், பெ.உப், மட்டக்களப்பு.
33. ஜி. அல்பேட், வெல்கம்லேன், பாலையூற்று.
34. செ. சுரேக்கா, இத்திக்கண்டல், அடம்பன்.
35. ந. றோசேப் அன்ரனி, பரீஸ் 19, பிரான்ஸ்.
36. அ. சதுர்ஷனா, பள்ளங்கோட்டை, நானாட்டான்.
37. லீ. டெய்சி, பெற்றா, மன்னார்.
38. பா. துஷ்யந்தி, இத்திக்கண்டல், அடம்பன்.
39. எப். கில்மன், மணற்குளம், உயிலங்குளம்.
40. எ. றெனி டானியல், யோசப்வாஸ்நகர், தோட்டவெளி.
41. எஸ்.சி.சி. நவரெத்னராஜா, பா.வீதி, முதலியார்குளம், செட்டிகுளம்.
42. கமலா கிறிஸ்தோப்பர், மடுமாதாவீதி, சின்னக்கடை, மன்னார்.
43. பா. பானுஷா, டொ.கன்னி.இல்லம், துள்ளுக்குடியிருப்பு, பேசாலை.
44. எஸ். நிசாளினி, சூரியகட்டைக்காடு, நானாட்டான்.
45. எஸ். நிஷாந்தினி கூஞ்ஞ, 8ம் வட்டாரம், பேசாலை.
46. தேவிகா பத்மராஜா, மடுமாதா வீதி, பெற்றா, மன்னார்.
47. பி. நிலாளன், இத்திக்கண்டல், அடம்பன்.
48. க. கிறிஸ்ரலின், இத்திக்கண்டல், அடம்பன்.
49. கை. கொட்வின், கள்ளிக்குளம்., அடம்பன்.
50. ம. வினுசா, ஜோசப்வாஸ் நகர், தோட்டவெளி.

## இல.117 இற்கான சரியான விடைகள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| கொ[03] | லை | சி[13] | * | யா | னி | ன | அ[4] | ன் | பு |
| ம் | நி[8] | றை | * | ழி | அ[10] | * | ர | அ[14] | * |
| பு | ல | ப[17] | டை | * | ணி | வை | சு[20] | ர | மு[26] |
| * | ம் | த் | க[29] | சா[22] | ட் | சி | * | ச | * |
| ல் | கி | தி[1] | * | ம் | ழ | ப[25] | மீ[5] | ஸ் | பா[9] |
| வு | * | ர | பா[11] | ள் | ரு | சு[21] | க் | * | றை |
| கா[16] | ல | ம் | லை | றி | கு[18] | * | கா | பெ[15] | ற |
| * | ய | * | வ | ள் | ம் | வு | யா[6] | ரி | * |
| கா[27] | டி | பொ[24] | க[7] | நா[30] | * | ழு | வே[19] | து | இ[23] |
| சா[2] | வா[27] | ய் | * | சி | ஞ் | அ[12] | று | * | னி |

விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.118ற்கான முடிவுகளை 2012ம் ஆண்டு யூலை மாத மன்னாவில் எதிர்பாருங்கள்.

## அதிர்வுகள் .......... 10ஆம் பக்கத் தொடர்

சரி, அப்படியே ஐம்பது ஆயிரத்தையோ, ஒரு இலட்சத்தையோ கொடுத்துவிட்டால் அதற்கும், "இப்ப ஐம்பது ஆயிரம் - ஒரு இலட்சம் எல்லாம் ஒரு காசே! அதுக்கு என்ன செய்யலாம்! என்னத்த வாங்கலாம்? ஒரு 'ரொயிலெற்'றக்கூட (Toilet) கட்ட ஏலாது..." என சில நாட்களுக்கு முன் ஒருவர் இன்னொருவருக்குக் கூறியது என் காதில் விழுந்தது - இந்தக் காதுகளில் விழுந்தால் அது தப்புமா? - தப்புவதற்கு வாய்ப்பே இல்லை என நீங்கள் எண்ணுவது தெரிகிறது - இப்படி, உதவிகளையும் பெற்றுக்கொண்டு, விசித்திரமான வியாக்கியானம் செய்பவர்கள் நம்மிடையே இன்னும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

### பொல்லுக் கொடுத்து அடிவாங்கியது பழைய கதை!

பொல்லுக் கொடுத்து அடிவாங்கிய பழைய கதையைத்தான் இதுவரை கேள்விப்பட்டிருப்பீர்கள்! ஆனால், இப்போது நடப்பது எப்படிப்பட்ட கதை என்றால் பொல்லையும் கொடுத்து, அடிக்க, முதுகையும் காட்டுகின்ற கதை!! கஸ்ரப்பட்டு உழைக்கும் பணத்தையும் கொடுத்து, எவ்வளவு விமர்சனங்களையும், வியாக்கியானங்களையும் கேட்க வேண்டி இருக்கிறது! இவ்விடத்தில் மட்டும் ஒரு சிறு குறிப்பு -'ரொயிலெற்'றக்கூட (Toilet) அவர்கள் தருகின்ற காசுக்குக் கட்ட முடியவில்லை என்றால், 'கடமையைச் செய்ய' காட்டுக்குப் போகவேண்டியதுதானே! பிறகேன் 'ரொயிலெற்'றை எல்லாம் கட்டுகிறீர்கள் என, இப்படிக் கூறுபவர்களைப் பார்த்துக் கேட்க வேண்டும்போல் இருக்கிறது.

(தொடர்ந்து அ...தி....ரு.....ம்......)

## ஆன்மீகம் அறிவியலுக்கு ..... 2ஆம் பக்கத் தொடர்

கற்றொழுக வேண்டிய ஆன்மீக சிந்தனைகள் கரையாண்களின் சாப்பாடாகிக் கொண்டிருக்கின்றன. வெளிப்படுத்த வேண்டிய அன்பும், அமைதியும் அறிவியலுக்கு முன் அடிமையாக்கப்பட்டுள்ளன. நற்செய்தியின்பால், வீழ்த்தப்பட்ட விதைகளின் விழிகள் சுமந்த ஆன்மீக வாஞ்சையும், இறையியல் தேடலும் கேள்விக் குறியாக்கப்பட்டுள்ளன. இரத்தக் களரியில் இறைவனுக்காய் தீர்த்தமாகி கிறிஸ்துவின் குருதியில் உறைந்து போனவர்களுடைய கனவுகள் பொய்யாக்கப்பட்டுள்ளன.

முடிவாக, அற்ப சொற்ப ஆசைகளுக்காக அறிவியலை நோக்கி பயணிப்பதென்பது குருட்டுத்தனமான வாழ்க்கையாகும். அவசிய தேவையில் அறிவியல் - உதவுவது ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய கருத்தாகும். ஆனால் எமது முழு வாழ்க்கையையும், அறிவியலுக்கு அடிமையாக்கி கிறிஸ்தவ ஆன்மீகத்தை தவறவிடுவது மிகப்பெரிய மடமையாகும். ஒருவன் தன்னைப்பற்றி அறிந்து, தெரிந்து செயற்பட ஆன்மீகம் தேவையாகும். என்னை இறைவன் எதற்காகப் படைத்தான் என சிந்திப்பதற்கும் அதற்கான விடை காண்பதற்கும் ஆன்மீகத்தோடு பயணிக்க வேண்டும்.■

## குருக்கள் துறவியரின் .. 1ஆம் பக்கத் தொடர்

பின்னர் உறுதிபூசுதல் திருவருட்சாதனத்தை அண்மையில் பெற்ற மற்றும் பெறவிருக்கும் இளம்வளர் பருவத்தினரைச் சந்தித்து உரையாற்றிய திருத்தந்தை இயேசுவின் நற்செய்திக்கு 'ஆகட்டும்' என்று சொல்லி அதனை ஏற்றுக்கொண்டவர்கள் வாழ்க்கையில் தூய ஆவியின் வியத்தகு வல்லமை எவ்வாறு செயல்படுகின்றது என்பது குறித்து எடுத்துச் சொன்னார்.

ஞானம், அறிவு, ஆலோசனை, உறுதி, விமரிசை, பக்தி, தெய்வபயம் ஆகிய தூய ஆவியின் ஏழு கொடைகள் பற்றியும் விளக்கிய திருத்தந்தை குருத்துவ மற்றும் அர்ப்பணிக்கப்பட்ட துறவு வாழ்வுக்குக் கிறிஸ்து அழைக்கும்போது அதற்குத் திறந்த மனத்துடன் பதில் சொல்லி அவரைப் பின்செல்லுங்கள் என்றும் இளம்வளர் பருவத்தினரைக் கேட்டுக்கொண்டார்.

## உலகிலேயே மிக .... 1ஆம் பக்கத் தொடர்

தற்போது உலக அளவில் மிக உயர்ந்த அறிவுத்திறன் (IQ) கொண்டவர் என்று கருதப்படுபவர் கொரியாவைச் சேர்ந்த Kim UnG - Yong இவரது அறிவுத் திறன் அளவு 210 இதுவே தற்போது உலகசாதனையாக உள்ளது. விஷாலியின் அறிவுத்திறன் (IQ) அளவு 225 என்பது குறிப்பிடத்தக்கது.

அறிவியல் மேதை ஆல்பர்ட் ஐன்ஸ்டைனின் அறிவுத்திறன் அளவு 160 என்றும், லியோனார்டோ டாவின்சியின் அறிவுத்திறன் 200 என்றும் சொல்லப்படுகிறது.

## உலங்குவானூர்தி ....1ஆம் பக்கத் தொடர்

தனியார் உலங்குவானூர்தி மூலம் கொழும்பிலிருந்து வந்த அவர், மன்னார் பொது விளையாட்டரங்கில் வந்து இறங்கி அங்கிருந்து ஆயர் இல்லத்திற்குச் சென்றார். சுமார் ஒரு மணித்தியாலம் இடம்பெற்ற இச்சந்திப்பு மரியாதையின் நிமித்தமான சந்திப்பே என ஆயர் இல்ல வட்டாரங்கள் தெரிவித்தன.

## ஈழத்தின் புகழ்பூத்த .... 4ஆம் பக்கத் தொடர்ச்சி

யாழ் நூலகத்தில் ஒரு பகுதியில் தமிழ் ஆய்வு அகம் உருவாக்கப்பட்டு, நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர், தமிழ்த்தூது தனிநாயகம் அடிகள், கலாநிதி தாவீது அடிகள் ஆகியோரின் சகல ஆய்வு நூல்களும், ஏனைய அறிஞர்களின் ஆய்வுக்குரிய நூல்களும் இடம்பெறச் செய்வதனால் தாவீதின் பணி தொடர வழி பிறக்கும். தேசிய ஒருமைப்பாட்டிற்கு உழைத்துப் பலியான தாவீது அடிகளைக் கௌரவித்து அரசு முத்திரை வெளியிட வேண்டும். யாழ் பல்கலைக்கழகம் புத்தி ஜீவிகளின் குழு மூலம் சொற்பிறப்பு ஒப்பியல் அகராதி முற்றுப்பெற வழி செய்வது தமிழ் அன்னைக்குச் செய்யும் முக்கிய பணியாகும்.

### மன்னாவுக்கு பணம் அனுப்பும் விபரம்

வங்கியின் பெயர் : Hatton National Bank Ltd, Mannar
பணம் பெறுபவர் பெயர் : The Editor, MANNA
வங்கிக் கணக்கு இலக்கம் : S/A No. 020020029782

## தயவுசெய்து அவதானியுங்கள்

நீத்தார் நினைவுப் பகுதியில் உங்கள் அன்புக்குரியவர்களின் நினைவுகளைப் பிரசுரிக்க விரும்புகின்றவர்கள் எந்த மாதத்தில் இந்த நினைவுகள் பிரசுரிக்கப்படவேண்டுமோ அந்த மாதத்திற்கு முதல் மாதம் 10ம் திகதிக்கு முன்னர் அனைத்து விபரங்களையும் எம்மிடம் ஒப்படைக்க வேண்டும் என்பதை அன்போடு நினைவுபடுத்துகின்றோம்.

**கட்டண விபரம்**
கறுப்பு வெள்ளை 4,500/= கலர் 7,500/=



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்காத நினைவுகள்

## 2ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 21 08 1995



உதிர்வு 11 06 2010

### நீ. கனிலன்

**சிறுக்கண்டல், முருங்கன்.**

உன்னைப் பிரிந்து வாழ முடியவில்லை
எதற்கு ஏன் இந்த வாழ்க்கை என்றழுகின்றது மனம்.
பாசம் பறிபோய் விட்டதே என்று பகலிரவாய் அதே சிந்தனை.
உனக்கீடாக எதையும் ஏற்று ஆறுதலடைய முடியவில்லை.
உன் அன்புக்கு ஈடாக எங்கள் உயிரைத்தான் தரமுடியும்.
கடவுளின் கட்டளையை மீற முடியாமல்
இந்த உடல்களில் உயிர்கள் இருக்கின்றன.
உனது உலக வாழ்க்கை முடிந்த அன்று
எங்கள் வாழ்க்கையும் முடிந்துவிட்டது.
"எனது இலட்சியம் குரு" என்று அடிக்கடி சொல்வாய்.
உனது மனதில் வளர்ந்த ஆசைகளை நிறைவு செய்ய
முடியவில்லை! மனித வீட்டில் உறவைக் கடந்து வானக
வீட்டில் தெய்வீக உறவில் நிலைத்திருப்பாய்
ஏதோ! எப்படியோ! எங்கோ! வாழ்ந்து
கொண்டிருக்கிறோம். *அம்மா, அப்பா, அண்ணா.*

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 25 10 1925



உதிர்வு 23 06 2011

### திருமதி சந்தியோகு திரேசம்மா பெரேரா

**பள்ளிமுனை கிழக்கு, பள்ளிமுனை**

**"சீவியத்தில் உம்மை நேசித்தோம்**
**மரணத்திலும் உம்மை மறவோம்"**
அன்போடு அள்ளித்தந்து அரவணைத்தீர்கள்.
எம்மை ஆறாத்துயரில் தவிக்கவிட்டு
ஆறுதல் தேடி சென்றுவிட்டீர்களே அம்மா!
வருடம் ஒன்று ஆனதம்மா ஆறவில்லை எம் காயம்
அன்போடு எம்மைக்காத்து, அறிவுரைகள் பல கூறி
பண்போடு எம்மை உம் கண்ணுக்குள் வைத்து
வளர்த்து பாரினிலே உயரவைத்தீர்.
கண்ணீர் நாம் வடிக்க எங்கு அம்மா போய் மறைந்தீர்?
*காலமெல்லாம் உங்கள் நினைவை இதயத்தில் சுமந்து நிற்கும் பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.*
*தகவல்:- சந்தியோகு மேரி டொல றோஸ், பிகிறாடோ (றெசிற்றா)*

## 5ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 16 06 1983



உதிர்வு 16 06 2007

### திரு. நேசராஜா பெரேரா (வசந்தன்)

**நொச்சிக்குளம், உயிலங்குளம்**

இறை பதம் இணைந்து ஐந்தாண்டுகள் உருண்டோடியும்
எம் இதயக் கவலைகள் ஓயவில்லை அண்ணா!
வேதனையிலும் கதை சொல்லி எம்மை மகிழ்வித்தாய்
அண்ணா! உன்னை எப்படி மறப்போம்?
நீ நித்திய வாழ்வில் இன்புற்றிருக்க
நித்தம் இறைவனை வேண்டுகிறோம்!

16.06.2012 திகதி நொச்சிக்குளம் அடைக்கல மாதா ஆலயத்தில் காலை இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது.

***உம் பிரிவால் துயருறும்:-***
***அம்மா, அப்பா, அண்ணா, அண்ணி, அக்கா, அத்தான், தம்பிமார், தங்கை.***

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 10 01 1930



உதிர்வு 13 06 2011

### திரு. பேதிரு வேதநாயகம்

**சூரியகட்டைக்காடு. நானாட்டான்.**

இவ்வுலக வாழ்வை முடித்து
இறை சன்னிதானம் நோக்கி
பயணித்து வருடமும் ஒன்றாகிவிட்டது.
எங்கள் அப்பப்பா
இறைவனின் பாதத்தருகில்
அமர்ந்திருக்க நாளும் பொழுதும்
இறைவனிடம் வேண்டுகின்றோம்.
***உம் பிரிவால் துயருறும் :-***
***மகன், மருமக்கள், பேரப்பிள்ளைகள், தியூஜன், திஷி, சுபின்.***
***தகவல்:- டோமினிக் துரை***

## மன்னார் ஆயர் ..... 3ஆம் பக்கத் தொடர்

அவ்விடத்தில் வழிபாட்டு ஸ்தலம் அமைய வேண்டுமானால் அதற்கு சட்டரீதியான சில வரையறைகள் உள்ளன. அதைவிட அம்மதத்தை சார்ந்த மக்கள் அவ்விடத்தில் வசிக்க வேண்டும். எந்தவித அடிப்படையும் இல்லாமல் விகாரை அமைத்தல் முயற்சியை திட்டமிட்ட ஆக்கிரமிப்பாகவே நாம் கருதுகின்றோம். அதன் அடிப்படையிலும், மக்கள் எம்மிடம் முறையிட்டதன் பேரிலும் இச்செயற்பாட்டை கண்டிக்கும்படியான தீர்மானத்தை இச்சபையின் முன்வைக்கின்றேன். நான் கொண்டுவந்த இரண்டு தீர்மானங்களையும் நிறைவேற்றும்படி இச்சபையை வேண்டிநிற்கின்றேன் என்றார். இந்த இரண்டு தீர்மானங்களும் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

## சர்வதேசப் போட்டியில் ... 1ஆம் பக்கத் தொடர்

இவர்களில் ஜுட் பிகிறாடோ அவர்கள் மன்னார் கோட்டக்கல்வி அதிகாரியாகவும், ஞானராஜ் அவர்கள் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி விளையாட்டுப் பொறுப்பாசிரியராகவும் பணிபுரிகின்றார்கள்.

அத்துடன் இவர்கள் இருவரும் 2002ம் ஆண்டு நடைபெற்ற இவ்வாறான சர்வதேச போட்டியிலும் மத்தியஸ்தம் வகித்துள்ளனர். இவர்கள் இருவரும் சர்வதேச தரத்திலான மத்தியஸ்தர்களுக்கான பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## பாப்பரசர் தினம் ...

4ஆம் பக்கத் தொடர்ச்சி

மும்முறை இப்பதிலை பெற்றுக்கொண்டதன்பின் இயேசு தம்மை அன்பு செய்யும் பேதுரு மற்றும் அவரது இடத்தைப் பெறுபவர்களுக்குக் கூறியது: "என் ஆடுகளை மேய்" "என் ஆடுகளை பேணி வளர்" என்பனவாகும் (யோவான் 21:16,17). இந்தக் கட்டளையுடனேயே கிறிஸ்துவின் திருச்சபையை பாதுகாத்தல், கட்டியெழுப்புதல் மற்றும் மக்களை இறையரசை நோக்கி இட்டுச் செல்லுதல் என்பன கத்தோலிக்க திருச்சபையின் தலைவர்களான திருத்தந்தையர்களுக்கு வழங்கப்பட்ட பொறுப்புக்களாகும். இன்று எம் திருத்தந்தை 16ம் ஆசீர்வாதப்பருக்கும் அப்பொறுப்பே வழங்கப்பட்டுள்ளது. அவர் எமது ஆயன், நாம் அவரது மந்தைகள்.

சென்ம பாவத்தினால் பலவீனமடைந்த நம் ஒவ்வொருவரைப் போலவே பேதுருவும் பலவீனங்கள் நிறைந்தவர் என்பதை நற்செய்திகள் குறிப்பிடுகின்றன. எனினும் இயேசு ஆண்டவர் எமக்கு வலுவூட்டி தாம் விரும்புகிறவர்களை தேர்ந்தெடுத்து அவர்களை முக்கியமான வெவ்வேறு பணிகளுக்கு நியமிக்கின்றார் என்பதற்கு புனித பேதுரு சிறந்ததோர் உதாரணமாவார். பலவீனனாக இருந்தபோதும் பேதுருவுக்கு இயேசு கூறியது யாதெனில் "உன் பெயர் பேதுரு: இந்தப் பாறையின்மேல் என் திருச்சபையைக் கட்டுவேன். பாதாளத்தின் வாயில்கள் அதன்மேல் வெற்றி கொள்ளா. விண்ணரசின் திறவுகோல்களை நான் உன்னிடம் தருவேன்...." என்பதாகும் (மத்தேயு 16:18-19). நம் குருவைத் தெரியாது என்று மறுதலித்து, அத்தவறுக்காக மனம் வருந்திய பேதுருவுக்கும் அவரைப் போலவே பலவீனர்களாகிய ஏனைய சீடர்களுக்கும் இயேசு கூறியதாவது: "விண்ணுலகிலும் மண்ணுலகிலும் அனைத்து அதிகாரமும் எனக்கு அருளப்பட்டிருக்கிறது. எனவே நீங்கள் போய் எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள்.... இதோ! உலக முடிவுவரை எந்நாளும் நான் உங்களுடன் இருக்கிறேன்" (மத்தேயு 28:18-20).

பலவீன மனிதர்களை எப்போதும் வலிமையுள்ளவர்களாக மாற்றுபவர் கிறிஸ்துவாகும். அவர் இல்லாமல் எம்மால் எதையும் செய்ய இயலாது. அவரோடு இணைந்திருந்தால் எம்மால் அனைத்தையும் செய்ய இயலும். இவ்விடத்தில் நாம் இன்னொரு நிகழ்வையும் நினைவூட்டிக்கொள்வோம். ஒருமுறை இயேசு பேதுருவுக்கு "சீமோனே, சீமோனே, இதோ கோதுமையைப் போல் உன்னைப் புடைக்க சாத்தான் அனுமதி கேட்டிருக்கிறான். ஆனால் நான் உனது நம்பிக்கை தளராதிருக்க உனக்காக மன்றாடினேன். நீ மனந்திரும்பியபின் உன் சகோதரர்களை உறுதிப்படுத்து" என்றார் (லூக்கா 22:31-32).

புனித. பேதுருவாகட்டும் அல்லது அவரிடத்தை தொடர்ந்த பாப்பரசர்களாய் இருக்கட்டும் ஆண்டவர் இயேசு அனைவருக்கும் ஒரே பொறுப்பையும் கடமையையும் கொடுத்தார், அத்தோடிணைத்து தன் வல்லமையையும் பாதுகாப்பையும் அளித்துள்ளார் என்பதே உண்மை. ஆகவே, எம் அன்பையும் மதிப்பையும் இன்று எம் திருச்சபையை வழிநடத்தும் எம் திருத்தந்தை 16ம் ஆசீர்வாதப்பரின்பால் வெளிப்படுத்துவோம். அவரில் கிறீஸ்துவை காண முனைவோம். அவரின் கட்டளைகளை கடைப்பிடித்து அவர் வழிகாட்டலில் பயணிப்போம். கிறிஸ்து எவ்வாறு பேதுருவுக்காக செபித்தாரோ அவ்வாறே நாமும் நம் திருத்தந்தைக்காக தினமும் மன்றாடுவோம்.

## தாயக மக்களின் மதச்சுதந்திரத்தை .....

1ஆம் பக்கத் தொடர்ச்சி

வட அமெரிக்காவின் இந்த பெருந்தேவாலயம் தவிர்ந்த Ganesha Temple, - New York, Lutheran Church - New York/ Bharatiya Hindu Temple, 3671 Hyatts Rd, Powell, Ohio ஆகிய வழிபாட்டுத் தளங்களிலும் பிரார்த்தனை ஒன்றுகூடல்கள் இடம்பெறுகின்றன.

இதேவேளை பிரான்சில் 124 Bis, Ruede Bagnolet, 75020 Paris என்ற இடத்தில் அமைந்துள்ள தேவாலயத்திலும் மற்றும் ஜேர்மனியில் புனித அந்தோனியார் முன்ஸ்ரர் தேவாலயத்திலும் என உலகின் பல்வேறு பாகங்களிலும் தமிழர்களின் நீதிக்கான வேண்டுதல் பிரார்த்தனைகள் இடம்பெறுகின்றன.

நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் ஏற்பாட்டில் மூன்று நாட்களாக உலகத் தமிழர் தேசங்களெங்கும் இப்பிரார்த்தனை வழிபாட்டு நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றமை இங்கு குறிப்பிடதக்கது.

## எழுத்தூர் பங்கில் ....

5ஆம் பக்கத் தொடர்ச்சி

31-05-2012 வியாழன் சோர்வுற்ற அன்பியங்களை இனங்கண்டு, அவர்களைச் சந்தித்து, இல்ல வழிபாடு செய்யப்பட்டது.

01-06-2012 வெள்ளி, திருப்பலி, அன்பிய வழிபாடுகள், ஆலயப்பணியில் ஈடுபாடு இல்லாமல் இருப்பவர்களை, சந்தித்து அவர்களுக்கு ஊக்கமளிக்கப்பட்டது.

02-06-2012 சனி, பங்கின் அனைத்து மறைக்கல்வி மாணவரும் உள்வாங்கப்பட்டு "மறைவாழ்வும் மறைக்கல்வியும்" எனும் பொருளிலே அன்பிய ஆணைக்குழு மத்தியகுழு உறுப்பினர்களால் கருத்தமர்வும், ஏழு படிமுறை நற்செய்திப்பகிர்வுப் பயிற்சியும் வழங்கப்பட்டது. 10 பேர் கொண்ட 8 சிறுவர் தோழமைக் குழுக்கள் உருவாக்கப்பட்டு, அவற்றிற்கு புனிதர்களின் பெயர்கள் சூட்டப்பட்டு, உடனடியாக செயற்பட பங்குத்தந்தை நடவடிக்கை எடுத்தார்.

03-06-2012 அன்பிய தினமான அன்று, மூவொரு இறைவன் பெருவிழாத் திருப்பலி அன்பிய இணைப்பாளர்களினால் சிறப்பிக்கப்பட்டது. அர்ப்பணச் செபம் அறிக்கையிடப்பட்டது. பி. ப 3.30 மணியளவில் பங்கின் எல்லா இணைப்பாளர்களும் எழுத்தூர் பங்குமனையில் பங்குத்தந்தையின் முன்னிலையில் ஒன்றுகூடினர். ஏழுபடி நற்செய்திப் பகிர்வும் "தாழ்ச்சி நிறைந்த பணிவாழ்விற்கு தேவையான பண்புகள்" எனும் தலைப்பில் பங்குத்தந்தை அவர்களால் பணியாளர்களுக்கு தகுந்த அறிவுரையும் வழங்கப்பட்டது.

அன்பிய எழுச்சி வாரத்திலே திட்டமிடப்பட்ட பணிகள் யாவும் செயற்படுத்தபட்டதா? என பங்குத்தந்தை மீளாய்வு செய்தார். சோர்வுற்ற நிலையை அன்பியங்கள் கடந்து செல்லவேண்டுமானால், பணியாளர்கள் அர்ப்பணத்தோடும் பணியார்வத்தோடும் தாழ்ச்சியோடும் பணிசெய்ய வேண்டும் எனக் கூறி அன்பியப்பகிர்வு (சிற்றுண்டி) இடம்பெற்றது. இங்கே சிறப்பாக ஜீவபுரம் அன்பியப் பணியாளர்களும் சகலவிதத்திலும் இணைக்கப்பட்டு செயற்பட்டது மகிழ்ச்சிக்குரியதாகும்.

**தகவல் : ஜே. அமுதா**
**அன்பிய செயலாளர், எழுத்தூர் பங்கு, மன்னார்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்காத நினைவுகள்

## 4ம் மற்றும் 10ம் ஆண்டு நினைவஞ்சலிகள்




திரு. டெனிஸ் அந்தோனிப்பிள்ளை
திருமதி. சேபஸ்ரியம்மா அந்தோனிப்பிள்ளை

முருங்கன் பிட்டி, முருங்கன்

மலர்வு 17 - 07 - 1927 மலர்வு 12 - 06 - 1933
உதிர்வு 12 - 06 - 2008 உதிர்வு 30 - 04 - 2002

ஆண்டு 10 ஆண்டு 4 சென்றாலும் அம்மா, ஐயா உங்கள் நினைவுகள் எம்மைவிட்டு அகலவில்லை, தாய் தந்தையை இழந்த கன்றுகளாய் தவிக்கின்றோம். அன்பான பாசத்தால் அனைவரையும் அரவணைத்தீர்கள். குடும்பத்தில் குலவிளக்காய் விசுவாசத்தின் வெளிச்சமாய் ஒளிதந்து எங்களை வாழவைத்தீர்கள். ஏனம்மா, ஐயா எங்களை விட்டுப் பிரிந்தீர்கள்? ஒவ்வொரு நொடியும் உங்களுக்காய் ஏங்குகின்றோம். இறை பேரீன்ப வான்வீட்டில் இன்பமாக நீங்கள் இருக்க இறைவனிடம் அனுதினமும் வேண்டுகின்றோம்.

இவர்களின் ஆன்ம சாந்திக்காக கனடா, பரீஸ், கல்முனை, இத்தாலி, முருங்கன் ஆகிய இடங்களில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

*பிரிவால் துயருறும் :- பிள்ளைகள்.*

## 27ம் மற்றும் 6ம் ஆண்டு நினைவஞ்சலிகள்




திரு. மனுவேல்பிள்ளை சேவியர் குமாரசிங்கம்
திருமதி. திரேசம்மா சேவியர் குமாரசிங்கம்

(கங்காணிதீவு, நானாட்டான்.)

மலர்வு 11 - 10 - 1923 மலர்வு 29 - 02 - 1929
உதிர்வு 21 - 05 - 1985 உதிர்வு 06 - 10 - 2006

"வாழ்வு மாறுபடுகின்றதே அன்றி அழிக்கப்படுவதில்லை"

வாசம் குன்றாத வாழ்வு தந்து வழியெங்கும் ஒளி தந்து
தேசம் புகழும் நிலை தந்து தெவிட்டாத நினைவு தந்து
தரணி தனில் புண்ணியப் புதல்வர்களாய்
உயர வழி அமைத்து
அழியாப் பிறப்பினில் ஆவல் கொண்டு ஆண்டவர்
நிழலில் அமரத்துவமாகிவிட்ட எங்கள் பாச
தெய்வங்களே நீங்கள் என்றென்றும் எம்மோடு எம்
இதயத்துள் வாழ்வீர்கள்!

உம் பிரிவால் துயருறும்:-
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்,

## 31ம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 03 06 1930
உதிர்வு 06 05 2012



க. மொத்தம் அன்னபூவதி எதிர்மனசிங்கை
(பெரிய நாவற்குளம்)

அம்மா! நேருக்கு நேர்நின்று பேசிய தெய்வம் நீங்கள்
நாங்கள் நல் வாழ்வு வாழ தியாக தீபமாய்
ஒளிர்ந்தீர்கள். நாங்கள் வளர்ந்துவிட்டோம் என்று
நினைத்தோம். ஆனால் நீங்கள் எப்போதும் எம்மை
குழந்தைகளாகவே உரிமைப் படுத்திக்கொண்டீர்கள்.
உங்களை நாம் எப்படி மறப்போம்?
நீங்கள் எங்களோடு வாழவேண்டும்
அல்லது கடவுளோடு வாழவேண்டும்
என்பதுதான் எங்களது விருப்பமம்மா........!
உங்களுடைய செபமும் எங்களுடைய செபமும்
உங்களைநிச்சயம் விண்ணகத்திற்கு
கொண்டு சேர்க்கும் என்று நம்புகின்றோம்.

உங்கள் பிரிவால் வருந்தும்:- பிள்ளைகள்
தகவல்: மகன் அருட்தந்தை. ம.க. அருள்பிரகாசம்,
118, குருமடவீதி, மன்னார்

## 1ம் ஆண்டு நினைவு

மலர்வு 27 01 1923
உதிர்வு 01 03 2011



திருமதி அல்பிறட் மரியம்மா (ராசமணி)
(மாந்தை, தோமஸ் வீதி, மன்னார்.)

அம்மா என்றோர் அருஞ்சொல்லில் - உன்
ஆயிரம் சொந்தங்களையும் அடக்கியவள் - நீ
எம்மாத்திரம் துயரினையும் உன் நெஞ்சில்
எளிதாக அடக்கி எவரையும் வாழ்த்தியவள் - நீ
சும்மா ஒரு சுடுசொல் சொன்னதில்லை.
சோதனை வந்தபோதும் அமைதியைத் தந்தவள்.
இம்மாநிலத்தில் இருந்து இறைவனடி சேர்ந்தபோதும்
எம் இதயக்கோவிலில் தெய்வமாய் வாழ்பவள் நீ!

உங்கள் பிரிவால் துயருறும்:-
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்

## 1ம் ஆண்டு நினைவு

மலர்வு 25 12 1957
உதிர்வு 02 07 2011



திருமதி அருட்பிரகாசம் பற்றீசியா (கமலா)
(மாந்தை - தோமஸ் வீதி, மன்னார்.)

அன்னையாய் சகோதரியாய் மைத்துணியாய்
அன்பை மட்டுமே விருந்தாக்கிய போதும்
உன்னையேன் இறைவன் எம்மைவிட்டுப் பிரித்தான்
ஒருபோதும் எமக்கிது விளங்கவில்லை.
புன்னைமர நிழல்போல் உன் குளிர் மனமும்
பூங்காற்றிலும் இதமான உன் சொற்களும்
இன்னும் பல காலம் எம்மனதில் நினைவாகும்.
இறந்தும் இறவா நிலையில்
எம்மிடை வாழ்பவள் நீ.

உங்கள் பிரிவால் துயருறும்:-
பாசமிகு மகள் டிலக்ஷனா,சகோதரர்கள்,
மைத்துணர்கள், உற்றார் உறவினர்கள்.

## 6ம் மாத நினைவு

மலர்வு 16 02 1955
உதிர்வு 13 01 2012



திருமதி டெல்னி லோகநாதன்
(அவுஸ்திரேலியா)

செழுமையில் பிறந்து செல்வத்தில் வளர்ந்து
சேர்ந்த இடத்திலும் பெருமை சேர்த்தும்
முழுமதியின் ஒளிபோலும் நல்மனமும்
முதிர்ந்த நெற்கனிபோல் குணமும் பெற்றும்
முழுமைக் காலமும் வாழ்ந்து முடிக்காமலே
மூன்று கோடி மைல்தூரம் சென்றதேனோ
அழுகையில் மூழ்கி நாம் அங்கலாய்க்கின்றோம்.
ஆற்றுவதற்கு ஒருதரம் அருகில் வருவாயா தாயே!

உங்கள் பிரிவால் துயருறும்:-
கணவன் - லோகநாதன், பிள்ளைகள் பங்கிளி,
பிரசன்னா, நிலோ, மருமக்கள் சுஜா, ஜொபிற்றா,
பேரப்பிள்ளை ஷியாரா (அவுஸ்திரேலியா),
மற்றும் உற்றார் உறவினர்கள்.

# உலகத் தமிழ் இலக்கிய மாநாடு – 2012 நிகழ்வுகளின் நிழல்கள்



உலகத் தமிழ் இலக்கிய மாநாடு - 2012 கடந்த யூன் மாதம் 02,03,04 ஆகிய தினங்களில் கொழும்பில் இடம்பெற்றது. தொடக்க விழாவின்போது கொழும்புத் தமிழ்ச் சங்கத் தலைவர் திரு. கதிர்காமநாதன், பேராசிரியர் சபா. ஜெயராசா, பேராசிரியர் நு.்மான், டாக்டர் ஞானசேகரம் ஆகியோர் மேடையில் நிற்பதைக் காணலாம். மாநாட்டின் இரண்டாம் நாள் நிகழ்வில் கலைப்புலவர் நவரெத்தினம் அரங்கில் பல்துறை சார்ந்த ஆய்வரங்கின் இணைத் தலைவர்களாக அருட்திரு. தமிழ் நேசன் அடிகளார், கலாநிதி எம்.எஸ். எம். அனஸ் ஆகியோர் அமர்ந்திருக்கின்றனர். மூன்றாம் நாள் நிகழ்வின்போது 'இயல் இசை வாரிதி வீரமணி' பல்துறை அரங்கில் "இலக்கியத்தின் உள்ளீடாக அமையவேண்டிய மானிட உண்மைகள்" என்ற தலைப்பில் தமிழ் நேசன் அடிகளார் ஆய்வுக்கட்டுரை சமர்ப்பித்து உரையாற்றுகின்றார். பேராளராகக் கலந்துகொண்ட அருட்திரு அன்புராசா (அமதி) அடிகளார் சபையில் அமர்ந்திருக்கின்றார்.

இப்பத்திரிகை மன்னாரில் உள்ள மன்னா அலுவலகத்தில் வடிவமைக்கப்பட்டு மன்னார் பிரதான வீதி 17ம் இலக்கத்திலுள்ள [illegible] – வாழ்வுதயம் அச்சகத்தில் அச்சிடப்பட்டு மன்னா நிர்வாகத்தால் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org